கி
125-1

— மணி 1.

8—2—'35.

மணி மாலை.



உயர் பதிப்பாளர்:

கா. சுப்பிரமணிய பிள்ளை,
M. A., M. L.

KMM0743

1382
இ/125-1

சந்தா விபரம்.

வருட சந்தா ரூ. 5.

வருட சந்தாதார் சந்தாவை முன் பணமாக திருநெல்வேலி, வடக்குரதவீதி, மணிவாசக மன்றம் தலைவர், கா. சுப்பிரமணிய பிள்ளை M. A. M. L. அவர்களுக்கு அனுப்பும்படி வேண்டப்படுகிறார்கள்.

ஆயுள் சந்தா ரூ. 100.

பாதுகாப்பாளர் தொகை ரூ. 1000.

தனிப்பிரதி விலை அணா 8.

Printed and Published by T. R. Subbiah Pillai at
Sri Meenakshi Press, Tenkasi
for Manivasagamonram, Tinnevelly.

மணிமாலை
பகுதிகளும் பிரிவுகளும்.

பொதுமறை விளக்கம்.

திருவள்ளுவர்.

திருவள்ளுவர் என்பது தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் குறள் வெண்பாக்களினாலியற்றிய பொதுமறை நூலின்பெயராகும். இந்நூலொன்றுதான் தமிழில் ஆசிரியர் பெயராலேயே அமைந்துள்ளது. அகத்தியம், தொல்காப்பியமென்ற நூல்கள் அகத்தியர், தொல்காப்பியர் என்ற பெயரால் குறிக்கப்படுவதில்லை. ஆசிரியர் தொல்காப்பியனார் தமிழிலுள்ள நூல்களை முதனூலெனவும் வழிநூலெனவும் இருவகையாகப்பகுத்து முதல் நூலானது வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவனாலியற்றப்பட்டதென்று ஓதினர். முனைவனென்ற சொல் இறைவனையும், இறைவனருள் பெற்றவனையுங் குறிக்கும் முனைவனாகிய கடவுள் அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கினையும் பற்றிய உண்மைகளை ஆதியில் நான்கு முனிவர்களுக்கு ஓர் ஆலமர நிழலில் அறிவுறுத்தினனென்பது தேவார திருவாசகங்களால் விளங்குகிறது. தொல்காப்பியப் பாயிரத்தில் "நான்மறை முற்றக்கற்ற அதங்கோட்டாசானென்றவிடத்து நான்மறை யென்பது, மேற்குறித்த நான்கு முனிவர்கள் வாயிலாக வெளிவந்த இலக்கியமாதல் கூடும். ஏனெனில் தொல்காப்பிய இலக்கணத்தைக் குற்றமற்றதென்று கூறுதற்குப் பண்டைத் தமிழ் நான்

மறைகற்ற அசானே தகுதியுடையனுதலானும், நான்கு உறுதிப்பொருள்களின் சார்பாகவே தொல்காப்பியப் பொருளதிகாரம் அமைந்திருத்தலானும் என்க. அந்நான்மறைக்கருத்துக்கள் நின்று நிலவவும் அவற்றை யுணர்த்தும் நூல்கள் மறைந்தகாலத்து ஆசிரியர் திருவள்ளுவனார், அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கினையும் கூறுந் தமது நூலை உலகப் பொதுமறையாக இயற்றியருளினர். திருவள்ளுவ நூல் இக்காரணம் பற்றியே பின் மறையென்று பொருள்படும் உத்தர வேதமென்று அழைக்கப்படுகிறது. ஆசிரியர் காலந்தொட்டுத் தமிழர்க்குரிய பொது நூலாய வேதம் திருக்குறள் நூலேயாமென்பது தெளிவு. அது இடைச்சங்க இலக்கணமாகிய தொல்காப்பிய வரம்பின்படியே அமைந்துள்ளது. அதன் காலத்தைத் திட்பமாகத் தீர்மானிப்பது எளிதன்றெனினும், 'யூபம்' முதலிய வட சொற்கள் பயிலும் புறநானூற்றுப்பாடல்களுக்கு அது முற்பட்டதாகும். அப்பாடல் முதுகுடுமிப்பெருவழுதி யென்னும் பாண்டிய மன்னனைக் குறிக்கும். அம்மன்னன் திருமகளே மதுரையில் அரசுபுரிந்தனளாயின், கிரேக்க நாட்டு மகஸ்தனிஸ் முதலியோர் கூறும் பாண்டிய நாட்டிலரசாண்ட கன்னியரசி யென்பாள் அவளேயாயின், கிறிஸ்து பிறப்பதற்கு நாலு நூற்றாண்டுகளுக்கு முன்னேயே புறநானூற்றுட் குறித்த பாட்

டிற்குரிய மன்னன் அரசாண்டிருக்கவேண்டும். அங்ஙனமாயின் அக்காலத்திற்கு முன்பே திருவள்ளுவநூல் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். அது இடைச்சங்க நூலாகவுமிருத்தல் கூடும். அதனுள் நாற்குலம், முக்குணம், மும்மூர்த்தி, பிரமம், ஞானம், அத்துவிதம், வேதம், புத்தம், சமணம் முதலிய வடநூற் சமயச்சொற்கள் யாவும் காணப்படாமையின் அது மிகவும் பழமையான செந்தமிழ் நூலென்பது அறியற்பாற்று.

அது மறையாதலின் சமயக் கருத்துக்களைப் பெரும்பாலும் பொதுச்சொற்களாலேயே தெரியப் படுத்துவதாயிற்று. அதன் பாயிரத்துள் கடவுளையும், அவனது திருவருளுக் குறிகுறியாகிய மழையையும், அவனதுமெய்படியானரையும், அறத்தையும்பற்றித் தன் கருத்தை ஆசிரியர் விளக்குவாராயினர். அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கும் அறத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளபடியால், நூல் நுவலுதலும் பொருளை அறமென்ற சொல்லாலே ஆசிரியர் குறித்தனர். அறத்தை இல்லறம், துறவறமென இரண்டாகப்பகுத்துத் துறவறத்துள் வீடுபேற்றிற்குக்காரணமுரைத்தார். வீட்டினியல்பினைக் கடவுள் வாழ்த்துள்ளும், துறவறவியலுள்ளும் இன்பப் பாலினுள்ளும் குறிப்பாக உணர்த்தினர். பொருளை அரசினியல்பைச் சார்த்தியே பல அதிகாரங்களாக

வருத்தோதினர். இன்பத்தைத் தலைவன் தலைவியரைக் காதலொழுக்கத்தினைச் சார்த்தி வெளிப்படையாகவும், வீட்டியல்பினைச் சார்த்திக் குறிப்பாகவும் ஆசிரியர் ஓதிப்போந்தனர். எனவே, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற நூற்பகுதி மூன்றனுள் நால் வகை உறுதிப்பொருளினையும் அறிய வைத்தார். ஆதலால், "அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின், திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்" என ஒரு பெரும்புலவர் இயம்பினர். தமது நூலின் மூன்று பகுதிகளுக்கும் பொதுவாகவே பாயிரத்துள் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என்ற நான்கையும் ஆசிரியர் அமைத்தனர். கடவுளையின்றி உறுதிப்பொருளை அடைவதாற் பயனில்லை. மழையின்றி மாநிலத்தில் வாழ்க்கையில்லை. பெரியர் வழியிற்செல்லாமல் உறுதிப்பொருள் கைவருமாறில்லை அறவொழுக்கமே வாழ்க்கைக்கு நலம் பயப்பதுடன், நீதில்லாத பொருளீட்டுவதற்கும், தக்க இன்பம் பெறுதற்கும் காரணமாதலினாலும், அதன் முடிந்த பகுதியே வீட்டுநெறியாதலாலும், அறன் வலியுறுத்தல் ஏனைய மூன்றும்போல நூல் முழுவதற்கும் பொதுவாதல் காண்க. முதற்கண் பாயிர அதிகாரங்களை ஆராய்வாம்.

கடவுள் வாழ்த்து என்பது கடவுளை வாயினால் வாழ்த்துதலென்ற நேர் பொருளையுடையதாயினும், மனத்தால் நினைந்தே சொல்லைச் சொல்ல வேண்டியிருத்தலின், கடவுளை நினைத்தலும், வாழ்த்தின் பயன் வணக்கமாதலின், மெய்யினால் இறைவனை வணங்குதலும், கடவுள் வாழ்த்து என்னுஞ் சொற்றொடர் குறித்தல் காண்க. ஆசிரியர் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்துள், கடவுள் உண்மையையும் அவனை வழிபடுதலின் இன்றியமையாமையையும் ஓதியதோடு, கடவுளுக்குக் கூறும் அடைமொழிகளால் கடவுளைத் தாமும் வாழ்த்தினராதலின் கடவுள் வழிபாட்டின் அவசியம், கடவுட்புகழ் கூறல், என்ற இரு பொருளுக்கும் பொதுவாகக் கடவுள் வாழ்த்து என்ற சொற்றொடரை அதிகாரப்பெயராக அவர் வைத்தாரென அறிக. ஒரு கடவுளையும் விதந்தோதாமையானும், கடவுளது தனித்தன்மையுணர்த்தும் எண் குணங்களையே கடவுள் வாழ்த்துள் விதந்தனராதலானும், உலக முதல்வனைய முழுமுதலையே திருவள்ளுவனார் தமது நூலின் முதலதிகாரத்துள் கூறினரென்பது உணரற்பாற்று. கடவுள் வாழ்த்தின் முதற்பாட்டு வருமாறு:—

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

உரைநடை:— எழுத்து எல்லாம் அகரம் முதல, உலகு ஆதிபகவன் முதற்றே.

உரை:— எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன. உயிருடையவும், உயிரில்லனவுமாகிய உலகம் ஆதியைக் கூறாகவுடையவனை முதலாக உடையது. எ-று.

குறிப்பு:— முதற்று - ஒருமை. முதல - பன்மை. ஆதி - ஆ + த் + இ. எல்லாம் ஆவதற்குக் கருவியாகிய ஆற்றல். அது இறைவனின் படைப்பாற்றல். கடவுட்சத்தியென்பதும் அது. ஆ - பகுதி. இ - கருவிப்பொருள் விகுதி. த் - எழுத்துப்பேறு அல்லது பெயரிடைநிலை. ஆதி யென்ற சொல் கடவுளை யுணர்த்துங்கால், இ விகுதி, கருத்தாப்பொருளுணர்த்தும். பகவன் - பகவு + அன் பகவு - பிளவு. கூறு. பாகம். 'குவளைக்கண்ணி கூறன்', உமை பாகன் என்றவிடத்து, ஒற்றுமிகாமை போல, 'ஆதி பகவன்' என்ற விடத்தும் ஒற்றுமிகாமை காண்க. உலகம், உயிர்களைச் சிறப்பாகவும், சட வுலகத்தைப்பொதுவாகவும் குறிக்கும். எழுத்துக்கள் உயிருமெய்யும் என இருவகைப்படுதல் போல, உலகமும் சித்தும், சடமும் என இருவகைப்படும். 'அம்முதல' என்னாது அகரம், முதல என்றமையால், உயிரெழுத்தாகிய 'அ' என்பதும், மூவின மெய்யாகிய க, ர, ம் என்பன

யுங் குறிப்பித்தவாறும். காம் என்பதில், க வல் லினமெய், ர இடையினமெய், ம் மெல்லினமெய், உயிருமெய்யுங்குறிக்கும் அகரம், உயிருமெய்யுமாகிய எழுத்துக்களுக்கெல்லாம் முதலாதல் போல, சத்தி யொடு கூடிய இறைவன், சித்துஞ்சடமுமாகிய உலகத் திற்கு முதலாதல் காண்க.

அகரம் என்பது உயிர்க்கும் மெய்க்கும் வாய்பா டாயினும், 'அ' என்னும் ஒலியே எழுத்துக்களுக் கெல்லாம், முதலாகுமென்பதே தெளிவானகருத்து. வாயைத்திறந்தவுடன் வாயின் பிற பகுதிகள் இயங் குதலின்றி, இயற்கையாக உண்டாகிற ஒலி 'அ' என் பதே. அவ்வொலி ஒவ்வொரு எழுத்திலும் வெளிப் படையாகக் கடக்கவில்லை. அது நெடுங்கணக்கில், முதலாயிருப்பதினாலே அது எழுத்துக்களுக்கு முதல் என்பது இடப்பொருத்தமாகுமேயன்றி, உண்மை யான சிறப்புப்பொருத்தமாகாது. அதற்கும் எழுத் துக்களுக்குமுள்ள சம்பந்தம் ஆயற்பாற்று.

(தொடரும்)

பத்திரிகை ஆராய்ச்சி.

பத்திரிகையாராய்ச்சி.

செய்தித்தாளின் வரலாறு.

ஆதியில் ரோம அரசில் (Roman Empire) போர்ச்செய்திகளைப்பற்றியும் தேறுதல் முடிவுகளைப் பற்றியும், சமய விழாக்களைப்பற்றியும் குடிகளுக்குத் தெரிவிக்கவேண்டியவற்றை அரசாங்கவேலைக்காரர்கள் அறிவிப்புத்தாள்கள் மூலமாகத் தெரிவித்து வந்தனர். அவ்வறிவிப்புத்தாள்கள் வேண்டியவர்களுக்கு வெவ்வேறாகவும் எழுதிக்கொடுக்கப்பட்டன. அவ்வாறே சீன தேசத்திலும் அரசநகராகிய பீக்கிங் என்னுமிடத்திலிருந்து செய்திப்புத்தகங்களும் செய்தி விளம்பரங்களும் கி. பி. ஆறாவது நூற்றாண்டிலேயே வெளியிடப்பட்டு வந்தன. தமிழ் நாட்டிலே வள்ளுவர்கள் மூலமாக அரசியல் செய்திகள் பெரும்பாலும் பறைசாற்றப்பட்டும், சிறுபான்மை ஓலைக்குறிப்புக்கள் மூலமாகவும் வெளியிடப்பெற்றன. மத்திய காலத்திலே ஐரோப்பாவில் வெனிஸ் நகரிலிருந்த அரசினர் (Gazette) கெசட் என்பதை வெளியிட்டனர். கெசட் என்ற பதம் அவர்களே முதலில் வழங்கியதாகும்.

தற்காலச் செய்தித் தாள்கள், அச்சியற்றும் முறை நன்கு ஏற்பட்ட பிறகே உருவெடுத்தன. கி.பி. 1615-வது ஆண்டில் ஜர்மனியில் ஒரு வாரப்பத்திரிகை ஒழுங்காகத் தொடங்கப்பெற்றது. அதற்கு முன் பல இடங்களிலும் செய்திகளையறிந்த சிலர் அவர்களுக்கு வசதிப்பட்டபோது செய்தித்தாள்களை வெளியிட்டுக்கொண்டிருந்தனர். அத்தகையோர் ஜர்மனியில் 1610 ல் சுமார் என்னூறு பேரிருந்தனர். 1622-ல் வாரப்பத்திரிகையொன்று (Weekly News) லண்டனில் தொடங்கப்பெற்றது. 1665-ல் (Oxford Gazette) என்பது முதலில் வெளியிடப்பெற்றது. அதுவே லண்டன் கெசட்டுக்கு மூலம். பதினெட்டாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் (Spectator) முதலிய ஆங்கிலப்பத்திரிகைகளில் (Addison) அடிசன், (Steele) ஸ்டீல், (Swift) சுவிப்ட். (Defoe) டிபோ முதலியோர்கள் தலையங்கமென்பதைச்சிறப்பாக நன்கு எழுதலாயினர். கி. பி. 1702-ல் ருஷிய அரசினர் தங்கள் தலை நகரின் பேரால் ஒரு கெசட் (The Gazette of St. Petersberg) வெளியிடலாயினர்.

கி. பி. 1704-ல் பாஸ்டன் (Boston News letters) செய்திக்கடிதமென்பது அமெரிக்காவில் முதன்முதல் வெளியிடப்பட்ட செய்தித்தாளாகும். பிரான்சிலும்

ஜர்மனியிலும் (French Revolution) என்னும் அரசியல் பெருங்குழப்பத்திற்குப்பின்தான் ஒழுங்கான பத்திரிகைகள் வெளி வந்தன. (Morning Post) என்னும் ஆங்கிலப்பத்திரிகை கி. பி. 1772-ல் தொடங்கி விரிவுற்றது. வேடிக்கை விநோதங்களை மிகுதியாக வெளியிடும் (Punch) என்னும் ஆங்கிலப் பத்திரிகை 1840ல் ஏற்பட்டது. உருவப் படங்கள் மிகுந்த (Illustrated London News) என்பது 1842ல் வெளியிடப்பெற்றது. (Tit-Bits) என்னும் வாரப்பத்திரிகை 1881ல் வெளியிடப்பெற்றது. 1882ல் (Indian Daily Mirror) என்னும் பத்திரிகை வெளிவந்தது.

பத்திரிகைகளுக்குப் போர்ச்செய்திகளை எழுதும் வழக்கம் 1807—1809 கி. பி. யில் லண்டன் டைம்ஸ் என்னும் பத்திரிகைக்கு ஸ்பெயினிலிருந்து Robinson என்னுமொருவர் சண்டைச் செய்தியை எழுதத் தொடங்கிய காலத்திலேற்பட்டது. பத்திரிகைகளுக்குப் பல இடங்களிலுமிருந்து செய்திகளைச் சேர்த்தனுப்புந் தொழிலானது 1849ல் (Julius Reuter) ரூட்டர் என்னும் பிரஷிய அரசாங்கத்தூதுவரொருவரால் பாரிஸ் நகரத்தில் தொடங்கப்பெற்றது. ரூட்டர் ஐரோப்பாக்கண்டத்தில் பல இடங்களில் கிளை நிலையங்கள் ஏற்படுத்தித் தந்திமூலமாகப் பல இடங்களிலு

லிருந்து செய்திகளை விரைவிற்சேகரித்துச் செய்தித் தாள்களுக்கு அவற்றை யனுப்பிவந்தார். முதலில் லண்டன் டைம்ஸ் அவருடைய உதவியை ஏற்றுக் கொள்ளவில்லை. Morning Advertiser என்ற பேப்பர் அதனை ஏற்றது. நாளடைவில் அவருடைய தொழி லானது விருத்தியடைந்து அவருக்கு ஆண்டிற்கு 25000 பவுன் லாபம் கொடுத்தது. 1865-ல் அளவுப் பொறுப்புச்சங்கமொன்றிற்கு (Limited Company) Reuter தனது வேலையை ஏற்பித்தனர்.

அமெரிக்காவில் இத்தகைய வேலையை (New York Associated Press) என்னும் நிலயமானது மேற்கொண்டது. பொருளாதாரம், விளையாட்டு முத லிய எல்லாவகையான செய்திகளும் அந்நிலையத் தாராற்சேகரிக்கப்பட்டன. அத்தகையநிலயங்கள் பிற் காலத்தில் இந்தியா முதலிய தேசங்களிலுமேற்பட் டன. அமெரிக்காவிலேதான் செய்தித்தாள்த்தொழி லானது ஏராளமாக விருத்தியாகியிருக்கிறது. ஒரு நூற்றாண்டிற்கு முன் உலகத்திலுள்ள பத்திரிகைகள் நாலாயிரமானால் இப்பொழுது சுமார் 94000 பத்தி ரிகைகளுள்ளன. பத்திரிகையில் எழுதும் வேலை ஒரு புறமிருப்ப பல உபாயங்களினால் அவற்றைப்பரப் புஞ்செயல் ஒரு பெரிய வித்தையாக வளர்ந்துவிட் டது. செய்தித் தாள்களும் பல்வேறு பகுப்புக்க

ருடையனவாயின. அவை யாவன: விளம்பரம், தலையங்கம், பத்திராதிபருக்குக் கடிதங்கள், பெரியோரது உரையாடற்கருத்துக்கள் (Interviews) பல்வகை நாட்டுச் செய்திகள், பல் வகை இலக்கியக்கட்டுரைகள், விநோதப்படங்கள், அரசியலாராய்ச்சிகள், கண்டனங்கள், போட்டிப்பந்தயங்கள் முதலியன. பத்திரிகைகளும் நாள்தாள், வாரத்தாள், வாரமுத்தாள், இருதாள், பக்கத்தாள், திங்கள் தாள், முத்திங்கள் தாள் என வெளியிடுங்காலவகையால் பலதிறப்பட்டுள்ளன. சமயம், மொழி, அறிவியல், கைத்தொழில், குலச்சீர் திருத்தம், சமுதாயச் சீர்திருத்தம், கவின்கலை, மெய்க்கலை, அரசியல், கலாசாலையொற்றுமை, விகடம் முதலிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வெவ்வேறு தனித்தனிப்பத்திரிகைகள் தோன்றியுள்ளன. நூல்களும் பத்திரிகைகள் வாயிலாகவே வெளிவருவனவாயின. பத்திரிகையுலகமே பொது நன் மக்களின் கலைப்பயிற்சிக்கூடமாக இலங்குகிறது.

இப் பத்திரிகையின் இப் பகுதியில் சமயம், மொழி, சமுதாயம், அரசியல், இயற்கையுலகம், பல்கலை முதலியவற்றைப்பற்றிய செய்திகளுள் முக்கியமானவை ஆராய்ச்சிக்குறிப்புடன் வெளியிடப்படும்.

ஆனந்தரெங்க பிள்ளையென்பவர் புதுச்சேரியில் துபாஷாக இருந்தவர். 1709-ல் சென்னையில் பிரம்

பூரிற்பிறந்தவர். 1736 முதல் 1761-வரை நாள் குறிப்பு எழுதிவைத்திருக்கிறார். அதில் அரசியல், வணிகம் முதலியவற்றைப்பற்றிக்குறிப்புகள் விரிவாக வரையப்பட்டுள்ளன.

சமயச்செய்திகள்.

சென்ற டிசம்பர் 23, 24, 25ல் நடுநாட்டில் திருவதிகை வீரட்டானம் என்னுந்திருப்பதியில் சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டு முடிவுப்பெருங்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. அது திருப்பாதிரிப்புலியூர் திருவுடையடிகள் ஞானியார் சுவாமிகளால் முதலில் திறக்கவும் இறுதியில் வாழ்த்தவும் பெற்றது. அது அக்கூட்டத்திற்குப் புதுவதாக அமைந்தது. அக்கூட்டத்திற்குத்தலைவர் திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்கள். அத்தலைவரின் அருமைப்பேருரை அச்சிடப்பட்டுள்ளது. அவர்கள் கூறியவற்றுள் சித்தாந்தமென்பது பண்டையறிஞர்களாகிய சித்தர்களின் மெய்ந்நூல் முடிவென்பதும், அது ஆதியில் எங்கும் பரவியிருந்ததென்பதும், திருமூலரும் சமயகுரவர் நால்வரும் சைவப்பெருஞ் சித்தராவர் என்பதும், அவர்கள் சிவபெருமானைச் சித்தரென்றசொல்லாற் குறிப்பித்தனரென்பதும், திருவருள்பெற்ற சித்தர் தமது செவிக்குப்புலனாகும் அருள் நாத ஒலிவாயி

லாகத் தாமுணரும் அரிய உண்மைகளை பலமொழி களிலும் மக்கள் உய்வதற்கு ஏதுவாக இயம்பிய நூல் களை வேதமாமென்பதும் அறியற்பாலன.

சைவ மங்கையர் மகாநாடும், சைவ இளைஞர் மகாநாடும் 24—12—34ல் நடைபெற்றன. மகா சமாஜப்பெருங்கூட்டங்கள் நடைபெறுவதற்கு முக்கிய உதவி புரிந்தவர் சைவ இளைஞர் குழாத்துள் இரு வகைச்செல்வமும் படைத்துத் தாய்மொழிப்பற்றி லும் கடவுள் அன்பிலும் தலை சிறந்த தென்னாற்காடு ஜில்லா கீழ மருதூர் திருவாளர் I. K. நாராயணசாமி நாயுடு அவர்களென்று தெரிகிறது. அடுத்த ஆண்டுப் பெருங்கூட்டம் திருவண்ணாமலையில் நடைபெறும்.

பேரவைக் கூட்டங்கள் நடத்துவோர் உற்று நோக்கிச் செய்யவேண்டிய சில ஏற்பாடுகளுள. அவை நடக்கும் இடத்திற்கருகிலுள்ள புகைத் தேர் நிலையத் தில் (Railway Station) சில பணியாளர் சபைப் பெயரெழுதிய அடையாளத்தை வெளிப்படையாகத் தரித்துக்கொண்டு புகைவண்டி வரும் நேரங்களில் அவைக்கு வருகின்றவர்களை வரவேற்கச் சித்தமாய் நிற்கவேண்டும். அவைக்கு வருகிறவர்கள் புகைவண்டி யினின்று இறங்கியவுடன் பணியாளர் உதவியை விரும்பினால் அடையாளத்தால் அவர்களைத்தெரிந்து அவர்கள் உதவியைக்கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்

டும். அவைத்தலைவர், சொற்பொழிவாளர் முதலி யோர்களைச் சிறப்பாகப் பணியாளர் வரவேற்று அவர் களுக்கென அமைத்திருக்கும் வீடுகளிலோ விடுதி களிலோ தங்கும்படி செய்யவேண்டும். விடாய் நீக் குதற்குரிய வெந்நீர் தண்ணீர் முதலியனவும்; உண்டி சிற்றுண்டி முதலியனவும்; கட்டில், படுக்கை, விசிறி முதலியனவும் அவ்வவர்களுக்கு வேண்டும்போது உதவுதற்குச்சில பணியாளர்கள் அவர்கள் தங்கு மிடங்களில் எப்போதும் ஊக்கத்துடன் நிற்கவேண் டும். அவர்களுடம்பிற்கு வசதிக்குறை ஏற்பட்டால் எளிதாக அவர்களுக்கு மருத்துவ உதவி செய்வதற் கும் ஏற்பாடு செய்யவேண்டும். அவை நின்று திரும்பி ஊருக்குப் போகுங்கால் உரிய நேரத்தில் அவர்களுக்கு முழுக்கு, உணவு, செலவு முதலியவற்றிற்குரிய வசதி களைக்கருதிச்செய்வதற்கு அவை கூட்டினவர்கள் சித் தமாயிருத்தல் வேண்டும். அவைக்கு வரும் கேட் போர் கூட்டத்திற்கும் சுருங்கிய செலவிலாவது இல வசமாகவாவது தங்குமிடம், உணவு, வசதி, முழுக்கு, அவசிய கருமம். என்பவற்றிற்குரிய தக்க ஏற்பாடு களும்; அவ்வேற்பாடுகளை அவர்களுக்கு முறையாக உணர்த்துவதற்குரிய ஆட்களும் எப்போதும் தயா ராக இருக்கவேண்டும். ஆட்கள் சோர்வடையாமைப் பொருட்டு மாற்றாட்களிருக்கவேண்டும். ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு பணியாளர் வகுப்பு அமைக்

கப்பட வேண்டும். வருகின்றவர்களை வரவேற்கும் பணியாளர் வேருகவும், தங்குமிடங்களில் வசதிசெய் வோர் வேருகவும் இருத்தல் வேண்டும்.

உணவுச்சாலைகளில் உடம்பிற்கொத்த சுகாதார முறைப்படி உணவுவகைகள் சமைக்கப்படவேண்டும். உணவுவகைகளைப் படைக்குங்காலத்து ஒவ்வொன் றினை ஒவ்வொருவரே பொறுப்பாக எடுத்துப்படைத் தல் வேண்டும். கூட்டத்திற்குத்தக்கபடி பணியாளர் மிகுதியாக இருத்தல் வேண்டும். பணியாளர் குறை வாயிருந்தால் பந்திகள் ஒன்றின்பின்னென்ருக நடை பெறவேண்டும். தண்ணீர் கொடுக்கின்றவன் தண் ணீரே கொடுக்கவேண்டும். வெந்நீர் கொடுக்கின்ற வன் வெந்நீரே கொடுக்கவேண்டும். பந்திகளை மேற் பார்ப்போர் ஒன்று செய்கின்றவனை மற்ருென்று செய் யும்படி வற்புறுத்தாது அவ்வவனுக்குரிய பணியையே அவ்வவனைச் செய்யும்படி ஏவவேண்டும். மேற் பார்ப் போர் தக்கவர்களாகவும், அவசியமேற்பட்ட விடத்து எல்லாத்தொழில்களும் செய்யக்கூசாதவர்களாகவும் நியமிக்கப்படவேண்டும். மேற்பார்ப்பவருடைய ஊக் கத்தைத் தடைப்படுத்தாத தக்க உக்கிராணக்காரர் களைப் பொருள்களைப் பாதுகாக்கும்படி நியமித்தல் வேண்டும்.

போசனைவகள் நடக்குமிடத்தே உணவுச்சாலைக்கு உண்ணச்செல்கின்றவர்களும், சமையல்செய்வோரும்,

பிற பணியாளரும் தங்களுடம்பையும் உடையையும் புனிதமாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும். இனிய சொல்லும், பணிந்த நடையும், அளவளாவுங்குணமும், குற்றம் பொறுக்குந் தன்மையும் உடையவர்களாயிருத்தல் வேண்டும். பிற பின்.

மேற்குறித்த திட்ப நுட்பங்களையெல்லாம் கவனித்து சபைகளை நடத்துவதில் தலை சிறந்த சாத்தூர் திருவாளர் நடேசய்யரவர்கள் வரவேற்புத் தலைமை வகித்து நடத்தும் திருவள்ளுவர் கழகத்தின் ஆண்டு விழாவானது 31-12-34-லும், 1-1-35-லும் செவ்வையாக நடைபெற்றது. இச்சபையின் சிறந்த பணி யாதெனில், பேரவை நடக்கும் ஒவ்வொருநாட் காலையிலும் தமிழ் வேதப்பாட்டுக்கச்சேரி நடத்துவதேயாகும். இங்ஙனமே மற்ற அவைகளிலும் நடைபெறுதல் நலம். இச்சபையில் தலைமைபூண்டு விளங்கிய மதுரைத் தமிழ்ச்சங்கம் அமைச்சர், அட்வகேட், திருவாளர் கிருஷ்ணசுவாமி அய்யங்காரவர்கள் தமிழின் தொன்மையும் மேன்மையையும் பற்றி அரிய ஆராய்ச்சியுடன் கூடிய பேருரை நிகழ்த்தினர்.

சென்ற டிசம்பர்மீ 29உ ஒன்பதாவது ஸ்ரீவைஷ்ணவ மகாநாடு, சென்னையில், ஆழ்வார் செட்டி ராமாநுஜக்கூட்டமென்னுமிடத்தில், தஞ்சாவூர் ஜில்லா போர்டுமெம்பர், திருவாளர் நாராயணசாமிரெட்டியார்

தலைமையின் கீழ்க் கூடி நடைபெற்றது. இராமாநுஜர் கொள்கைகளைப்பரப்புவதைப்பற்றியும், ஒவ்வொரு ஜில்லாவிலும் கிளைச்சங்கம் அமைப்பதைப் பற்றியும், பள்ளிக்கூடங்கள், பிரசாரகர்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றைப் பற்றியும் தலைவர் விதந்து பேசினர்.

சங்கத்தின் பெண்பாலார் கிளை, திருமிகு கிருஷ்ணவேணியம்மாள் மேற்பார்வையில் இருந்ததாகத்தெரிகிறது. இத்தகைய மகாநாடு வைணவ சமயத்தின் ஆதித்தலைவர்களாகிய நம்மாழ்வார் முதலிய பெரியோர்களின் கொள்கையைச் சிறப்பாக வற்புறுத்தல் வேண்டும். தமிழிலே அவர்கள் கொள்கை எல்லாருக்கும் விளங்கும்படியாக நூல்களும் துண்டுப் பத்திரிகைகளும் வெளியிடுதல் வேண்டும்.

1—1—35ல் தஞ்சாவூரில் திவான்பகதூர் K. S. ராமசாமி சாஸ்திரிகள் தலைமையிற்கூடிய பிராமண மகா நாட்டில் (Tanjore Brahmin Conference), ஒவ்வொரு சமுதாயத்திற்கும் சமய சுய ஆட்சி அரசாங்கத்தார் கொடுத்தாலொழிய சனாதானிகளுக்கு அரசியல் திருத்தங்கள் ஏற்புடைத்தாகாவெனத் தீர்மானிக்கப்பட்டது. சமுதாயச் சுயஆட்சி யென்பதில் ஸ்மிருதி வழி யொழுகும் பிராமணர், ஏனையோரைத் தங்கள் ஆட்சிக்குள் அகப்பட்டவர்களென்று வற்புறுத்

தாமலிருத்தல் நலம். எனெனில், அன்னோர் சமய நெறி, ஏனைச் சைவ வைணவ சமயங்களுக்கு வேறான தென்றறிக. டிசம்பர் 31உ திருப்பதியைச்சார்ந்த திருச்சானூரென்னுமிடத்தில் மத்துவ சமய சபையார் வடமொழித் துவைத கலாசாலையொன்று திறந்தனர். மத்துவாச்சாரியார் கொள்கையைத் தமிழ் மக்களுமறியுமாறு போதித்தற்குரிய ஏற்பாட்டை அச்சபையார் செய்வாராக.

1—1—35ல் ஆமதபாத்தில் அகில இந்திய வர்ணாச்சிரம சுயராஜ்ய சங்கத்தின் ஏழாவது மகாநாடு நடைபெற்றதாகத்தெரிகிறது.

டிசம்பர் 29ல் திருவனந்தபுரத்தைத் தலையிடமாகக்கொண்ட மலையாள நம்பூரி இளைஞர் சங்கத்தின் கூட்டமொன்று அரிப்பாட்டில் கூடியதாகத்தெரிகிறது. அவர்கள் சீர்திருத்த முறையில் சமுதாய வாழ்க்கையும் கல்வி வளர்ச்சியும் நிகழவேண்டுமென்று முயலுதல் பாராட்டத்தக்கது.

சமுதாயச் சீர்திருத்தச் செய்திகள்.

பெண்கள் முன்னேற்றத்திற்காக அகில இந்தியப் பெண்கள் மகாநாடு கராச்சியில் (பம்பாய் மாகாணத்தில்) டிசம்பர் 29உ கூடி ஜனவரிமீ 2உ வரை நடந்ததாகத்தெரிகிறது. அதில் மகமதியப் பெண்களும்

ஐரோப்பியப்பெண்களுங் கலந்துகொண்டனர். அவர்கள் மகாத்மா காந்தியின் கொள்கைகளைத்தழுவி நடப்பதாகத்தெரிகிறது. அரசியல் துறையிலும், சமுதாயச்சீர்திருத்தத்திலும், பொருளீட்டுதலிலும், கல்வி வளர்ச்சியிலும், அவர்கள் சம வுரிமையை நாடுதல் போற்றத்தக்கதே. பழுசிப்பெண்களின் இழிவான குறைகளை நீக்கவேண்டுமென்று செய்த தீர்மானங்களால் அக்குலத்தின் இழிந்த வழக்கங்கள் புலனாயின. இறந்தவனின் மனைவியை அவன் வாரிஸ்கள் கைப்பற்றிக்கொள்ளுதலும், கொலையாளியின் சகோதரிகளையும் புத்திரிகளையும் கொலையுண்டவன் வகையார் அபகரித்துக்கொள்ளுதலும், பிள்ளைகள் கருப்பத்திலிருக்கும்போதே அவைகளைக்கலியாணமுடித்துக்கொள்வதுமாகிய வழக்கங்கள் மனித வர்க்கத்திற்கே இழிவைத்தரத்தக்கன. இப்பெண்கள் மகாநாட்டில், சில பெண்கள் கோஷா முறையைத்தழுவினரென்பது உண்மையானால், அது பிற்போக்கைக் குறிப்பதாகும். இந்தியப் பொதுமொழி இந்துஸ்தானியாக இருக்கவேண்டுமாயின் உலகின் பல பாகங்களிலும் பேச்சு வழக்கிற்குப்பயன்படும் ஆங்கில மொழி அவசியமன்றோ என்னும் கேள்வி எழும். அப்போது தாய்மொழியும், இந்துஸ்தானிமொழியும், ஆங்கிலமொழியும் கற்பது எல்லாருக்கும் எளிதாகாது. ஆதலால் ஆங்கிலத்தைப் பொதுமொழியாக

2593

வும், தாய்மொழிகளை அவ்வவர்க்குரிய தனிமொழிகளாகவும் கொண்டாற் போதாதோ? இந்தியப் பொதுமொழியைக்கைக்கொண்டால் தாய் மொழியைப்புறக்கணித்தல் ஏற்படாதோ? இந்தியாவிலுள்ள எல்லா உள்நாட்டு மொழிகளும் ஒரு தாய் மொழியின் வழி வந்தனவல்லவே. இந்தியாவில் வழங்கும் பழமையான மொழிகளுள், வடமொழி பேசப்படாதிருப்பவுந் தமிழ் மொழி பேசப்பட்டு வருகிறது. வடமொழிச்சொற்கள் பலவும், பல உள்நாட்டுப்பேச்சுக்களிற் கலந்திருந்தாலும், உள்நாட்டு மொழியின் இலக்கண அமைப்பு தமிழியலோடு ஒத்திருக்கிறதென்று அறிஞர் கருதுகின்றனர். இந்தியும் ஆங்கிலமும் கற்றாலும் தமிழ்மக்கள் தமிழ்மொழியை மறவாதிருக்கக்கடவர்கள்.

இவ்வாண்டின் தொடக்கத்தில் புது டில்லியில், மகாத்மா காந்தி அரிஜன சேவக சங்கத்தின் வாயிலாக அரிஜனக் குடியிருப்பொன்று ஏற்படுத்தியிருப்பதாகத்தெரிகிறது. அதற்கு அடிப்படைக் கல் அமைத்தகாலை மகாத்மா காந்தி சொன்னதாவது: இந்து தர்மம் உயிர் வாழவேண்டுமானால் தீண்டாமை சாகவேண்டும். தீண்டாமை நிலைக்கநேர்ந்தால் இந்து தர்மம் ஒழிந்து விடுமென்பதே. இது யாவராலும் நினைவில் வைக்கத்தக்கது.

அரசியல்.

கூட்டுக்குழு அறிக்கையைப்பற்றிய கண்டனங்கள் மிகப்பலவாயினும், டாக்டர் சப்ரூ வெளியிட்டிருக்கும் அபிப்பிராயம் யாவரும் கருதத்தக்கது. இப்பொழுது எதிர் பார்க்கப்படும் அரசியல் சீர்திருத்தங்களால், மூன்றரைக் கோடி ஜனங்களுக்கு வாக்குரிமையும், சட்டசபைகளில் ஆட்பேர் மிகுதியாதலாலும் இரட்டையாட்சியின் ஒழிவும், இந்தியா முழுமைக்கும் பொதுவான அரசியலமைப்பும் கிடைப்பதாலும், கூட்டுக்குழு அறிக்கையை முற்றிலும் புறக்கணிக்கவேண்டியதில்லை.

மைசூர்க்குடிகளின் அரசியல் மகா நாடு ஒன்று ஹாசான் என்னுமிடத்தில் 3-1-35ல் கூடியது. அவர்கள் தீர்மானித்தபடி இந்திய பொது சட்டசபையில், இந்திய அரசுகளின் குடிகளுக்கு பிரதிநிதித்வம் வேண்டுவது அவசியமே. சென்ற டிசம்பர்மீ 30 உ கூடிய ஆந்திர மாகாண மகா நாட்டில், ஆந்திர மக்களுக்கு மாகாண அரசியலமைப்புத் தனியே வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அது கூடாதென்று மாஜி முதன் மந்திரி திவான்பகதூர். முனிசாமி நாயுடு அவர்களும், வேறு சிலரும் 1–1–35 ல் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். கனம் நாயுடு அவர்கள் காலஞ்சென்றது மிகவும் வருந்தத்தக்கதே.

சென்னைச் சட்டசபையிலுள்ள நியாயக்கட்சியில், குடிகள் நன்மைக்காகப் பாடுபடக்கருதும் திவான்பகதூர் முனிசாமி நாயுடு அவர்களும், அவர்களைச்சார்ந்தவர்களும், பயிரிடும் குடிகளுக்கு வேண்டிய உதவியும், குறைந்த வரியும், வண்டிகளுக்கு வழிச்சுங்கமும் (tolls) ஏற்படுத்துவதற்கு ஏனையோர் இணங்குவார்களானல், தாம் அவர்களோடு ஒத்துழைப்பதாகச் சென்ற டிசம்பர் மாசம் 31வ கூடிய கூட்டத்தில் தீர்மானித்திருக்கிறார்கள்.

நன்ருக உற்று நோக்கினல் நியாயக்கட்சியினருக்கும் (ஜஸ்டீஸ் பார்ட்டி), காங்கிரஸ் கட்சியாருக்கும் அரசியல் கொள்கையில் அதிக வேறுபாடு இப்போது இருக்கிறதாகத் தெரியவில்லை. தத்தம் கட்சி மேம்பாடடைய வேண்டுமென்று ஒருவரை யொருவர் குறைகூறுவதாகத்தெரிகிறது. இரு கட்சியும் எல்லா வகுப்பாருக்கும் பொதுவாக இருந்தாலும், ஒன்றில் பிராமணர் ஆதிக்கமும், மற்ருென்றில் பிராமணரல்லாதார் ஆதிக்கமுமிருந்துவருகிறது. ஒன்றில் உட்பிளவுகளும், பிரசாரத்திற்குரிய திட்ட அமைப்பு இன்மையும் காணப்படுகின்றன. மற்ருென்றில் திட்ட அமைப்புகளும், கொள்கை முழக்கங்களும் நன்கு அமைந்துள்ளன. இரு கட்சியினரும் ஒரு பெரியக்கத்தின் இரு பிரிவாக அமைந்து தத்தம்

குறைகளை நிவிர்த்தி செய்ய முயல்வது மிக்க நலம் விளைப்பதாகும். சென்ற டிசம்பர்மீ 30உயன்று கூடிய இந்திய உத்தியோகஸ்தர் சங்கத்தில், மிக்க யாட்சிமை தங்கிய சென்னைப் புதுகவர்னர் அவர்கள் பேசியபோது அரசாங்க உத்தியோகஸ்தர், அரசியல் கட்சிகளில் சாராது அரசாங்கத்திற்கு மட்டுமே உண்மையான பணிவுடன் உழைத்து வருதல் வேண்டும் என்று இயம்பிய அறிவுரையானது மிகவும் போற்றத்தக்கது. ஆனால் உண்மையில் அத்தகைய மனப்பாங்கு சிலருக்கே அமைந்திருத்தல் அனுபவத்தில் காணப்படும்.

மத்திய மாகாண காங்கிரஸ் தலைவராகிய திரு. அபயங்கார் என்பவர் பம்பாயில் 2-1-35ல் இவ்வுலகம் நீத்தது விசனிக்கத்தக்கது.

3-1-35ல் இனங்களைப்பற்றிய புது சட்ட சம்பந்தத்தின் சார்பாக இனும்தார்களின் பிரதிநிதிகள் கனம் கவர்னர் அவர்களைக் கண்டு பேசினர்.

1-1-35ல் சென்னை கோகலே மண்டபத்தில் டாக்டர் அருண்டேல் அவர்கள் தலைமையில் இந்திய சுதேச சங்கமொன்று இந்தியாவிற்குத் தனியாக ஓர் அரசியல் சீர்திருத்த அமைப்பு ஏற்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்டது.

ஜனவரி தொடக்கத்தில் அஸ்ஸாமில் கூடிய போலீஸ் மகா நாட்டில் போலீசார்பொதுமக்களிடத்தில் நட்பும், தயவும் உடையவர்களாகப் பழகுதல் வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. இது வழக்கத்தில் வருதல் யாவருக்கும் திருப்தியளிக்கக் கூடியது.

அந்நிய அரசியல்.

ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும் இடையிலுள்ள சார்புருக்கன் என்னும் சிறு நாடானது 1—1—35ல் நடைபெற்ற தேர்தல் மூலமாக ஜெர்மனியைச்சார்ந்ததே, பிரான்சைச் சார்ந்ததன்று என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கல்விப்பகுதி.

சென்ற டிசம்பர்மீ 28உ யன்று வட ஆற்காடு ஜில்லா சித்தூரிலுள்ள மலையாளத்தார், மலையாளப் பெரும் கவியாகிய எழுத்தச்சன் என்பார் திருநாளைக் கொண்டாடினார்கள். சென்ற டிசம்பர் மாசம் 29உ கூடிய சென்னை சித்த வைத்திய சங்க 4-வது மகா நாட்டில் இந்திய வைத்தியர்களின் நிலைமையையும், வைதியத்தையும் மேம்படுத்துவதற்கு பல தீர்மானங்கள் தீர்மானித்தனர். தற்கால அறிவியல் முறைக்கேற்றபடி தமிழ்ச் சித்த வைத்தியத்தைத் தமிழ்

நாட்டில் தழைத்தோங்கும்படி செய்யுமுயற்சி சிறப்பதாக.

சென்ற டிசம்பர்மீ 29-ம்தேதியன்று சென்னையில் கூடிய சென்னை மாகாணப்பள்ளிக்கூட நிர்வாக போதகாசிரியரின் 4-வது மகா நாட்டில், தொடக்கக் கல்வியை விருத்தி செய்யவேண்டுவதற்குத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சென்னைத் தொடக்கக் கல்விச் சட்டத்தை நிறைவேற்றுமுன் பொது நன் மக்களின் கருத்தினை அரசினர் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், அச்சட்டத்தின்கீழ் ஜில்லாக்கல்விக் கழகத்தின் கட்டளைகளை மாற்றும் அதிகாரம் அரசாங்க வகையினருக்கு இருத்தல் கூடாதென்றும் தீர்மானித்தமை உற்று நோக்கத்தக்கது.

சென்ற டிசம்பர்மீ 27உ அலகபாத்தில் பண்டை நாணய ஆராய்ச்சிக்கழகத்தில் கூடிய வருடக்கூட்டத்தில் திரு. பண்ணலால் என்பவர் பழைய நாணய ஆராய்ச்சியால் புதிதான வரலாற்றுச்செய்திகள் புலனாகின என்றும், அத்தகைய ஆராய்ச்சியால் மூன்றுவது சந்திரகுப்தனைப்பற்றிய புதுச்செய்திகள் வெளியாயிருக்கின்றன என்றும் கூறினார்.

சென்ற டிசம்பர்மீ 31உ சென்னையில் சங்கீத மகாநாடு ஒன்று நடைபெற்றது. பாலகோகிலம் என்ற புது வாத்தியம் ஒன்று ஏற்பட்டிருப்பதாகத்

தெரிகிறது. சங்கிதத்துக்குரிய பாடல்கள் தமிழில் மிகுதியாய்ப் பாடப்படுவது என்பதையும், திருவநந்தபுரம் இசைத்தமிழ்ச் செல்வராகிய திருவாளர் இலக்குமணபிள்ளையவர்கள் இசை வகைகளை அமைத்துப் பாடுதற்கேற்ற பாடல்கள் ஆயிரக்கணக்காக இயற்றியுள்ளார் என்பதையும், சங்கிதப்புலவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

(Indian Science Conference) இந்திய அறிவியல் காங்கிரஸ், கனம் அரசப்பிரதிநிதியால் 2-1-35ல் திறக்கப்பட்டபோது எல்லாவகையான அறிவியலாராய்ச்சிகளுக்கும் அரசாங்கத்தார், பல்வகைக் கழகத்தாரென்னு மிருவகையார் செய்யும் உதவியோடு நாட்டிலேயுள்ள செல்வவான்களுடைய பண உதவியும் அவசியம் வேண்டுமென்று அரசப்பிரதிநிதியார் குறிப்பித்ததமை போற்றத்தக்கது. இந்நாட்டிலே பெருஞ் செல்வம் படைத்தவர்கள் தமிழிலே அறிவுக்கலைகளை விருத்தி செய்வதற்குத் தக்கவாறு உதவுங்காலம் இனித்தான் வரும்போலும்.

வானநூலின் சார்பாகத் தற்காலத்திற் செய்த ஆராய்ச்சியால் சூரியனும், பூமியும், மற்றக் கோள்களும் வில்வடிவான விண்மீன் தொகுதியொன்றைச் சுற்றி வருவதாகவும், பேரண்டம் ஒன்றின் நடுவாகிய அதனைச்சுற்றி வருவதற்கு இருபத்திரண்டு கோடியே

நாற்பது நூறாயிரம் ஆண்டுகளாகுமென்றும், அமெரிக்காவிலுள்ள கானடாவில் சில பாறைகள் நூற்று இருபத்து மூன்று கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டனவென்றும், உலகம் தோன்றி இருநூறு கோடி ஆண்டுகள் தானிருக்குமாதலால் அது கதிரவனோடு போனடநடுவைச் சுற்றி இன்னும் பத்து முறை கூட வலம் வரவில்லை யென்றும், பூமியிலேதான் மக்கள் குடியிருக்கின்றார்களென்றுந் தெரிய வருகிறது.

ரங்கூனுக்கருகாக 3-1-35ல் காலை 8-23 மணிக்கு பூமி அதிர்ச்சி நிகழ்ந்ததாகத்தெரிகிறது. அதற்குட்பட்ட பகுதி 1200 மைல் சுற்றளவுடையதாயிருக்குமென்று கருதப்படுகிறது.

அமெரிக்காவில் மின் சக்தி மாடமொன்று அமைத்து வேண்டும்போது மழையை அதன் மூலமாக வருவிக்கலாமென்று எண்ணி முயற்சி செய்யப்படுகிறது.

3-1-35ல் கல்கத்தாவில் நடந்த அறிவியற்சொற்பொழிவொன்றில், பங்களூர் அறிவியற் போராசிரியர் ஒருவர், இரசவாதம் அறிவு நூல் உண்மைக்குப் பொருத்தமானதென்பதைத் தெளிவாக வற்புறுத்தினார். ஒவ்வொரு நுண்ணிய அணுவிலும் நடுப்பகுதியொன்றிருப்பதாகவும், அதில் மின் சக்தி நிறைந்

திருப்பதாகவும், அதுவே அதன் பழுவுக்கு முக்கிய காரணமென்றும், அந்த நடுப்பகுதியைச் சூழ்ந்து எதிர்மின் சக்தி நிறைந்த அகட்கூட்டம் சுற்றுவதாகவும், அந்த அகட்கூட்டத்தைத் துளைத்து நடுவிலுள்ள மின் சக்திப் பகுதியைத் தாக்கக்கூடுமானால் அணுவின் தன்மை மாறுகின்றதென்றும், தனிப்பொருளெனப்படும் (elements) எல்லாப் பொருள்களும் நடுமின் சத்தும் சுற்று மின்சத்தும் பல்வேறு அளவிற்கலந்தே யுண்டானவை யென்றும், அவற்றின் அளவை மாற்றுவதனாலே ஒரு தனிப்பொருளை மற்றொரு தனிப்பொருளாகத்திரிபு செய்யலாமென்றும் சொற்பொழிவாளர் எடுத்தியம்பினர்.

இயற்கை வியப்பு.

வட ஆற்காடு ஜில்லா திருவெட்டிபுரமென்னுமூரில் ஒரு பெண்ணுக்கு மூன்று குழந்தைகள் ஒன்று பெண்ணும், இரண்டு ஆண்களுமாக ஒரே காலத்தில் பிறந்தனவெனக்கேட்கப்படுகிறது.

ருஷியாவில் ஒரு இடத்தில் ஒரு பெண்ணுக்கு இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களுமாக நான்கு குழந்தைகள் ஒரே காலத்தில் பிறந்தனவென்ற வதந்தியுமுண்டு.

அமெரிக்காவில் யோஸ்மைட் நேசனல் என்னு மரம் 3800 வயதுடையதாயிருக்கிறதென்று தெரிகிறது.

வியப்புப் பசுக்கள்.

கடற் பசு என்ற கடல்வாழ் பிராணி தென் ஆப்ரிக்கா கடற்கரையில் காணப்படுகின்றது. அது கரையில் வந்து தழை, செடி முதலியவற்றைத் தின்று விட்டு பிடிக்க முயலுங்கால் கைக்கு அகப்படாமல் கடலுக்குள் ஒழித்துக்கொள்கின்றது. பசுவில் நாம் பால் கறந்து விடுவதுபோல ஒரு வகைப் புழுவினைப் பிதுக்கி சில எறும்புகள் பால் கறக்கின்றன.

நாய்களைப்போற் குரைக்கின்ற பறவைகள் இருக்கின்றன. அவைகளை வீட்டுக்குக் காவல் வைக்கலாமென்கிருர்கள். ஜெர்மனியில் பிரேக் என்னும் ஊரில், ஒருவர் நாயை நன்ருகப்பாடும்படி பழக்கியிருக்கிருர்.

திராவிட கேசரியில், டிசம்பர் 29உ இதழில் ஜெர்மனிய என்ற பெயர் கேழ்மான் என்ற தமிழ்ச் சொல்லை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று வெளியிட்டிருப்பது ஆராயத்தக்கது.

ஜெர்மனியில் ஒரு பல்கலைக் கழகத்தில் தமிழுக்காக, ஜெர்மன் லூதர் மிஷன்ஸ் சார்பாக உழைத்த டாக்டர் பைத்தான் என்பவரை ஆசிரியராக நியமித்திருக்கிறது நமக்கு உவகை தருகிறது.

குதிரை முட்டையிடுமா என்று மக்கள் வியப்புறுவதுண்டு. ஆனால் கடல் குதிரை முட்டையிடும். மேலும் அவ்வகைக்குதிரையின் பெண்ணினம், ஆண் குதிரை உடம்பிலுள்ள ஒரு பையில் முட்டைகளை இட்டுச்செல்ல, ஆண்குதிரையே அவை குஞ்சுபொரிக்கும்வரை பாதுகாக்கிறது.

அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஓரிடம் எட்டு மைல் ஆழம் இருக்கிறதென்று மேல் நாட்டுப்பத்திரிகையொன்று தெரிவிக்கின்றது. நம்முடைய முன்னோர் யோகக்காட்சியால் கண்டவற்றை மேலையநாட்டு அறிவியல் நூல்வல்லார் இயற்கைப்பொருள்களின் ஆற்றலைப் பல்லாயிரமடங்கு மிகுதிப்படுத்துவதால் காணலாமென்ற முடிவுக்கு வந்துள்ளார்கள்.

கதிரி (radium) என்பதன் ஆற்றலை அதிகப்படுத்தி ஒலியின் அளவைப் பதினாயிரமடங்கு மிகுதிப்படுத்தல் கூடும். பூதக்கண்ணாடியின் ஆற்றலைப் பெருக்கிக் கண்ணுக்குத்தெரியாத விண் மீன்களைப் பார்த்தல் கூடும். கதிரவன் ஒளியை ஒரு ஊசியின் துளையிற் செலுத்தினால் அது 1000 மைலுக்கு அப்பாலுள்ளவர்களைத் தனது சூட்டினாற் கொல்லுதல் கூடும். இவை போன்றவை அறிவுநூலின் சித்துக்கள்.

டிசம்பர் மாசம் 8௳ சனிக்கிழமை ஜப்பான் தலைநகராகிய டோக்கியோவில் புத்தருடைய 2500 வயது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

அரசரின் வெள்ளிவிழா.

இப்போது நம்மையாளும் மிக்க மாட்சிமை தங்கிய 5-வது ஜார்ஜ் பெருமன்னரின் ஆட்சி தொடங்கி 25 ஆண்டுகள் ஆவதால், அவ்வாட்சியின் வெள்ளி விழாக் கொண்டாட்டம், இவ்வருடம் நடை பெறுவதற்கு பணம் சேர்க்க வேண்டிய வகைக்கு 4.1-35ல் சென்னையில் தக்கவர்கள் கூட்டமொன்று நடைபெற்றது. அதைத் திறக்குங்காலை மாட்சிமை தங்கிய கனம் சென்னைக்கவர்னர், நமது பேரரசரின் வெள்ளி விழாவைச்சிறப்பிக்கவேண்டியது எல்லாருக்கும் பொதுவான கடமை ஆதலின், எல்லாக்கட்சியாரும் அதற்குத்தங்களாலியன்ற பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். சேர்க்கப் படும் பொருள் ஏழைகள், நோயாளிகள் முதலியவர்களின் பெரு நன்மைகளுக்கே பயன் படுத்தப்படும் என்று அவர் குறிப்பித்தனர். சட்ட மந்திரியாகிய சர். கே. வி. ரெட்டி அவர்கள், மாட்சிமை தங்கிய கனம் லேடி வில்லிங்டன் அவர்களால் ஏற்படுத்தப் பட்ட வெள்ளி விழா நிதிக்குப் பணம் சேர்த்து வெள்ளி விழாவைச்சிறப்பாகக் கொண்டாட வேண்டு

மென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அது வழக்கறிஞர் தலைவராகிய கனம் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பெற்று, ஏகமனதாய் நிறைவேறியது. நமது பேரரசர் காலத்திலே இந்திய சுய ஆட்சிக்கு வழி வகுக்கும் சட்டங்கள் ஏற்பட்டனவாதலாலும், இவ்வாண்டு அத்தகைய பெருஞ்சட்டம் நிறைவேறுதற்குரிய காலமானதாலும், இவ்வரசாட்சியும் வெள்ளி விழாவும் இந்திய நாட்டு வரலாற்றில் என்றும் நிலைபெறக்கூடிய செய்திகள் ஆதல் காண்க.

சரித மாலை.

மனம்போல வாழ்வு.

ஒருகாலத்திலே சேரநாடானது பலகூறுகளாகபகுக்கப்பட்டு ஒவ்வொருகூற்றிலும் ஒருகுறுநில மன்னர் அரசாண்டு வந்தனர். ஒரு கூற்றத்தில் ஆட்சிபுரிந்த வேள் ஒருவரை அவருடைய தம்பி துரத்திவிட்டுத் தானே அரசினை மேற்கொண்டான். தள்ளப்பட்ட வேள் பின் செல்வார் சிலரைத் துணைக்கொண்டு பொதியிற் கானகத்தில் எளிய வாழ்க்கை நடத்தினர். கோடைக் காலத்தில் காட்டு மரங்களின் அழகிய நிழலில் கிடந்து அழகிய மான் களின் விளையாடல்களை விரும்பி நோக்குவர். மாரிக் காலத்தில் குளிரைப் பொறுத்துக் கொண்டு வாடைக் காற்றினை வேள் மன்னர் பின் வருமாறு வியந்து கூறுவர், "நம் உடம்பில் தாக்குகின்ற இந் நனி குளிர்க் காற்று எனக்கு உண்மைத் துணையாகும். அது பொய் முகமன் கூறுவதில்லை. என் உண்மைநிலையை எனக்கு எடுத்துரைப்பதாகும். அது கூர் மையாக உடம்பைக் கடிப்பது போல் வீசினாலும் அதன் பற்கள் இரக்கமின்மை, நன்றியறிவின்மை என்பவற்றின் பற்களைப் போலக் கொடியன அன்று. துன்பத்தை மக்கள் கடிந்து பேசினும் அதில் சில இனிய நயங்கள் உள்ளன. அது எது போல

வென்றுல் நச்சுப்பிராணியின் தலையிலுள்ள இரத்தினமானது மருந்துக்குப் பயன் படுதல் போல வென்க." இவ்வாறு நமது வேள் தான் கண்ட ஒவ்வொன்றிலும் நன்மையைத் தெரிந்து கொள்ளும் வழக்க முடையவராகி மனித சஞ்சார மில்லாத காட்டில் உலாவி வருங்கால் மரங்கள் வாயெடுத்துப் பேசுவதாகவும், ஓடும் நீரோடை கள் நூல்களியம்புவதாகவும், கற்கள் பிரசங்கங்கள் செய்வதாகவும், ஒவ் வொன்றிலும் நன்மை மிளிர்வதாகவும் காணலாயினர். நமது வேள் மன்னருக்கு ஒரே பெண்குழந்தை இருந்தது. அக்குழந்தையின் பெயர் கமலினி. வேளினைக் காட்டிற் கனுப்பிய கொடியோனாகிய அவர் தம்பி அக்குழந்தையைத் தன் அரண்மனையில் தன் மகள் சீலம் என்பவளுக்குத் துணையாக நிறுத்தி யிருந்தான். இருகுழந்தைகளுக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டிருந்தது. சீலம் கமலினிக்கு அடிக் கடி மிக ஆறுதல் கூறித் தன் தகப்பனுர் செய்த அநீதியை அவள் மறக்கும்படி செய்ய முயன்ற வள்.

ஒருநாள் கன்னியர் இருவரும் அரண்மனை யின் முற்றத்தில் நிகழ்ந்த மல்யுத்தமொன்றினைப் பார்க்கச் சென்றனர். அவ்விடத்தில் வல்லமை யுள்ள ஒரு பெரிய மனிதனும், ஒரு சிறிய இளை ஞனும் மற்போர்புரிய வந்துநின்றனர். இளை ஞன் இறந்து விடுவானென்று காட்சியைக் காண

வந்த பலரும் அஞ்சினர். அரசன் பெண் மக்கள் இருவரையும் பார்த்து, "நீங்கள் இருவரும் இவ்விடத்திற்கு எவ்வாறு வந்தீர்கள். இக்காட்சியில் உங்களுக்கு இன்பம் தோன்றுது. அந்த இளைஞன் மற்போர் புரியக் கூடா தென்று நீங்கள் அவனிடம்பேசக் கூடுமானுல் பேசுங்க" ளென்ருன். முதலில் சீலம் அந்த இளைஞனிடம் போர் புரிதல் கூடாதென்று வேண்டினள். கமலினி அவ்விளைஞனிடத்தில் மிகவும் அன்பாகப் பேசப்பேச அவன் தன் வலிமையை அவள்கண் முன்பாக நிலைநாட்ட வேண்டுமென்று உறுதி கொண்டவனுயினுனே யொழியப் போர்புரியுங் கருத்தைக்கைவிடா திருந்தான். இரு பெண் மணிகளுடைய வேண்டு கோளையும் அவன் அழகான இனிய மொழிகளால் மறுத்தும் அவர்கள் கோபங் கொள்ளாது அவன் உயிர்தப்ப வேண்டுமேயென்று அதிகக் கவலையுற் றிருந்தனர். அவன் அவர்களிடம் சொன்னதாவது, "குணவதிகளாகிய நீங்கள் சொல்லும் எதையும் மறுக்க நான் விரும்புவதில்லை. ஆனுலும் நான் மற்போர் புரிதற்கு உறுதி கொண்டிருப்பது எதனுல் எனின் நான் தோல்வியுற்ருல் அவமானப் படத்தக்கவனே, அவமானப்பட்டவ னுவான். நான் கொலையுண்டால் சாகவிரும்பினவனே சாகின்ருன். அதனுல் நான்செத்தால் அதற்காக வருத்தப் படக்கூடியவர்கள் ஒருவருமில்லை.

உலகத்திற்கும் ஒரு கெடுதியுமில்லே. ஏனெனில் உலகத்தில் எனக்கு யாதுமில்லே.''

மல்யுத்தம் தொடங்கிய போது இருபெண்களும் இளைஞனுக்காகக் கவலேகொண்டனர். கமலினி தன்னைப் போல அவனும் உலகில் உற்றார் உறவினரில்லாத நிலேயில் உள்ளவனென்பதை நினைந்து கணவனுக்காக மனைவி வருந்துவது போல வருந்தினள். பெண்மணிகளின் அன்பைப் பார்த்து மனஊக்கமும் உழைப்பும் மிகுதிப் பட்டவனுகி இளைஞன் மிக அதிசயமான வேலைத் திறன்களைக்காட்டி முடிவில் தன் எதிரியை வென்று விட்டான். எதிரி இளைத்துப் போய்ச்சற்று நேரம் ஒன்றும் பேசாமலும் அசையாமலும் இருக்க நேரிட்டது. இவற்றையெல்லாம் கண்ட அரசன் இளைஞன் திறத்தைப் பார்த்து மகிழ்ந்து அவன் ஊர் பேர் வினவலாயினன். அரசில் நின்றும் விலகிக்காட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் வேளிர்க்கு மிக நெருங்கிய நண்பனுன ஒருவள்ளலின் குமாரனே அவ்விளைஞன் என்று மன்னன் அறிந்தபோது அவன் ஊக்கந்தளர்ந்து இவ்விளைஞன் வேருெருவரின் மகனுக இருந்தானில்லேயே யென்று சொல்லிக்கொண்டு அவ்விடத்தை யகன்று சென்றுன். அவ்விளைஞன் பெயர் ஆரிலன் என்பதாகும். இதனை யறிந்தகமலினி அவ்விளைஞன் தன் தந்தையின் நண்பன் புதல்வனுதலே நினைந்து

மிக்க உவகைகொண்டனள். பின்னர் இரு பெண் மணிகளும் இளைஞனிடம் சென்று அவனுக்கு அன்பான ஆறுதல் மொழிகளைப் பேசினர். இருவரும் மீளும் போது கமலினி தன்கழுத்தி லிருந்த ஒரு சங்கிலியை எடுத்து இளைஞன் அணிந்து கொள்ளும்படி கொடுத்தாள்.

இருபெண் மணிகளும் தனித்து இருக்குங் காலத்திலெல்லாம் கமலினி ஆரிலனைப்பற்றியே பேசுதல் கண்டு அவள் அவனிடத்திற் காதல் கொண்டதாகச் சீலம் எண்ணிக் கமலினியைப் பார்த்து, “நீ அவ்வளவு விரைவாக அவனிடம் காதல் கொள்ளுதல் எவ்வாறு இயன்றது” என்றாள். கமலினி பதிலாக என் தந்தை அவன் தந்தையை அதிகமாக நேசித்தார் என்றாள். அதனைக் கேட்ட சீலம் கூறுவாள்: அவன்தந்தைக்கும் உன் தந்தைக்கும் நட்பிருந்தால் நீ அவனை நேசிக்க வேண்டுமென்பது கட்டாயமா? அப்படியானால் என்தகப்பன் அவன் தகப்பனிடத்தில் பகை கொண்டமையாலே நான் அவனைப் பகைக்கவேண்டுமோ? ஆனால் நான் ஆரிலனைப் பகைப்ப தில்லையே, என்றாள்.

மன்னன் ஆரிலனிடத்தில் சினங் கொண்டிருந்தமையால் அவனை நேசித்த கமலினி யிடமும் அவன் வெறுப்புக்கொண்டான். பொது நன் மக்கள் பலரும் அவள் நற்குணங்களைப் புகழ்ந்து அவள் தந்தைக்கு நேர்ந்த அவலத்

தின் பொருட்டு அவளிடம் இரக்கம்வைத்தமை மன்னனின் பகைமையை மூளச் செய்தது. ஒரு நாள் சீலமும் கமலனியும் ஆரிலனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பொழுது அவர்கள் இருந்த அறையில் மன்னன் புகுந்து கமலினி யைக் கடுங் கோபத்துடன் பார்த்து, “நீ அரண் மனையை விட்டு ஓடிப்போய்க் காட்டிலிருக்கிற உன் தந்தையை யடைவாயாக” வென்று கட்டளை யிட்டான். அங்ஙனம் உத்தரவு செய்யக் கூடா தென்று சீலம் மன்னனை வேண்டிப் பரிந்து பேசிய போது “இதுவரை அவளை இங்கேயே தங்கும்படி இடங் கொடுத்தது உன்னாலேயே,” “என்றான்.” இப்பொழுதும் என் பொருட்டாக வே அவளைத்தங்க அநுமதி கொடுக்கவேண்டும். இளமையில் அவளுடைய நலங்களை அறியா திருந்தேன். இப்போது அவளது அருமையை யறிந்திருப்பதோடு நாங்க ளிருவரும் ஒரே நேரத்தி லெழுந்து ஒரே நேரத்தில் உண்டு உடுத்துக் கற்று விளையாடித் தூங்குங்காலத்தி லும் ஒன்றாக இருந்தமையால் நான் தனியே வாழமுடியாதென்று சீலம் செப்பினள். அப் போது மன்னன் கூறுவான், “அவள் நீயறியாத படி மிகவும் நுட்பமான தந்திர முடையவள், அவளுடைய மென்மையும் மௌனமும் சாந்த மும் பொது மக்களை மகிழ்வித்து அவர்கள் அவ ளிடப் இரக்கம் வைக்கும் படி செய்கின்றன. நீ அவளுக்காகப் பரிந்து பேசுதல் முட்டாள்த்

தனம். அவள் இல்லாதபோது தான் நீ சிறந்த வளாகவும் குணவதியாகவும் ஜனங்களுக்குத் தோன்றுவை. ஆதலால் நீ அவள் பொருட்டு வாய் திறத்தல் கூடாது. நான் அவளுக்கு இட்ட கட்டளையை மாற்றப் போவதில்லை'' என்றான்.

மன்னனைத் தன் வழிக்குத் திருப்பமுடியாமை கண்ட சீலம் கமலினியுடன் காட்டிற்கு அன்றிரவே செல்லத் துணிந்தனள். அரசகுமாரிகளிருவரும் தாங்கள் உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு காட்டின்வழி செல்லுதல் தற்பாதுகாப்பிற்கு இடைஞ்சலாகுமென் றெண்ணி நாட்டுப்புறத்துச் சிறுமிகள் போல உடையணித்து தங்களது உயர்நிலையை மறைத்துக் கொள்ள எண்ணினர். பின்னும் யோசனை செய்து ஒருவர் ஆண்வேடம் பூண்டு கொள்ளுதல் நல்லதென்று நினைத்தனர். அவர்களிருவருள் கமலினி அதிக உயரமுள்ளவளாக இருந்தபடியால் அவள் ஆண்வேடம் பூண்டனள். தாங்களிருவரும் அண்ணன். தங்கை என்று பிறருக்குத் தெரிவிப்பதாகக் கருதிக் கமலினி கன்னிவீரனென்ற பெயரையும், சீலம் அரியள் என்ற பெயரையும் தரித்தனர்.

கமலினியின் தந்தை இருக்கும் ஆரிடம் என்னும் வனமானது நாட்டின் எல்லைக்குஅப்புறத்தில் இருந்தமையால் அவர்களுடைய யாத்திரையானது நீண்டதாக இருந்தது. அவர்

கள் தங்களுக்குள் உல்லாசமாகப் பேசிக்கொண்டு வெளியிலே உள்ள விடுதிகளில் வசதியாகத் தங்கிப்போய் ஆரிட மென்னும் காட்டை யடைந்த போது அங்கே உறை விடமும் உணவுச் சாலையுங் காணுது இளைப்புற்று வருந்தலாயினர். மனவலிமை யுடைய கன்னி வீரனுங்கூட ஒரு பெண் போலக் கவலைப்படத் தொடங்கினன். அது கண்ட அரியள் இனிமேல் ஓரடி கூட என்னுல் நடக்க முடியா தென்றனள். அப்போது கன்னி வீரன் தான் ஆண்வடிவம் பூண்டமையால் அரியளுக்கு ஆறுதல் கூறி அவளைத் தேற்றுவதே முறையென் றுணர்ந்து, "தங்கையே! தளர்வடையாதே நமது யாத்திரை முடியுந் தருணம் வந்து விட்டது" என்றனன். ஆரிடவனத்தை அவர்கள் அடைந்த போதிலும், அதன் எப்பகுதியில் கமலினியின் தந்தை தங்கியிருக்கிருரென்று அவர்களாற் கண்டுபிடிக்க முடியவில்லை. சிறிது தூரஞ்சென்று பசியினுலிளைத்துக் களைத்துப் புகலொன்றுங் காணுது புல்லின் மேல் அவர்கள் உட்கார்ந்தபோது நாட்டுப் புறத்தானெருவன் அவ்வழியே செல்லலாயினன். கன்னிவீரன் அவனைப்பார்த்து, "ஓய் கோனுரே! இந்த இடத்தில் அன்பிற்காவது பொருளிற்காவது உணவு கிடைக்குமா? தங்க வசதியான இடமுண்டா? என்தங்கை பசியால் இளைத்துப் போவதைப் பாரும்" என்ருன். அப்போது நாட்டுப் புறத்தான் சொல்லுவான், "நான் ஒரு கோனுருக்கு

வேலைக்காரன். என்முதலாளியின் வீடு இப்பொழுது விற்பனைக்குத் தயாராக இருக்கின்றது. அதில் சுருக்கமாக உணவுப் பொருள்களும் உள்ளன. நீங்கள் என்னோடு வரலா'' மென்றனன். அவர்கள் இருவரும் இதனைக் கேட்டுத் தளர்ச்சி நீங்கி அவன்பின் சென்று அக்கோனருடைய வீட்டையும் ஆட்டையும் விலைக்கு வாங்கித் தங்களுக்கு வழிகாட்டியவனைவேலைத் துணைவனாக அமர்த்திக் கொண்டார்கள். அவ்வீடானது புனிதமான குடிசை யாயும் உணவுப் பொருள்கள் நிறைந்ததாயும் இருந்தமையால் கமலினியின் தந்தையைக் காணும்வரை அங்கே தங்குவதாகத் தீர்மானித்தார்கள். அவர்கள் தங்கள் புதுவாழ்க்கையில் இடையன் இடைச்சிபோல நடக்கலாயினர். சிலவேளைகளில் கன்னிவீரன், தான் கமலினி என்பதையும் ஆரிலனைத்தான் நேசித்ததையும் நினைவ துண்டு.

ஆரிலனது பூர்வ வரலாற்றைச் சிறிது நோக்குவோம். ஆரிலனை அவன் தகப்பனார் அவன் அண்ணனாகிய ஆலிவர் பாது காப்பில் விட்டு இறந்தனர். அப்போது அவனுக்கு நல்லகல்வி கற்பித்தல் வேண்டும் என்றும் தங்கள் குடும்பத்திற்குத் தகுதியான முறையில் அவனுக்குச் செல்வமுதலிய வசதிகளை யேற்படுத்த வேண்டு மென்றும் ஆலிவருக்கு அவர் கட்டளையிட்டிருந்தார். ஆனால் ஆலிவர் தன்தந்தையின்

வார்த்தைகளைப்பொருட்படுத்தாது தன் தம்பிக்குக் கெடுதியே நினைத்தான். அவனை உரியபொழுதில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் வீட்டிலேயே வைத்திருந்து அவன் வாழ்க்கையை முற்றிலும் அசட்டைசெய்தான். ஆயினும் ஆரிலன் இயற்கையாகத் தனது தந்தையின் பெருந்தன்மைகளைப் பெற்று விளங்கினமையால் கல்விப்பயிற்சி யில்லாமலே நாகரீகமாய் வளர்க்கப்பட்ட இளைஞனைப்போலத் தோன்றினன். கல்வியற்ற அவனது எழிலையும் மரியாதையான நடைமுறைகளையும் பார்த்துப் பொருமை கொண்ட அவன் அண்ணனாகிய ஆலிவர் அவனைத் தொலைத்துவிட வேண்டுமென்று எண்ணங் கொண்டான். அதற்காகவே மல்யுத்தத்தில் கைதேர்ந்த ஒருவனோடு தன் தம்பியைச் சண்டையிடும்படி அவன் போதித்தான். அண்ணனோடு பகைத்து ஆதரவற்று உயிர்வாழ்வதிலும் மற்போர்புரிந்து மாளுதலே நல்லதென்று ஆரிலன்அதற்கு இணங்கினன். மன்னன்முன் நடந்த போரில் எவரும் எதிர் பாராத வண்ணம் ஆரிலன் வெற்றியடைந்தவுடன் அவன் அண்ணன் அளவற்ற பொருமையும் பகைமையும் மூளப்பெற்று ஆரிலன் படுத்திருக்கும் அறைக்குத் தீவைக்கக் கருதினன். இத்தீய எண்ணத்தை அறிந்த விசுவாசமுள்ள கிழவேலைக்காரனொருவன் மிகவும் ஆற்றுமையுடன் ஆரிலன் பாற்சென்று ஆலிவரின் தீயகருத்துக்

களைத் தெளிவாக வெளியிட்டு, ஆரிலன் அரண்மனையை விட்டு விரைவில் தப்பி ஓடுதலே நலமென்று அறிவுறுத்தினன். வேலைக்காரன் பெயர் ஆதனென்பதாகும். ஆரிலன் ஆதன்கூறிய அறிவுரையை யேற்றுக்கொண்டு தன்னிடம் பணமில்லையென்பதைத் தெரிவித்தான். அதற்கு ஆதன் கூறுவான்: "என்னிடம் இப்போது போதிய பணமிருக்கின்றது. நான் உன் தந்தையாரிடம் வேலையாளனுக அமர்ந்து பெற்ற ஊதியத்தில் சேமித்துவைத்த ஐந்நூறு வெள்ளிக் காசுகள் என்னிடமுள்ளன. அவற்றை நீ பெற்றுக் கொண்டு புறப்பட்டுப் போகலாம். நான் இன்னும் தளர்ச்சி யடையவில்லை. காக்கையைக் காப்பாற்றுகின்ற கடவுள் என்னையுங் காப்பாற்றுவர். என்பண முழுவதும் உனக்கே கொடுக்கின்றேன். உன்வேலைக்காரனுகவும் உன்னுடன் செல்ல விரும்புகிறேன்," என்முன். ஆரிலன் ஆதன் மொழிகளைக் கேட்டு வியப்பும் மகிழ்வும் அடைந்து, "நல்ல பெருநண்பனே, பண்டை நாளில் பேசப்படும் உண்மையான உதவியும் உறுதியும் உன்னிடமே நான்கண்டேன் நீ இக் காலத்திற்குப் பொருத்த மானவனல்ல. நாமிருவரும் ஒன்முய்ப் புறப்படுவோம். உன்பணம் செலவழிந்து விடுமுன் நாமிருவரும் பிழைப்பதற்குரியஏதாவது ஒருவழியைநான் காண்பேன்" என்முன்.

உடனே அன்புமிக்க கிழவனும் அருள்மிக்க இளைஞனுகிய தலைவனும் புறப் பட்டனர். இன்ன செய்வதென்ற உறுதியில்லா மல் வழிநடந்து நடந்து இருவரும் ஆரிடம் என்னும் வனத்திற்கு வந்து சேர்ந்தனர். அங்கே வந்தபோது கன்னி வீரனும் அரிய ளும் உணவுக்கு வருந்தினது போல அவர்களும் வருந்தலாயினர். மக்கள். வாழும் குடிசை எங்கே யாவது உள்ளதா என்று அலைந்து தேடித் திரிந்து அவர்கள் களைத்தபோது கிழவனை ஆதன் மேல்நடக்க இயலாது ஓரிடத்திலமர்ந்து இங்கேயே நான் உயிர் விடப்போகின்றேன் நீர் மேல் செல்லலா மென்று இளைஞனை நோக்கிக் கூறினன். ஆரிலன் அவனைத் தூக்கிக்கொண்டு போய் ஒருமரத்தின் நிழலில் வைத்து நீ இங்கே இளைப்பாறு என்று கூறி விட்டு உணவு தேடிச் சென்றான். அங்ஙனம் சென்று காட்டில் வாழ் கின்ற வேளும் அவர் நண்பரும் சில பெரிய மரங்களினடியில் புல்லின்மேல் உட்கார்ந்து உணவுகொள்ளுமிடத்தைப் போய் அடையலாயி னன். பசியினல் மூர்க்கத்தன்மை யடைந்த ஆரி லன் உணவு கொள்ள இருப்பவர்களைப் பார்த்து, "உண்ணுதீர்கள். உங்கள் உணவு எனக்கு வேண் டும்" என்று கூறி கத்தியை உருவிக் கொண்டு அவர்கள்பாற் சென்றான். வேள் வள் ளல் அவனைப் பார்த்து உன் மூர்க்கத்தன்மை இயற்கையோ செயற்கையோ என்று வினவினர்.

அதற்கு ஆரிலன், "நான்பசியால் சாகுந்தருவாயி லிருக்கின்றேன்," என்ருன். அப்படியாயின் நீ எங்களோடு உட்கார்ந்து உணவு கொள் என்று வேள் செப்பினர். அதைக்கேட்ட ஆரிலன் மகிழ்ச்சியும் நாணமுங் கொண்டு கத்தியைத் தன் உறையிலிட்டுக்கொண்டு அவர்பால் மன் னிப்புக்கேட்டனன். பின்னர் அவன் கூறுவான், "என்னோடு நெடுந்தூரம் அலைந்து வந்த ஒரு கிழவன் அங்கே யிருக்கின்ருன். முதுமையினு லும் பசியினுலும் வருந்துகின்ற அவன் உணவு கொண்டாலொழிய நான் ஒன்றும் அருந்தேன்" என்ருன். அப்போது வேள் அவனைப் பார்த்து அங்ஙன மாயின் அவனையும் அழைத்துக் கொண்டுவா வென்றனர். அப்படியே ஆதனை யும் அவன் அழைத்துக் கொண்டு வந்து வேள் கூட்டத்தாரோடு வயிருர இருவரும் உணவருந் திக் களைப்பு நீங்கினர். பின்னர் இளைஞனும் முதி யோனும் யாரென்று விசாரித்தறிந்து, இளை ஞன் தன் நண்பனுடைய புதல்வனென்று கண்டு மகிழ்ந்து இருவரையுந் தன் ஆதரவில் வைத் துப் போற்றலாயினர். ஆரிலன் வேள்வள்ளலை யடைந்த சிலநாட்களுக்குள் கன்னிவீரனும் அரி யளும் அங்கேவந்து இடையர் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். ஆரிலனுகிய இளைஞன் அவ்வனத்தில் வேலையின்றி இருக்கும் நேரங் களில் தான் மற்போர் புரிந்தபோது கண்ட கம லினியை நினைந்து அவள் பெயரையும் அவளைப்

பற்றிய காதற் பாட்டுக்களையும் அங்குள்ள மரங்களின்மீது செதுக்கிவைத்தனன். அவற்றைக் கன்னிவீரனும் அரியனும் அம்மரங்களினருகே உலாவியபோது கண்டனர். அவை எவ்வாறு அங்கேயாரராலெழுதப்பட்டிருத்தல் கூடுமென்று அதிசயப்படுங்காலத்தில் ஆரிலனை அங்கேவரக் கண்டனர். மற்போர் முடிவில் அவன் வெற்றிக்காகக் கமலினியளித்த சங்கிலி அவன்கழுத்தில் இருப்பதையும் பார்த்தனர்.

ஆரிலன் பேசிய கன்னி வீரன் தான், கமலினி என்பதை அறிந்து கொள்ளவில்லை. ஆனால் கன்னிவீரன் ஆரிலனை நன்றாய்த் தெரிந்து கொண்டான். கன்னிவீரனைப் பார்த்த அளவில் கமலினியின் சாடை அவன் உருவில் தோன்றுவதை யறிந்தும் கன்னிவீரன் ஆண்மை வழக்கங்களை மேற்கொண்டமையால் ஆரிலன் தெளிவாக அவனை அறியக் கூடவில்லை. கன்னிவீரன் ஆரிலனைப்பார்த்து இங்கே காதல் கொண்ட யாரோ ஒருவன் மரங்களி லெல்லாம் தன் காதலி பெயரை எழுதி அவற்றைக் கெடுக்கிறான். நான் அவன் யாரென்பதை யறிந்தால் நான் அவனுக்கு நல்ல புத்திமதி கூறி அவன் காதல் நோயைக் குணப்படுத்துவே னென்றான். அப்போது ஆரிலன் அத்தகைய காதல் நோயுற்றவன் நானே. எனக்கு எவ்வகையான புத்திமதி நீ கூறக்கருது கின்றாய் என்றான். அப்போது

கன்னிவீரன் கூறுவான் நானும் என் தங்கையு மிருக்கின்ற குடிசைக்கு நீ ஒவ்வொரு நாளும் வரவேண்டும். நான் கமலினியாக என்னைப் பாவித்துக் கொள்வேன். நீ என் மேற் காதல் கொண்டு நடப்பதாகப் பாவிக்கவேண்டும். காத லர்க்குப் பெண்கள் காட்டுகின்ற கற்பனை வழிக ளெல்லாம் நான் நடந்து காட்டுவேன். அதனுல் நீ நாணங் கொள்ளுவாய். நாணம் மிகவே காதல் நோய் மாறிவிடும் என்முன். இந்த முறை நடப்ப தாற் காதல் மாறுமென்று ஆரிலன் எண்ணு விடினும் கன்னி வீரன் கூறியதற் கிணங்கி ஒவ்வொருநாளும் அவன் குடிசைக்குச் சென்று விளையாட்டுக் காதலொழுக்கத்தை நடத்திவந் தான். அதனுல் ஆரிலனது காதல் மாறவில்லை யென்பது உண்மையே. ஆயினும் தானே உண் மைக்காதலி யாதலின் ஆரிலன் கூறிய இனிய உபசார மொழிகளால் தனக்குள்ளே கன்னி வீரன் உவகைபூத்தனன். அரியளும் இந்த வேடிக்கையைப் பார்த்து உள்ளூறக் களிப்புக் கொண்டனள். ஆரிலன் வாயிலாக வேள்வள் ளல் இருக்கு மிடத்தைக் கன்னி வீரனறிந்து ஒரு நாள் அங்குச் சென்று அவரோடு பேசினன். தன் குடும்ப வரலாற்றைப் பற்றி வேள்விசாரித்த போது கன்னி வீரன் அவரைநோக்கி நானும் உம்மைப்போல உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த வனே என்றுரைத்தான். அதைக்கேட்டு வேள் மன்னர் புன்சிரிப்புக் கொண்டாராயினும்

இடைப் பையன் வேடம் பூண்ட கன்னி வீரன் அரசகுடும்பத்தைச் சார்ந்திருத்தல் கூடுமென்று அவர் எண்ணக் கூடவில்லை. வேள் மன்னர் சுக மான நிலையிலிருந்தமையால் கன்னிவீரன் தன் வரலாற்றைச் சில நாள் மறைத்து வைக்கக் கருதினான்.

ஒரு நாள் ஆரிலன் கன்னிவீரனைப் பார்ப்ப தற்காகச் செல்லும் பொழுது வழியிலே ஒரு மனிதன் தரையில் படுத்து உறங்குவதையும், ஒரு பெரிய பச்சைப்பாம்பு அவன் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருப்பதையும் பார்த்தான். ஆரிலன் வருவதைப் பார்த்துப் பாம்பு விலகிச் செடிகளுக்குள் ஓடிப்போய் விட்டது. ஆரிலன் அவனுக்கருகே சென்றபோது சற்று தூரத்தில் ஒரு பெண் சிங்கமானது படுத்திருந்தவன் தூங்கி விழித்தவுடன் அவன் மேல் பாய்வதற்காகப் பதுங்கிக் கிடப்பதைக் கண்டான். இவ்விருவித மான அபாயத்திற்கு உட்படக் கிடப்பதை யறியாது தூங்கிய மனிதனின் முகத்தைப் பார்த்த போது அவன தன் தமையனாகிய ஆலிவர் என்பதை ஆரிலன் தெரிந்தான். தமையன் கொடுமையை நினைந்து ஆரிலன் முதலில் சினங்கொண்ட போதிலும் தன்னுடைய நல்ல இயற்கையாலும் உடன் பிறந்தான் பாலுள்ள அன்பினாலும் அவன் வெல்லப்பட்டுத் தன் கத்தியை யுருவிப் பெண் சிங்கத்தோடு போர் புரிந்து அத

னைக் கொன்ருன். அப்படிக்கொல்லும் போது சிங்கமானது தன் கூரியநகங்களால் அவன் கை யொன்றினைப் பிய்த்து விட்டது.

சிங்கத்தோடு போர் புரியுங்காலத்தில் ஆலிவர் விழித்தெழுந்து தான் கொடுமையாகக் கொல்லக் கருதிய தன் தம்பி தன் பொருட்டுக் கொடிய விலங்கோடு போர்புரிவதைப் பார்த்து நாணமும் தன் குறையுணர்ச்சியும் மீதூரப் பெற்று மனந்திரும்பித் தன் குற்றங்களுக்காகக் கண்ணீர் சிந்தித் தன் தம்பியினிடம் மன்னிப்புக் கேட்டான். ஆரிலன் மனந் திருந்திய தமையனை மன்னித்தான். சகோதரர்களிருவரும் ஒற்றுமைப் பட்ட மன முடையவராயினர்.

ஆலிவர் காட்டிற்குவந்தது ஆரிலனைக் கொல்லக் கருதியேயாம். ஆனல் தன் உயிர்க்குக் கேடுபயக்கவந்த பெரிய அபாயங்களினின்று தம்பி தன்னைக்காத்தமையால் தன் தீயகருத்து முற்றிலும் மாறப்பெற்று உண்மையாகவே தன் தம்பியை நேசிக்க லாயினன். ஆரிலன் கையில், சிங்கத்தாலேற்பட்ட காயத்தினின்று அதிகமாக இரத்தம் பெருகினமையால் கமலினியாகிய கன்னிவீரனைப் பார்க்கப் போவதற்குச் சக்தி யற்றவனுய்த் தன் தமையனைக் கமலினியிடம்

தனக்குநேர்ந்ததைச் சொல்லும்படி யனுப்பி ஞன். தலையனுகிய ஆலிவர்போய்க் கன்னிவீரன் இடத்திலும் அரியளிடத்திலும், ஆரிலன் தன் உயிரை அபாயத்தினின்று காப்பாற்றின செய் தியையும், தான் இன்னுன் என்பதையும், தானும் ஆரிலனும் ஒற்றுமைப் பட்டசெய்கையையும் எடுத்துக் கூறிஞன், ஆலிவர் தன் குற்றங்களுக் காக உண்மையாக மனம் வருந்துவதைக் கண்டு அரியள் அவனிடத்தில் இரக்கமும் அன்பும் உடையவ ளாஞள். தன்பால் அவள் இரக்கம் வைத்ததைக்கண்டு ஆலிவர் அவளை நேசிக்கலா ஞன். ஆரிலனுக்கு நேர்ந்த இடையூற்றினைக் கேட்டகன்னிவீரன் மயக்கமெய்திப் பின்னர்த் தெளிந்து ஆலிவரைப்பார்த்து "நான் எவ்வளவு நன்ருக மயக்கமானவன்போல் நடித்தேனென்று உன்தம்பியினிடம் நீ தெரிவி" என்ருன். ஆனல் ஆலிவர் அவன்முகம் வெளுத்ததைப்பார்த்து உண்மையாகவே அவன் மயக்கமெய்திஞனென்று தெரிந்து அவனைப்பார்த்து, "இளைஞனே அப்போது நீ மயங்கினவனுக நடித்தாயானல் இப்போது ஊக்கமாய்த் தைரியமுள்ள மனிதன் போல் நடிப்பாயாக" என்ருன். அதற்குக் கன்னி வீரன் பதிலுரைப்பான்; "நான் அப்படியே செய் கிறேன். ஆனல் இயற்கைக்குத்தக்கபடி பெண்ணு யிருத்தற்குரியவனே" என்ருன்.

ஆலிவர் கன்னிவீரன் குடிசையில் நெடு நேரம் தங்கியபின் மீண்டும் தம்பியினிடம் போய் அவன் காயப்பட்டதைக் கண்டு கன்னிவீரன் தளர்ச்சி யடைந்ததையும் தானும் அரியளும் ஒருவரை ஒருவர் நேசிக்கநேர்ந்ததையும் எடுத்துக் கூறினன். மேலும் அரியளை மணந்து அங்கே ஒரு இடையனுகவாழ விரும்புவதாயும் நாட்டிலுள்ளதன் வீடு சொத்து முதலிய வற்றையெல்லாம் ஆரிலனுக்கே கொடுத்து விடுவதாயும் கூறினன். ஆரிலன் தமையனை நோக்கி நாளையே அவளை நீ மணம் புரிந்துகொள். உன் மணத்திற்கு வேள்வள்ளலேயும் அவர் நண்பரையும் நான் அழைக்கின்றேன். அதோ! கன்னிவீரன் வருகிருன்பார். இப்போது அரியள் தனியே யிருப்பாள். அவளிடம்போய் உன்னை மணந்து கொள்வாளா என்பதைத் தீர்மானித்து வா என்முன். ஆலிவர் அதற்கிசைந்து சென்முன். கன்னிவீரன் ஆரிலன் பால்வந்து சேர்ந்து அவன் சுகத்தைப்பற்றி விசாரித்தான்.

கன்னிவீரனும் ஆரிலனும் தனியே பேசிக்கொண்டிருக்கும் பொழுது ஆரிலன் ஆலிவருக்கும் அரியளுக்கும் விரைவில் ஏற்பட்ட காதலையெடுத்துக் கூறித் தமையன் அவளை மணக்கக்

கருதுவதையும் இயம்பி அவர்கள் இருவரும் மணம்புரியும் நாளன்று தானும் கமலினியை மணக்க நேர்ந்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்குமென்றான். அப்போது கன்னிவீரன் கூறுவான், "ஆரிலனே, நீ உண்மையாகக் கமலினியை நேசித்தால் நான் அவளை என் செப்படிவித்தை மூலமாக இங்கேயே வரவழைத்து உன்னை மணக்கும்படி செய்கின்றே" னென்றான். இதைக்கேட்ட ஆரிலன் அதனைப் பாதி நம்பியும் பாதி நம்பாமலும் நீ உண்மையாகவே பேசுகின்றாயா என்று கேட்டான். ஆம், நான் கூறுவது உண்மையே: நீ நல்ல ஆடையை யணிந்து கொள். உன் கலியாணத்திற்கு வேள் மன்னரையும் அவரது நண்பரையும் வரவழை. கமலினியை நாளைக்கே இவ்விடம் நான் வரவழைத்தல் கூடும் என்றான். மறுநாட்காலையில் ஆலிவர் அரியள் தன்னை மணக்கக் கருதியதைத் தெரிந்து அவளோடு வேள்மன்னர் முன்னிலையிற் சென்றான். அவர்களோடு ஆரிலனும் சென்றான். ஆரிலனுக்குப் பெண்ணைக்காணாது எல்லாரும் திகைத்தார்கள். வேள்மன்னர் அவனிடம் தன்மகளாகிய கமலினியைக் கன்னிவீரன் கொண்டு வருவதாகச் சொல்லியதைக் கேட்டு, அந்த இடைச்சிறுவன் எவ்வாறு கமலினியைக்

கொணர்தல் கூடுமென்று வியப்புற்று நின்ருர். கன்னிவீரன் அவரிடம் வந்து ஐயா! வேள்வள்ளலே நான் உமது மகளை இங்கே அழைத்துவந்தால் அவள் ஆரிலனை மணம்புரிவதற்கு நீர் இசைவீரா! என்று கேட்டான், வேள் மன்னர், "நான் நன்ருக இசைவேன். அரசு என்னையிலிருந்தாலும் அதையும் மணமக்களுக்கு அளிப்பேன்" என்ருர். நீர் ஆரிலனுக்கும் கமலினுக்கும் இவ்விடத்திலேயே மணம் நடத்துவீரா? என்று கன்னிவீரன் வேளை மீட்டுங் கேட்டான். அதற்கு அவர் நான்சித்தமா யிருக்கிறேன் என்ருர். உடனே கன்னிவீரனும் அரியளும்வெளியே சென்று தங்கள் பழைய உடைகளைத் தரித்துக் கொண்டு அரசகுமாரிகளாக வேள் மன்னர் முன் தோன்றினுர்கள். கமலினி தன் தந்தையை அடிபணிந்து அவருடைய ஆசீர் வாதத்தை வேண்டினுள். எல்லார்க்கும் உண்டான வியப்பு நீங்கும் வண்ணம் இருவரும்தங்கள் இடையர் வாழ்க்கை வரலாற்றைத் தெளிவாக எடுத்தியம்பினர். உடனே எல்லாருள்ளத்திலும் உவகைபொங்கித் ததும்பிற்று. ஆலிவருக்கும் சீலத்திற்கும், ஆரிலனுக்கும் கமலினிக்கும் நடந்த திருமணச் சிறப்பு வேறுயாண்டுங் காண்டலரிது. திருமணத்தைச் சிறப்பித்தோர் யாவரும் நல்லுணவு கொள்ளுங்

காலத்திலே, எதிர்பாராத ஒரு தூதன் வந்து வேள் மன்னரிடம், அவர் நாடும் அரசும் அவருக்குத் திரும்பக் கொடுக்கப்பட்டதென்ற நற்செய்தியைத் தெரிவித்தான்.

இச்செய்தி எவ்வாறு நிகழ்ந்ததெனில், வேள் மன்னரின் கொடிய தம்பி, தன்மகள் கமலினியோடு ஆரிட வனத்திற்குச் சென்ற செய்தியை அறிந்து, நாடோறும் தக்காரனை வரும் தனது அரண்மனைக்கு வாராது, தன்னைப் புறக்கணித்தமையையும் உணர்ந்து, ஆரிடவனத்தைப் படையெடுத்து, அங்குள்ள தன் தமையன் வகையாரை அழித்துத் தன் மகளை மீட்டுவரக் கருதித் தன் படையோடு வனம் நோக்கிச் சென்றான். வழியிலே ஒருதுறவி அவனைக்கண்டு அவனோடு நெடிது நேரம் உரையாடி, அவன் மனத்தைத் துறவுநெறிக்குத் திருப்பினமையால் அவன் தன் அரசினை விட்டு நீங்கிக் காட்டிற்குச் சென்று ஒருமடத்திலே துறவுவாழ்க்கை நடத்தி இறக்கத்துணிந்தனன். உடனே, அவன் தன் தமையனுக்கு அரசினை மீளக் கொடுத்து விடுவதாகவும், அவனைச் சார்ந்த துணைவர் களுக்கு அவ்வவர் செல்வங்களை மீள அளித்து விடுவதாகவும் ஒரு தூதனிடஞ் செய்தியனுப்பினான்.

தூதன் செய்தியைக் கேட்ட வேள் மன்னர் முதலிய யாவரும் பெருங் களிப் படைந்தனர். வேள் மன்னர் அரசுபெற்று ஆட்சிபுரிய நேர்வதால் அவர்க்குப்பின் அரசாட்சி பெறும் உரிமை கமலினிக்குத்தான் கிடைக்கும் என்பதையும், தான் அதற்கு வாரிசாகவருதல் இயலாதென் பதையும் சீலம் அறிந்தாளாயினும் கமலினிபாற் பொறாமை கொள்ளாது அவளது சிறந்த அன்பையும் தகுதியையுமே பாராட்டினுள். சீலமுங் கமலினியும் உண்மையான உடன்பிறப்பு நேசத்தாற் கட்டுப் பட்டிருந்தனர். வேள் வள்ளல், தனது நாட்டிற்கு மீண்டுஆட்சி நடத்தத் தொடங்கித் தன்னைச் சார்ந்தார் யாவர்க்கும் உரியசெல்வம், அதிகாரம் முதலியன வற்றை முறையாகத் திருப்பிக் கொடுத்து மன்னுயிர் யாவற்றையுஞ் செவ்விதிற் புரந்து வாழ்ந்து வந்தனர்.

பண்டைத் தமிழ் நாட்டு வரலாறு.

இப்பொழுது தமிழ் வழங்கும் நன்னாடானது உலகத்தில் உயிர்கள் தோன்றுவதற்கு முன் நீருள் நின்று வெளிவந்து இற்றை நாள் வரை நிலமாகவே திகழும் சிற்சில நிலப்பகுதிகளுள் ஒன்றாகக்கருதப் படுகிறது. நில உருண்டையானது முற்றிலும் நெருப்பு மயமாக ஆதிக்காலத்தில் இருந்தது. ஏனெனில் அது கதிரவனிடத்திலிருந்து தெறித்து விலகி அதனைச் சுற்றிவரும் கோளாக முதலில் திகழ்ந்தது. நெருப்புருண்டையின் மேல் பொருக்கு ஏற்பட்டு அவ்வுருண்டையின் உள்ளிருந்து பொருக்கின் ஊடாக வெளியே எறியப்பட்ட வெண்கல் கருங்கற்கள் மலைகளாக முதலில் உருவெடுத்தன. அக்காலத்தில் உலகில் எங்கும் உயிர்த்தோற்றமே யில்லை. விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள தென்னிந்திய நாடும் இமய மலையின் அடிப்படையும் அத்தகைய கற்பாறைகளை முதுகெலும்புகளாகக் கொண்டுள்ளன. உயிர் யாதுந் தோன்றாமல் உயிர்த்தோற்றத்திற்காக உலகம் பண்பட்டகாலம் என்பது கோடி முதல் நாற்பதுகோடி ஆண்டுவரை உள்ள முற்காலம் என நிலநூலார் கருதுகின்றார்கள். ஆதியில் தென்னிந்தியாவும் இமய மலையும் கடலாக இருந்து பின் நிலமாயின என்று தெரி

கிறது. மணல் சார்பானதும் மண் சார்பானதுமாய் அடுக்கடுக்காகச் செறிந்து உயர்ந்து ஏற்பட்ட பாறைகள் பிற்காலத்தில் தோன்றின. அவை விந்திய மலைப்பக்கத்திலும் கடப்பை முதலிய ஜில்லாக்களிலும் காணப்படுகின்றன. உயிர்த்தோற்றம் ஏற்பட்ட காலை இறந்த உயிர்களின் எலும்பு முதலிய பகுதிகள் அடுக்குப்பாறைகளில் வீழ்ந்து மூடப்பெற்று கல்லாய்த்திரிவு பட்டன.

ஆகவே, உலகிலுள்ள பாறைகள் இருவகைப் படும். நிலத்தின் உட்பகுதியிலுள்ள நிலக்கனிகள் எரிமலை முதலிய வெடிப்புகள் வழியாக வெளியே எறியப்பட்டு நிலப்பரப்பில் வீழ்ந்தமையால் உண்டாகியனவாய் உயிர்ப்பிராணிகளின் அடையாளங்கள் யாதுமில்லாத கல் பாறைகள் ஒருவகை. நிலத்தின் உயர்ந்த மேற்பகுதிகள் நீரினாலும் காற்றினாலும் படிப்படியாகப் பெயர்க்கப்பட்டு மணல்கண்டமாகவும் மண்கண்டமாகவும் ஆனமையாலுண்டாகிய [illegible]களும் மற்றொரு வகை. இவ்வகைப் பாறைகள் [illegible]லும் நீரிலும் அடுக்கடுக்காக ஏற்பட்டுள்ளன. அ[illegible] அடுக்கு கடலுள் உயர்ந்த காலத்துத் தீவாகவும், விரிவுற்றகாலத்துக் கடலுக்கு மேற்பட்டபெரிய நிலப் பரப்பாகவும் உருவெடுக்கின்றன. அவற்றின் வெவ்வேறு அடுக்குகளிற் காணப்படும் இறந்த உயிர்களின்

உடல் பகுதிகளில் வைத்து இன்ன இன்ன ஊழியில் இன்ன இன்ன பிராணிகள் தோன்றினவென்று நில நூலாரும், தொல்லுடல் நூலாரும் தீர்மானித்திருக்கின்றார்கள்.

உயிர்த்தோற்றமில்லாதகாலம் ஒரு பெரிய ஊழியாகவும், உயிர்த்தோற்றத்திற்குப் பின்னுள்ள காலத்தை முதலூழி, நடுவூழி, மூன்றாவது ஊழியாகவும் அதற்குப்பிற்பட்ட காலத்தை உலகின் வடபாகத்தில் பனிக்கட்டிச் சிற்றூழிகளாகவும் தென்பாகத்தில் வெள்ளப்பெருக்குடைய சிற்றூழிகளாகவும் அவற்றிற்கும் பின்னுள்ள காலத்தைப் பழங்கற்காலம் (Palaeolithic age), புதுக்கற்காலம் (Neolithic age), நிலக்கனிக்காலம் (metal age) எனவும் மேலை நாட்டினர் வகுத்திருக்கின்றார்கள். உயிர்த் தோற்றத்திற்குப்பின் 15 கோடி ஆண்டுகளுக்கு முன்னுள்ள காலம் வரை முதலூழி யெனப்படும். அதனை இந்திய நில நூலார் திராவிட ஊழி யென்பர். தென்னிந்தியாவில் பல இடங்களிலுள்ள மண்பாறை மணற்பாறைகளில் உடற்பகுதிகளை காணப்படவில்லை. அவை உயிர்த் தோற்றத்திற்கு முன்னேயுண்டான பழமையான பாறைகள் போலும். உயிர்த்தோற்றம் காட்டும் முதலூழிப் பாறைகளைக்காலப்பழமைபற்றி ஐவகையாக நிலநூலார் பகுத்துள்ளார்கள். அவ்

வற்றிற்குரிய உடற்பகுதிக்கூறுகள் வட நாட்டில் பஞ்சாப், காஷ்மிர், வட இமயம், பர்மா முதலிய இடங்களின் பாறைகளில் காணப்படுகின்றன. அவைகள், தாம்கடலினின்று வெளியே எழும்பினமைக்குரிய அடையாளங்களையுங் காட்டுகின்றன.

இரண்டாவது ஊழியானது பதினைந்து கோடி ஆண்டு முதல் நாலு கோடி ஆண்டு முன்வரையுள்ள காலமாகும். அது முன்னூரிய ஊழி யெனப்படும். அதை மூன்று பிரிவாக நிலநூலார் பகுத்திருக்கின்றார்கள். இந்த ஊழியிலுண்டான மாற்றங்களினாலே விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள நாடானது தென் அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவரை நீண்ட நிலப்பரப்பாக இருந்த பெரியகண்டத்தின் வடபகுதியாக விளங்கிற்று. விந்திய மலைக்கு வடக்கேயுள்ள இடம் 'தெட்டிஸ்' என்னும் பெருங் கடலால் மூடப்பட்டிருந்தது. வட ஆப்பிரிக்கா, மத்திய ஆசியா, நடு இமயம், பர்மா, சீன தேசம் என்னும் நாடுகள் அனைத்தும் அக்கடலினுள் அமிழ்ந்து கிடந்தன. தென்னிந்தியாவிலும், தென்னாப்பிரிக்காவிலும், தென்னாஸ்திரேலியாவிலும் வளர்ந்த செடிகொடிகளும் உயிர்ப்பிராணிகளும் ஒத்த இயல்புடையனவா யிருந்தன. இவ்வூழியின் அந்தத்தில் சீன தேசம் பஞ்சாப் முதலிய இடங்கள் நிலமாயின.

முதலூழியில் சிப்பி, மீன், நண்டு, புழுக்கள், கடற்பூண்டு முதலியன உண்டாயின. நத்தை, ஆமை, கடல்த்தேள் முதலியன தோன்றின காலமும் அதுவே. முதலூழியின் பிற்பகுதியில் நிலத்திலும் நீரிலும் வாழும் தவளைபோன்ற பிராணிகளுண்டாயின. முதலூழியின் அந்தத்தில் பெருவயிறுடையனவாய் நிலத்திலூர்ந்து காற்றுக்குடிக்கும் பிராணிகள் மிகுதிப்பட்டன. முதலை, பாம்பு, ஆமை முதலியன அவ்வகையைச் சேர்ந்தனவே. இரண்டாவது ஊழியில் இவ்வூர்வன மிகப் பெரிய உருவங்கள் பெற்று இன்னல்கள் விளைத்தன. சில நூறடி நீளம் உடையனவாயிருந்தன. திருச்சிராப்பள்ளி ஜில்லா அரியலூர்ப்பக்கம் அத்தகைய பிராணிகளின் எலும்புகள் முதலியன காணப்பட்டன. அவ் வூர்வனவற்றின் ஒரு வகை, பல்லிழந்து சிறகுகள் முளைத்துப் பறவைகளாயின. இரண்டாம் ஊழியின் பிற் பகுதியில் அவ்வூர்வன பலவும் மறைவுற்றொழிந்து குட்டிகளுக்குப் பாலூட்டும் தற்காலப்பிராணிகளின் மூலங்கள் தோன்றலாயின. மயிர்ப்போர்வையில்லாமையால் ஊர்வனவற்றின் கூட்டங்கள் குளிர் மிகுதியில் அழிந்தொழிந்தன. பின் தோன்றிய பிராணிகளுக்கு உடம்பில் மயிர்ப்போர்வை ஏற்பட்டுக் குளிரினின்றும் அவற்றைப்பாதுகாத்தது.

மூன்றாவது ஊழி நாலு கோடி ஆண்டு முதல் ஆறு நூறாயிரம் ஆண்டுகள் வரையுள்ள முற்காலமாகும். அது பின்றிய ஊழி யெனப்படும். அது நாலைந்து பிரிவாகப் பகுக்கப்பட்டுள்ளது. அதன் நடுப்பகுதிகளில் தற்காலமுள்ள இமய மலை, திபெத்து முதலிய பகுதிகளும், ஐரோப்பாவில் ஆல்ப்ஸ் மலையும், அமெரிக்காவில் ஆன்டெஸ் மலையும் வெளிப்பட்டுத் தோன்றின. தென்னிந்தியாவிலுள்ள மலைகளை நோக்க இமயமலை மிகவும் பிற்காலத்ததே. தென்னிந்திய மலைகளும் தென்னிந்தியாவும் முதலூழியில் தோன்றினவையே. மூன்றாவது ஊழியில்தான் தற்காலத்து விலங்குகளும் மனிதனும் தோன்றிய காலமாகும். தும்பிக்கையோடு கூடிய யானை முதன்முதல் தோன்றியது தென்னிந்தியாவிலேயே. குதிரை மத்திய ஆசியாவில் தோன்றி இந்தியாவுக்கு வந்ததென்று சில அறிஞர் கருதுகின்றார்கள்.

மனிதன் முதன்முதல் தோன்றியிருக்கக்கூடிய இடம் சாவகத்தீவென்பது பலர் கொள்கை. சிலர் குமரிமுனைக்குத் தெற்கேயிருந்த கடல் கொண்ட கண்டமென்பர். சிலர் இமய மலைக்கு அருகிலும் பஞ்சாபிலும் மனிதன் முதலில் தோன்றியிருத்தல் கூடுமெனவும், சிலர் இப்பொழுதுள்ள தென்னிந்தியாவிலேயே மனிதன் முதலில் உருவெடுத்தானென

வுங் கருதுகின்றனர். சாவகத்தீவினை ஒரு பகுதியாகப் பெற்றிருந்த கடல் கொண்ட கண்டமே மக்கள் முதலில்தோன்றிய இடமென்பதே ஆராய்ச்சியுடைய பெரும்பான்மையோர் கொள்கையாகும். நர்மதை நதி தீரத்தில் பூதாரா என்னுமிடத்தில் காணப்பட்ட ஆதிக்கல்லாயுதம், பிராணிகளின் உடற்பகுதிகள் முதலியவற்றை ஆராய்ந்தவர்கள் முதுகெலும்புடைய விலங்குகள் தோன்றிய காலத்திலேயே மக்கள் இந்நாட்டில் வாழ்ந்தனரென்று தீர்மானிக்கின்றார்கள் முதன் முதற்றோன்றிய ஆயுதங்களை யாராய்வோர் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பர்மா, இலங்கை, அந்தமான் முதலிய இடங்களில் அவற்றின் ஒற்றுமை கண்டு முதலில் தோன்றிய மக்கள் தென்னாட்டிலிருந்து உலகின் பல பகுதிகளுக்கும் சென்றரென்று ஊகிக்கின்றார்கள்.

முதலிலுண்டாகிய மக்களினம் நீகிரோவகையைச் சார்ந்திருத்தல் கூடுமென்பது உடற்கூற்று நூலார் கருத்து. முதலில் தோன்றிய நீகிரோவர்கள் வட்டத்தலையினராயிருந்தனர். அவர்கள் உலகில் பல இடங்களில் பரவிய காலை அவர்கள் தங்கிய இடங்களின் தட்ப வெப்ப நிலைமை பற்றி உடற்கூறுகளில் நிலைபெறுன மாற்றமுடையராயினர். நீகிரோ இனத்தை யொட்டியவர்கள் சீன தேசத்திற்கும்

ஆல்ப்ஸ் மலைத்தொடருக்கும் சென்று தங்கிய காலை நிறம் மாறுபடுதல் கூடும். சீன நாட்டிற்கேற்றபடி மஞ்சள் நிறமாயும் ஆல்ப்ஸ் மலைக்குத்தக்கபடி வெண்மை நிறமாயும் நிறவேற்றுமை ஏற்பட்டிருத்தல் கூடும். இடத்தினியல்பு பற்றியே உதடு, தலைமயிர் முதலியனவும் மாற்றமடையும். உரு மாற்றங்கள் இனக்கலப்புக்களாலும் ஏற்படக்கூடியனவே.

நீகிரோ இனத்தைச் சார்ந்த மக்கள் ஆப்பிரிக்காவில் நீகிரோவரெனவும், ஆல்ப்ஸ் மலைக்கருகில் ஆல்ப்ஸ் இனத்தாரெனவும், சீன நாட்டில் மங்கோலிய இனத்தாரெனவும் திரிவு பட்ட வகையினராயினபின் கடல்கொண்ட தென்னாட்டிலேயே நெடுந்தலையினராகிய பிறிதோரினத்தினர் தோன்றி இருபகுதிப்பட்டு ஒரு பகுதியார் கிழாப்பிரிக்காவிற்கும், அங்கிருந்து வட ஆப்பிரிக்கா, தென்ஐரோப்பா முதலிய இடங்களுக்கும் சென்று தங்கினரெனவும் மற்றொரு பகுதியார் தென்னிந்தியா வழியாகச்சென்று மத்தியஆசியா வட ஐரோப்பா முதலிய இடங்களில் தங்கினரெனவும் கின் முதலிய உடற்கூற்றாசிரியர்கள் கருதுகின்றார்கள்.

தென்னாட்டிற் றோன்றிய நெடுந் தலையருள், முதற்பிரிவினர் முன் திராவிடர் என்ற பகுதியாராவர்.

(தொடரும்)

இலக்கிய மாலே.

பெரியாழ்வார் வரலாறும், நூலாராய்ச்சியும்.

ஆண்டாளுக்குத் தந்தையாராகிய விஷ்ணுசித்தர் அல்லது விண்டுசித்தனென்பவர், புதுவை யென்ற சுருக்க நாமம் பெற்ற ஸ்ரீவில்லிபுத்தூரில், வேதியர் குலத்தில், முகுந்தாச்சாரியார் என்பவருக்கும், பதுமையாரென்பவருக்கும் புதல்வராக அவதரித்தார். அவர் பிறந்தநாள் ஆனிச்சுவாதி. அவரைக் கருடனுடைய அம்சமென்று வைணவர்கள் கூறுவார்கள். அவர் வல்லவ தேவனென்னும் பாண்டிய மன்னன் காலத்தினர். அவன் ஆட்சி செய்த காலம் கி. பி. 830 முதல் 862 வரையாதலால், அவருடைய காலம் ஒன்பதாவது நூற்றாண்டு என்றே கருத வேண்டியிருக்கிறது. அவர் கலியுகம் நாற்பத்தேழாவது ஆண்டில் அவதரித்தாரென்பது வைணவசம்பிரதாயம். ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள பெருமாள் கோயில் வடபெருங் கோயிலெனப்படும். அதற்கருகிலுள்ள மடவார்வளாகத்திலுள்ள சிவன் கோயில் தென்பெருங் கோயிலெனப்பட்டது போலும். வடபெருங்கோயிலென்ற சொற்றொடரில், வட என்ற சொல் ஆலிலையைக் குறிக்குமெனப்பொருள்கொண்டு, ஆலிலையாகிய பெருங்கோயிலென்று கூறுவாருமுளர்.

விஷ்ணு சித்தர், வடபெருங் கோயிலுடையா னிடத்து மிகுந்த அன்புடையராய் அவருடைய தொண்டிற்கே தனது வாழ்நாளை அர்ப்பணஞ் செய்தனர். கண்ணபிரான் கஞ்சனுக்குப் பணிசெய்து வந்த பூக்காரரிடத்தே மலர்மாலை கேட்டுச் சூடிக் கொண்டதைக்கருதித் திருமாலுக்குப் பூப்பணிவிடை செய்யத்தீர்மானித்துத் திருநந்தவனமொன்று வைத்துத் திருமாலுக்குத் திருமாலை கட்டிச் சாத்திக் கொண்டிருந்தார். அக்காலத்துப் பாண்டியமன்னன் சமய அறிவிற் சிறந்து விளங்கவில்லை. அவனுடைய முன்னோர்கள் சைவ சமயத்தில் மிகுதியாக ஈடுபட்டிருந்தனர். அவன் சமய அறிவைப்பற்றி யாதுங் கவனியாது, அரசியல் முயற்சியிலேயே காலஞ் செலுத்திவந்தான். அவன் ஒரு நாளிரவு நகர் சோதனை செய்வதற்கு வீதியிற் சென்றபோது, ஒரு திண்ணையின்மேல் ஒரு பார்ப்பனன் படுத்திருக்கக் கண்டு, அவனை எழுப்பி நீ யாரென்று கேட்க, அவன் நான் ஒரு அந்தணன்; கங்கை நீராடி வருகின்றேன் என்றனன். அரசன் அவனை நோக்கி ஒரு நல் வாக்கியம் கூறுக என்றான். அந்தணன், மழைக்காலத்தில் வேண்டியதை மற்றக்காலங்களிலும், இரவில் வேண்டியதைப் பகலிலும், முதுமைக்கு வேண்டியதை இளமையிலும், மறுமைக்கு வேண்டியதை இம்மையிலும் அறிவுடைய ஒருவன் தேடவேண்டுமென்றியம்பி

னன். அரசன் அதைக்கேட்டு மகிழ்ந்து அரண் மனைக்கு மீண்டனன். மறுநாட்காலையில் பஞ்சாங்கம் ஓதுவானாகிய தனது செல்வ நம்பியை யழைத்து மறு மைக்கு உறுதியானதைத் தேடிக்கொள்ள உபாயம் என்னவென்று கேட்டான். அவன் அதற்கு விடை யாகப் புலவர்களை ஒருங்கழைத்து மெய்ப் பரம் பொருள் யாதென்று தீர்மானித்தல் அவசியமென் ருன். அவன் உண்மையை நிலை நாட்டுவதற்குப் பரிசாக, மிகுந்த பொன்னை ஒரு கிழியிற்கட்டுவித் துப் புலவர்களைத்திரட்டும்படி கட்டளையிட்டான். அங்ஙனம் வந்த புலவர்களுள் ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங் கோயிலுடையான் அருள் பெற்ற விண்டு சித்தர் ஒருவராக விளங்கினர். அபிமானதுங்கனை செல்வநம்பி ஆழ்வாரை அரசனுக்கு அறிமுகப் படுத்தினர். ஆழ்வாருக்கு வேதப்பயிற்சி இல்லை யென்று சில வித்துவான்கள் கூறினர்கள். ஆழ்வார், திருமாலின் திருவருளினாலே அக்கடவுளது பரத்து வத்தை நிலைநாட்டிப் பொற்கிழியைப் பெற்றுப் பட்டர் பிரானென்ற திருநாமம் சூட்டப்பெற்றார். வந்திருந்த புலவர்கள் எத்தன்மையரென்று விளங்க வில்லை. விண்டுசித்தராகிய ஆழ்வாரை யொழிந்த பிறர், ஏகான்ம வாதம் கூறுவாராயிருந்தாரெனின் அவர்களை ஆழ்வார் வெல்வது எளிதே.

ஆழ்வார் யானையின்மேலேற்றப்பெற்றுக் குடை, சாமரம் முதலான விருதுகளுடன் நகர்வலம் வந்த

காலே, வானில் திருமால் திருமகளுடன் பெரிய திருவடிமேலேறி விண்ணவர் தன்னைச் சூழ்ந்து வழிபடுந் திருக்காட்சியை ஆழ்வார்க்கு நல்கியருளினர். ஆழ்வார் பெருமானது இளந்திருக்கோல அழகில் ஈடுபட்டு, யானைக்கழுத்தின் மேல் கிடக்கும் மணிகளைத் தாளமாகக்கொண்டு திருப்பல்லாண்டு பாடியருளினர்.

பின்னர், புதுவைக்கு மீண்டு தான் பெற்ற நிதியினை வடபெருங்கோயிலுடையான் திரு முன்னே வைத்து விட்டுத் தன்னுடைய பழைய பணிவிடையாகிய திருமாலைப் பணிவிடையை மேற்கொண்டனர்.

தன் அருமைப்புதல்வியாகிய ஆண்டாளைத் திருவரங்கப்பெருமானுக்குச் சமர்ப்பித்த செய்தி ஆண்டாள் சரித்திரத்திற் கூறப்பட்டுள்ளது.

பூமாலைப்பணிவிடையோடு ஆழ்வார் பாமாலை சாத்துதலையும் மேற்கொண்டு, திருப்பல்லாண்டாகப் பன்னிரண்டு திருப்பாட்டு அருளிச்செய்தமையோடு பெரும்பாலும் கண்ணபிரான் வரலாற்றுச் சிறப்புகளை, நானூற்றறுபத்தொன்று செய்யுட்களடங்கிய பல பதிகங்களாக அமைத்தருளினர்.

இவ்வாழ்வாருடைய திருப்பாசுரங்களனைத்தும் பெரியாழ்வார் திருமொழியென வழங்கப்பெறும். ஆழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருவகைத்தொண்டும்

இயற்றிப் பலநாள் வாழ்ந்து, திருமால் திருவடிப்பேறெய்தினர்.

பெரியாழ்வார் திருமொழியாராய்ச்சி.

பெரியாழ்வார் திருமொழியுள் அங்கங்கே கடவுட்டன்மையைக் குறிக்கும் சொற்றொடர்கள் வந்துள்ளன. இமையவர்க்கென்றும் அரியாய், எண்ணற்கரிய பிரானை தாமோதரன், அச்சுதன், காரணன், சதுரன், மாமாயன், எதிரில் பெருமை யிராமனை மல்லாண்ட திண்டோள் மணிவண்ணன், உலகு படைத்துண்ட மணிவயிறு, அந்தமொன்றிலாத ஆயப்பிள்ளை ஊழியாயினாய், அசுரர்கள் தலைகளை இடரும் எம்புருடோத்தமன் என்பவைகளால் தமது கடவுளுடைய வரம்பிலாற்றலைக் குறிப்பிட்டார். சைவர்கள் அட்டமூர்த்தியென்று கடவுளைக்கூறுவது போல இவரும் திருமாலை நாலிரு மூர்த்தி என்கின்றார். மண்ணொடு நீரும், எரியும் காலும், மற்றுமாகாசமுமாகி நின்றாய் என்ற விடத்துக் கடவுளுக்கு ஐம்பூத வடிவங்கூறப்பட்டது.

"மண்ணும் மலையும் மறிகடல்களும் மற்றும் யாவுமெல்லாம்
திண்ணம் விழுங்கி யுமிழ்ந்ததேவனைச்சிக்கென நாடுதிரேல்"

என்றமையால் எல்லாவற்றையும் ஒடுக்கி மீண்டவன் தமது கடவுள் என்றார். இதனால் கடவுளின்

தம் வயமுடைய கூறிய வாக்கும் தம் வயமுடைய கடவுளுக்குப் பிற தேவர்கள் அடங்கினவர்களென்பது தெளிவு. அதனை உணர்த்துவான் அமரர் பெருமான் அமரர் முதல் தனி வித்தினை

"நீரேறு செஞ்சடை நீலகண்டனும் நான்முகனும் முறையால்
சீரேறு வாசகஞ்செய்ய நின்ற திருமாலை"

"இந்திரனோடு பிரமன் ஈசன் இமையவரெல்லாம்
மந்திரமாமலர் கொண்டுவந்து வணங்கிட நின்றார்"

"ஒற்றை விடையனும் நான்முகனும்
உன்னையறியாப் பெருமையோனே"

"எருத்துக்கொடி யுடையானும் பிரமனுமிந்திரனும்
ஒருத்தருமிப்பிறவி யென்னு நோய்க்குமருந்தறிவாரில்லை"

என்னும் வாக்கியங்களால் அயனும் அரனும் திருமாலுக்கு அடங்கினவர்களென்பது குறிக்கப்பட்டது. மாணிக்கம் கட்டி என்னும் பதிகத்தில் பிரமன், இந்திரன், ஈசன், வைச்சிரவணன் முதலியோர் கண்ணபிரானுக்குத் தொட்டிலும் நகைகளும் காணிக்கை கொடுத்தனரென்றனர். இதற்கு மச்ச புராணத்துள் ஒவ்வொரு கற்பத்தில் மும்மூர்த்திகளுள் ஒவ்வொருவருக்கு முதன்மை கூறப்படுமென்றும், அங்ஙனம் முதன்மை கூறப்படுகின்றவர்க்கு மற்றிருவர்களும் அடங்கினவர்களென்றும் அம்மூவருக்கும் வேறாகவே முழுமுதற்கடவுள் உளனென்றும், குறித்திருப்பதால் திருமாலுக்கு இங்கே கூறும் முதன்மை, சுவேதபராக

கல்பமாகிய இக்கல்பத்தாக்குப் பொருந்துவதே. இன்னொரு முறையால் நோக்குமிடத்துப் பத்துத்திசைகளுள் ஈசான திசைக்கு உருத்திரனும், உச்சித் திசைக்குப் பிரமனும், அடித்திசைக்குத் திருமாலும் உரிய தெய்வங்களாவர். இவர்களே திசைத்தெய்வங்களுள் மும்மூர்த்திகளாவர். மூவர் காரியமும் திருத்து முதல்வனை யென்றவிடத்து மூவரென்றது அயன், அரன், இந்திரன் என்பவர்களே. அங்கே மூவரென்பது மும்மூர்த்திகளைக் குறிக்குமாயின் அவரின் வேறான முழுமுதற்கடவுளை ஆழ்வார் குறித்ததாகக்கருதல் வேண்டும். ஆனால் பெரியாழ்வார் ஈசன், பிரமன், இந்திரன் என்பவர்களையே பிறவிடங்களில் குறித்திருக்கின்றனர். ஆதலால் அங்ஙனம் கருத இடமில்லையெனினும், மூவரை மும்மூர்த்திகளாகக்கொள்ளுமிடத்து பிரகிருதி மாயையின் முடிவிலேயுள்ள கடவுளையே திருமால் மதத்தினர் குறித்தல் கூடும். பிரகிருதி மாயைக்கு மேலுள்ள தத்துவங்களை அவர்கள் குறியாமையின் அவர்கள் குறுந்தெய்வம் இருபத்து நாலு தத்துவங்களு முள்ளடங்கிய பிரதிட்டாகலைக்கு அதிபதியாகிய அரியே யென்பது சைவ நூலார் கொள்கை. ஆராயுமிடத்துப் பெரியாழ்வார் கூறும் திருமால் அண்டத்துள் உள்ள மும்மூர்த்திகளுளொருவராகிய திருமாலே யென்பது தெளிவு. அவரையே பிற இருவர்களும் பெரிதாக்க்

கொண்டார். கங்கைப் பெருமை கூறுமிடத்தும்

"நலந்திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும்,
நாரணன் பாதத்துழாயும் கலந்திழி புனல்"

என்றது காண்க.

உலக ஒடுக்கத்தில் பிரணவ வடிவாகி ஆலினிலையின்கண் வளர்ந்த நட்பனென்பார் ஆலினிலை வளர்ந்த சிறுக்கனென்றார். பிரளய காலத்தில் வெண்ணிறமாகத் தோன்றும் வெள்ளத்தையே பாற்கடலுக்கு ஒப்பாக்கக்கருதுவதுமுண்டு. அதில் படைப்பு முதலிய செயலில்லாமல் ஞானவடிவாய் நிற்கின்ற பெருமானை, அறிதுயில் கொள்வதாகக் கருதுவது வைணவ சம்பிரதாயம். தூக்கம் மாத்திரம் இருக்குமாயின் அது உயிரின் தமோகுணத்தன்மையாமேயன்றி கடவுட்டன்மை யாகாமையின், பெரியாழ்வார் அதனைக் கள்ள நித்திரை யென்றார். வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாக விரித்ததன்மேலே கள்ள நித்திரை கொள்ளுகின்ற மார்க்கம் என்றார். பிரளய வெள்ளத்தையும் அவன் வடிவமாகக் கருதுதலாலும் எல்லாமடங்கிய பிரகிருதியும் அத்தன்மையதே யாதலாலும் அங்கே அவன் அறிவாய் விளங்குதலாலும் தனிக்கடலே, தனியுலகே, தனிச்சுடரே என்றார். திருமாலின் வியாபகத்தை மூவடியால்

உலகளந்த கதையை வைத்துக்கூறுதல் மரபு. "தாரகையின் உலகம் தடவிய தன் புறமும் விம்ம வளர்ந்தவனே" என்றவிடத்து நட்சத்திர மண்டலத்தையுங் கடந்து அப்பாற்சென்றமை குறிக்கப்பட்டது. திருமகள் பாதுகாப்பிற்காகத் திருமாலின் மார்பினில் புகுந்தாள் என்பார். "செய்யவள் நின்னகலம் சேமமெனக்கருதி" என்றார். "மூன்றடி நிமிர்ந்து மூன்றினில் தோன்றி மூன்றினில் மூன்றுருவானான்" என்றவிடத்தே வாமனாவதாரத்துடன் முக்குணங்களில் மூவராய்த்தோன்றி, அகர வுகர மகாரமாகிய மூன்று மந்திர எழுத்தினால் அயன், அரி, அரனென்னும் மூன்று வடிவினனானான் என்பது குறிக்கப்பட்டது. திருமாலின் பத்தவதாரமும் ஆழ்வார் ஒரு செய்யுளின் ஈரடியின் குறித்துள்ளார். அது வருமாறு:

"தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏன பாஅரியாய்க்குறளாய்
மூவுருவில் இராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான்
[கோயில்"

கடவுள் வரம்பிலின்பமுடையானென்பான் எண்ணத்துள் என்றும் இருந்து தித்திக்கும் பெருமானே, எங்கள் அமுதே, இன்பம் அதனை யுயர்த்தாய், மேலிருங் கற்பகத்தை, ஆராவமுதம், செல்வன், நண்பன், மருத்துவன் முதலிய வாக்கியங்களை வழங்கினர். பணிவும் அறிவும் உடையாரைக் கவரவல்ல தன்மை

யுடையான் என்பார் "மடங்கொள் மதி முகத்தாரை மால் செய்யவல்ல என் மைந்த" என்பது கவித்திறன். பரமேட்டி, பரமாத்மன், நின்மலன், சிற்றமிலாதான் என்னும் பதங்கள், இறைவன் இயல்பாகவே பாசம் நீங்கினவ னென்பதைத் தெரிவிக்கும். நான்மறையின்பொருளே, வேதப்பொருளே, வித்தகனே, செஞ்சொல் மறைப்பொருளாகி நின்ற தேவர்கள் நாயகனே, நால்வேதக் கடலமுது ஆமாறறியும் பிரானே என்னுஞ் சொற்றொடர்கள், கடவுளின் முற்றறிவைக் குறிப்பன. வள்ளல் தொண்டர் நெஞ்சிலுறைவாய், நச்சுவார் முன்னிற்கும் நாராயணா, என்னுவார் இடரைக் களைவானே, கதிரோன் மண்டலத்தேற்றி யருள் புரிவை, முதலிய சொற்றொடர்கள் பேரருளுடைமையை உணர்த்துவன.

திருப்பல்லாண்டு எட்டாவது பாட்டில், இவ்வுலகிலே நல்வாழ்வு தமக்குத் திருமால் அருளியதாகப் பெரியாழ்வார் குறித்திருக்கின்றார்.

"செய்யிடை நல்லதோர் சோறு நியதமு
மத்தாணிச் சேவகமுங்
கையடைக் காயுங் கழுத்துக்குப் பூணொடு
காதுக்குக் குண்டலமும்
மெய்யிடை நல்லதோர் சாந்தமுந் தந்தென்னை
வெள்ளுயி ராக்கவல்ல
பையுடை நாகப் பகைக்கொடி யானுக்குப்
பல்லாண்டு கூறுவனே"

பெரியாழ்வார் திருமாலின் உருவத்தைப்பற்றிப் பேசுமிடத்தே அப்பெருமானுடைய நிறத்தைப் பல பொருள்களுக்கு ஒப்பிட்டுள்ளார். கார்முகில் வண்ணன், ஒளிமணி வண்ணன், காயாமலர் நிறவா, நீல நிறத்துச் சிறுபிள்ளை, கடல் வண்ணன் என்னுஞ் சொற்றொடர்கள் அப்பெருமானின் கரு நிறத்தைக் குறிப்பினும், பாற்கடல் வண்ணன் என்னும் வாக்கியம் திருமாலுக்கு வெண்ணிறமுண்டென்று குறிப்பது போலும். நீல நிறமே பெரிதும் நூல்களுள் பேசப்படுகிறது.

"குன்றுகொழுமுகில் போல்
குவளைகள் போல் குரைகடல் போல்
நின்றுடு கணமயில்போல்
நிறமுடைய நெடுமாலூர்"

என்றது காண்க. பீதகவாடை என்பதால் திருமால் பீதாம்பரம் அணிந்து விளங்குவது குறித்த வாறும். "தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன" என்பதால் துழாய்மாலை விதந்தோதப்பட்டது. சதுப்புயன் என்றமையால் நாற்றோள் வடிவம் குறிக்கப் பட்டது. மார்பினில் வாழ்கின்ற மங்கையும், தண்டொடு சக்கரம் சார்ங்கமேந்துந்தடக்கையும், நாகணைப் பள்ளியும், வன்புற்றரவின் பகையாகிய கருடக் கொடியும் பெரியாழ்வார் பதிகங்களில் பல இடங் களில் பேசப்படுகின்றன. நமோநாராயணாய என்

னும் எட்டெழுத்து மந்திரத்தோடு பிரணவமாகிய மூன்றெழுத்து மந்திரமும் அவ்வாழ்வாரால் விதந்தோதப்பட்டது. “மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால் மூன்றெழுத்தாக்கி மூன்றெழுத்தை ஏன்று கொண்டிருப்பார்க்கு இரக்கம் நன்குடைய எம்புருடோத்தமன்” என்றது காண்க. “மூலமாகிய ஒற்றை எழுத்தை மூன்று மாத்திரையுள்ளெழ வாங்கி வேலை வண்ணனை மேவுதிராகில் விண்ணகத்தினில் மேவலுமாமே” என்றதுங்காண்க. ஒரு மொழியாகிய அதனைக் கண்ணன் உபதேசித்தல் வழக்கமென்பார். “ஒன்றேயுரைப்பான் ஒரு சொல்லே சொல்லுவான்” என்றார். ஆயுதங்கள் பலவற்றையும் தொகுத்துரைத்துவான்

“உழுவதோர் படையும் உலக்கையும் வில்லும்
ஒண்சுடராழியும் சங்கும்
மழுவொடு வாளும் படைக்கலமுடைய
மால் புருடோத்தமன்”

என்றார்.

திருமால் அவதாரங்களுள் கண்ணபிரான் அவதாரத்தையே பெரியாழ்வார் பெரிதும் சிறப்பித்துள்ளார். ஆயர்கள் போரேறே, ஆயர்குலக்கொழுந்தினை, ஆயர்பாடிக் கணிவிளக்கே என்னும் சொற்றொடர்கள் கண்ணபிரான் குலத்தைக் குறிப்பன. வசுதேவர்க்குத் தேவகியால் அத்தத்தின் பத்தா நாள் தோன்

றிய அச்சுதன் என்றமையால் கண்ணபிரானது இயற்கைப்பெற்றோர்கள் இன்னாரென்பது விளங்கும். நந்தகோபன் சிறுவா என்பது கண்ணனது வளர்ப் புத்தந்தையைக்குறிக்கும்.

"சீதக்கடலுள் ளமுதன்ன தேவகி
கோதைக்குழலா ளசோதைக்குப் போத்தந்த
பேதைவிழக்கு"

என்றமையால், தேவகி அமுதம் போலப்பெற்ற அசோதைக்கு வளர்க்கும் பொருட்டுக் கொடுத்த குழந்தை கண்ணபிரானென்பது குறித்தவாறு: ஓணத்தான் உலகாளுமென்பார்களே என்றதனால் கண்ணன் பிறந்த நாள் திருவோணமாகும். கண்ண பிரானுடைய உறுப்பு வனப்பினைச் சீதக்கடலென் னும் பதிகத்துள் பெரியாழ்வார் அழகாக வர்ணித் துள்ளார். குழந்தை கால் விரல்களைச் சுவைத்து உண்ணுவதையும், முழந்தாள்களால் தவழுவதையும், தொடையும், இடையும், உந்தியும், உதரமும், மார்பும், தோளும், சங்கு சக்கரம் பொருந்திய கைகளும், அண் டம் விழுங்கிய கண்டமும், சிவந்த இதழும், தூய நாக்கும், வாக்கும், நயனமும், புருவமும், குழை போன்ற காதும், அழகிய நெற்றியும், குழலும் வனப் பிற் சிறந்திருந்தமையையும் அப் பதிகத்துள் நன்கு எடுத்தியம்பினர். தன் முகத்து என்னும் பதிகத்துள் குழந்தைக்காக அம்புலியை யழைக்கும் அம்புலிப்

பருவ நயங்கள் காணப்படும். மாணிக்கங்கட்டி என்னும் பதிகத்துள் திருத்தாலாட்டு நன்கமைந் துள்ளது.

அம்புலிப்பருவத்தின் சாரம் உற்று நோக்கத் தக்கது. யசோதை, மதியைப்பார்த்துக் கூறுவதாவது: நெற்றியிலணிந்த சுட்டியசைந்து அசைந்து ஆட, காலிலணிந்துள்ள பொன் கிண்கிணிகள் ஒலிப்ப, என் மகன் கோவிந்தன் தவழ்ந்து சென்று புழுதியில் அளைந்து கூத்தாடுகின்ற அழகை இளஞ்சந்திரனே! உன் முகத்தில் கண்ணிருந்தால் நீ பார்த்து மகிழ். எனது இன்னமுதம் போன்ற சிறுவன் தனது அழகிய சிறு கைகளால் உன்னைக்காட்டிக்காட்டி யழைக்கின்றான். அவனோடு விளையாட விரும்புவாயானால் நீ மேகத்தில் மறையாமல் மகிழ்ந்தோடிவா. உனது ஒளிவட்டம் எவ்வளவு பிரகாசமாயிருந்தாலும் என் மகன் திருமுகத்திற்கு நீ ஒப்பாகமாட்டாய். உன்னை யழைக்கின்ற திருக்கைகள் நோவதற்கு முன் நீ விரைந்தோடிவா. அவன் என் ஒக்கலைமேலிருந்து உன்னையே சுட்டிக்காட்டுகின்றான். நீ பிள்ளை பெறாத மலடனில்லையானால் வெறுப்பில்லாமல உடனே வா. அமுதம் ஊறும் மழலை நிரம்பிய மென்சொல்லால் உம்மை யழைக்கின்றான். உன்னைக் கூவக் கூவ நீ கேளாமற் போனால் உன் காதிற் றுளையில்லை போலும். சிறு பையனென்று நீ அவனை இகழாதே.

ஊழிமுடிவில் ஆலிலையில் கண்வளர்ந்த பெருமான் இவன். அவன் கோபித்தால் மேலே பாய்ந்து உன்னைப் பிடித்துக்கொள்ளுவான். என் இளஞ்சிங்கத்தைச் சிறியவனென்று நீ இகழாதே. அப்படி இகழ்ந்த மாவலியினிடத்தில் அவன் பெருமையைக் கேள். நீயும் பிழை செய்தால் அவன் பட்டபாடு படுவாய். அவன் சக்கரத்திற்குத் தப்பி நீ பிழைக்க விரும்பினால் விரைவில் மகிழ்ந்தோடிவா என்பதே.

கண்ணனது செங்கீரைப்பருவம், உய்ய உலகு என்னும் பதிகத்துள்ளும், சப்பாணிப் பருவம் மாணிக்கக்கிங்கிணி என்னும் பதிகத்துள்ளும், தளர் நடைப்பருவம், தொடர் சங்கிலி என்னும் பதிகத்துள்ளும் இயம்பப்பெற்றன. வருகைப்பருவம் - பொன்னியற்கிண்கிணி யென்னும் பதிகத்துட் காண்க குழந்தை பின்னே வந்து தழுவுதலாகிய புறம்புல்குதல் என்னுந் துறை "வட்டு நடுவே" என்பதனுள் அழகாக விரிக்கப்பட்டது.

இரண்டாம் பத்தின் முதற் பதிகத்துள் கண்ணன் பூச்சி காட்டுதல் வர்ணிக்கப்பட்டது. அதனுள் கண்ணன் அவதாரத்தில் நிகழ்ந்த அருஞ்செயல்களே மிகுதியும் பேசப்படினும் இராமவதாரச்செயல்களும் பிறவும் ஒரோ ஒரு பாடல்களிற் குறிப்பிக்கப்படுகின்றன.

"கொங்கை வன்கூனி சொற்கொண்டு குவலயத்
துங்கக்கரியும் பரியு மிராச்சியமும்
எங்கும் பரதற்கருளி வன்கானடை
அங்கண்ண னைப்பூச்சி காட்டுகின்றான் அம்மனேயப்
[பூச்சி காட்டுகின்றான்"

என்றது காண்க.

இரண்டாவது பதிகத்துள், கண்ணனை யசோதை முலையுண்ண அழைக்கும் அன்புச்செயல் அழகாக வர்ணிக்கப்பட்டது. என்னேற்றான் கொல்லெனுஞ் சொல் தாயார்மீது வைத்துக்கூறப்பட்டது.

"என்ன நோன்பு நோற்றாள் கொலோ
இவனைப்பெற்ற வயிறுடையாள்
என்னும் வார்த்தை யெய்துவித்த
இருடீகேசா! முலையுணாயே"

இப்பதிகத்தின் முதற்செய்யுளில் முலையுண்ண என்பதற்கு 'அம்மமுண்ண' என்ற சொற்றொடர் வழங்கப்பட்டுள்ளது. அம்மமென்பது உலகவழக்கச் சொல்போலும். அம்மமுண்பதின் இயற்கை நலந் தோன்ற ஒரு திருப்பாடல் அமைந்துள்ளது.

"இருமலைபோ லெதிர்ந்தமல்ல ரிருவரங்க மெரிசெய்தாயுன்
திருமலிந்து திகழ்மார்வு தேக்கவந்தென் னல்குலேறி
ஒருமுலையை வாய்மடுத் தொருமுலையை நெருடிக்கொண்டு
இருமுலையும் முறைமுறையா யேங்கி யேங்கி இருந்துணாயே."

இச் செய்யுளில் 'அல்குல்' என்றது முந்தானை அல்லது மடி என்ற பொருளில் வந்தது காண்க.

இரண்டாம் பத்தின் மூன்றாவது பதிகத்துள், காது குத்துவதற்குக் கண்ணனை யழைப்பது வர்ணிக் கப்பட்டது. காது குத்துதற்குக்காதில் திரியை எரியாமலிடுவது வழக்கம்போலும். 'கனகக்கடிப்பு', 'வைரக்கடிப்பு' என்னுஞ் சொற்களால் பொற்கடுக் கன், வைரக்கடுக்கன் முதலியன அக்காலத்தில் அணி யப்பட்டனவென்று தெரிகிறது. இப்பதிகத்தின் ஒவ்வொரு பாட்டில் ஒவ்வொரு திருப்பெயர் பேசப் படுதலின், பன்னிரு நாம மகிமை யெனுந் தலைப்பு இதற்குக்கொடுக்கப்பட்டுள்ளது. கேசவன், நாராய ணன், மாதவன், கோவிந்தன், விட்டு, மதுசூதனன், திரி விக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், இருடீகேசன், பற்பநாபன், தாமோதரன் என்னும் திருமாலின் பன்னிரு நாமங்கள் வந்துள்ளன. இம்முதற் பதிகத் துள் 'பேய்ப்பால் முலையுண்ட பித்தனே' யென்ற மையால், பித்தன் என்ற சொல் திருமாலுக்கு வழங் குவதுங்காண்க. கோபாலன், அச்சுதன், கடல் வண் ணன் முதலிய பெயர்களும் வந்துள்ளன.

இரண்டாம் பத்தின் நாலாவது பதிகத்துள் நீராடுதற்குக் கண்ணனை யழைத்தல் பேசப்படுகின் றது. நீராடுதற்கு எண்ணெய், புளிப்பழம், நெல், மஞ்சள், செங்கழுநீர் முதலியவைகள் பயன் பட்டன போலும். வாசச் சாந்தும், மையும் நீராடிய பின் அணியும் பொருள்களாகும். கன்றுகள் செவியிற்

கட்டெறும்பு பிடித்திடல், எண்ணெய்க்குடத்தை யுருட்டுதல், கண்ணைப் புரட்டி விழித்தல், இளம் பிள்ளைகளை கிள்ளி யெழுப்புதல், கன்றின் வாலில் ஓலை கட்டுதல், உதிர்ந்த கனிகளை யெடுத்தெறிதல், பாம்பைப்பிடித்தாட்டுதல் முதலிய சிறுவர் விளை யாட்டுகள் இப்பதிகத்துட்பேசப்பட்டன.

ஐந்தாவது பதிகத்துள் குழந்தையின் தலை மயிரை வாரக் காக்கையை யழைத்தல் பேசப்படு கின்றது. அடுத்த பதிகத்துள் காக்கையைக் கோல் கொண்டு வரும்படி ஏவுதல் காணப்படும்.

ஏழாவது பதிகத்துள் ஆனிரை மேய்க்கும் கண் ணனைப் பூச்சூடுவதற்கு அழைக்கும் முறை காணப் படும். சண்பகம், மல்லிகை, பாதிரி, செங்கழுநீர், புன்னைப்பூ, குருக்கத்திப்பூ, இருவாட்சி, கருமுகைப் பூ முதலியன சூடத்தகும் பூக்களாகக்குறிக்கப்பட் டன. எட்டாவது பதிகத்துள் கண்ணனைக் காப்பிடு தற்கழைத்தல் காணப்படும்.

ஒன்பதாவது பதிகத்துள் கண்ணபிரானுடைய வெண்ணெய் திருடுதல் முதலிய விளையாடுதல்களால் வருந் தீங்குகளை யசோதைக்கு யாதவ குல மகளிர் குறை கூறுதல் வர்ணிக்கப்பட்டது. பத்தாவது பதி கமும் அத்தகையதே.

மூன்றும் பத்தினுள் முதற்பதிகத்துள், பேய் முலையுண்ட கண்ணனுக்கு அம்மந்தருவதற்குத் தாய் அஞ்சுவது குறிக்கப்பட்டது. கழலடி நோவக் கன்றின் பின் கண்ணனையனுப்பினதற்காகத் தாய்மனங் கரைந்திரங்கல் இரண்டாவது பதிகத்துள் விளக்கப் பட்டது. கன்று மேய்த்துவரும் கண்ணன் வரவைக் கண்டு அன்னை மகிழ்தல் மூன்றும் பதிகத்துள் காணப் படும். தழையும் கண்ணியுமணிந்து, குழலும் மத்தளமும் ஒலித்துக் காலிப்பின் வருகின்ற கோவிந்தன் வருகையைக்கண்ட மங்கைமார் மழை வருகின்றதோ என்று பார்க்கச்சென்று, அவனது திருமேனியழகில் ஈடுபட்டமை நாலாவது பதிகத்துள் வர்ணிக்கப்பட்டது. கோவர்த்தனகிரியைக் குடையாகக் கண்ணன் பிடித்து நின்றமை ஐந்தாவது பதிகத்துட் காணப் படும். மலையைக் குடையாகப்பிடித்தபோது அதனால் ஒரு வகை வருத்தமும் கண்ணனுக்குத்தோன்றுமையின், அது ஒரு கண்கட்டி வித்தைபோலிருந்த தென்பார்.

"கொடியேறு செந்தாமரைக்கை விரல்கள்
கோலமு மழிந்தில வாடிற்றில
வடிவேறு திருவுகிர் நொந்துமில
மணிவண்ணன் மலையுமோர் சம்பிரதம்"

என்றார்.

ஆறாவது பதிகத்துள், கண்ணனின் குழலூதும் இனிமையை யுணர்ந்து சிறுமியர் உள்ளம் பூரித்ததும், மங்கைமார் மயக் கொண்டதும், வானர மகளிர் நாணுற்றதும், தும்புரு நாரதர் அஞ்சியதும், வானவர் ஆயர்பாடியில் கண்ணன் பின் போனதும், பறவைகளும் பசுக்களும் செவி சாய்த்ததும், மான்கணங்கள் சித்திரங்கள் போல நின்றதும், மரங்கள் தேன்மாரி பொழிந்ததும் வர்ணிக்கப்பட்டன.

ஏழாவது பதிகத்துள், அறிவு முதிராத இளங் கன்னியர் மணிவண்ணன்பால் மாறுறுதல் வியக்கப் பட்டது. கண்ணன் பின் சென்ற மகளுக்காகத் தாய் வருந்துதல், எட்டாவது பாகத்துட் காணப் படும். கண்ணன் பெருமையைக் கூறிப் பெண்கள் உந்திபறத்தலாகிய விளையாட்டுச் செய்தல், ஒன்பதாவது பதிகத்தில் விளங்கும். சீதைக்கு அநுமன் தெரிவித்த அடையாளங்கள் பத்தாவது பதிகத்துள் வரிசைப்படுத்தி ஓதப்பட்டன.

நாலாம் பத்தினுள் திருமாலிருஞ்சோலை, திருக் கோட்டியூர், கண்டம் என்னும் பதி, திருவரங்கம் முதலிய தலங்களின் பெருமையும், நாரணன் பெயரைப் பிள்ளைகளுக்கு இடுதலாலுண்டான நன்மையும் பிறவும் பேசப்படுகின்றன.

ஐந்தாம் பத்தின் முதற்பதிகத்துள் வாக்குத் தூய்மை வேண்டுமென்றும், வாக்குத்தூய்மை யில்லாத வாழ்த்தினையும் கண்ணன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் ஆழ்வார் வேண்டுதல் காணப்படும். நாடோறும் கடவுளை வணங்காவிடில் உணவும் துயிலும் தமக்கு வேண்டுவதில்லை யென்று குறிப்பித்தார்.

"உன்பாதம் நண்ணாநாள் வைதத்துறுமாகில்
அன்றெனக் கவை பட்டினி நாளே"
"துள்ளம் சோரத் துயிலணை கொள்ளேன்"

என்றது காண்க. திருமால் காப்பினால் நோய் நீங்குதல் இரண்டாம் பதிகத்துட் கூறப்பட்டது. மூன்றாவது பதிகத்துள் துக்கச்சுழலையினீங்கி இறைவனைக் கண்டபின் அவனை விட்டு விடுவதில்லை யென்னுங்கருத்து விதந்தோதப்பட்டது.

"துக்கச்சுழலையைச் சூழ்ந்து கிடந்த வலையையறப்பறித்து
புக்கினிற் புக்குன்னைக் கண்டுகொண்டே னினிப்போக
விடுவதுண்டே"
"வளைத்துவைத்தே னினிப்போகலொட்டேனுன்
றனித்திர ஞாலங்களால்
ஒளித்திடில்நின் றிருவாணை கண்டாய்நீ
யொருவர்க்கு மெய்யனல்லை"

ஐந்தாம் பத்தின் நாலாவது பதிகத்துள் இறைவன் திருவருளுக்குத் தான் உரிமைபெய்திப் பிறவி நீங்கினமையைப் பெரியாழ்வார் இயம்பினர்.

"உன்னைக்கொண் டென்னுள் வைத்தேன்
உன்னையும் என்னிலிட்டேன்"

என்ற அடி பொருள் நயமுடையது.

"பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்தென்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ
தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகே யென்றென்று
உனக்கிடமா யிருக்கவென்னை யுனக்குரித்தாக்கினையே"

தொல்காப்பியப்
பொருளதிகாரக்கருத்து
அல்லது
பண்டைத்தமிழர் நாகரிகம்.

தொல்காப்பியமே இப்போதுள்ள எத் தமிழ் நூலுக்கு முற்பட்ட முழுத்தமிழ் நூலென்பது தமிழ் மாணவர் யாவரும் நன்கறிந்ததாகும். அந் நூற் பொருளதிகாரமானது பண்டைத் தமிழர் பழக்க வழக்கங்களையும், நூன் முறைகளையும், பிற சிறப்புக்களையும் ஆய்ந்தறிதற்குப் பேருதவி புரியும் வெற்றி வாய்ந்ததாகலின், அதன்கட்போந்த கருத்துக்களை அறிந்து கொள்ளுதல் தமிழ் கற்பார் கடமையாகும். அவைகள் எளிதின் விளங்குதற்பொருட்டு இவ் வுரைநடை நூல் இயற்றப்படுகின்றது.

தொல்காப்பியமானது குமரியாறு தமிழ் நாட்டின் தென்னெல்லையாக விளங்கிய காலத்தே தோன்றியது. 'குமரித் தீம்புனல்' என்பதைக் காக்கை பாடினியார் எல்லையாகக் குறித்தமை காண்க. குமரியாறு கடல் கொள்ளப்பட்ட பின் கடைச்சங்கம் நிறுவப்பட்டது. கடைச்சங்கத் தொடக்கமும், பாரத காலமு மொன்றெனலாம். ப்ாரதப்போர் நடந்தது

கி. மு. 1200-க்கு முன்னன்றிப் பின்னில்லை. அதற்கு முன் இராமாயணப் போர் நிகழ்ந்தது. வால்மீக ராமாயணத்துள், இடைச்சங்கமிருந்த கபாடபுரம் குறிக்கப்பட்டிருத்தல் முதலிய பல காரணங்களால், இடைச்சங்க காலமும் இராமாயண காலமுமொத்துள்ளன. இடைச்சங்க காலம், கி. மு. 2000 க்கு முற்பட்டதென்ன இடமிருத்தலின், இடைச்சங்க நூலாகிய தொல்காப்பியமும், அத்துணை காலத்திற்கு முன்னே தொடங்கி யிருக்கவேண்டும். தொல்காப்பியத்தின் சில பகுதிகள் பிற்காலத்தனவென்னில், அப்பகுதிகள் பிற்காலத்தே சேர்க்கப்பட்டனவென்று கொள்ளுவதே பொருத்தமாம். அப்பகுதிகள் இயற்றப்பட்ட காலமே ஆகித் தொல்காப்பியத்தின் காலமென்பது பொருந்தாது. பாரத காலத்திலே வியாசர் வடமொழி வேதங்களை நான்காக வகுத்தனர். அவ்வகுப்புக்கு முன்னேயே தொல்காப்பியம் நிலவிற்றென்பது ஆசிரியர் நச்சினார்க்கினியர், தொல்காப்பியப்பாயிரத்துட் போந்த நான்மறை, வியாசர் வகுத்த இருக்கு, யசுர், சாம, அதர்வணமல்லவென்று தெரித்தமையால் விளங்கும். வடமொழியாளர் கலப்பு, இராமாயண காலத்திற்கு முன்னேயே ஏற்பட்டதாகும். அக்கலப்புக்குப் பின்னேயே தொல்காப்பியம் ஏற்பட்டிருத்தல் கூடும்.

தொல்காப்பியர் காலத்து மக்கள் நாகரிகம், அவருடைய நூலால் நன்கு விளங்கும். எழுத்துக்கள் இருந்தன, நூல்கள் இருந்தன, கடவுள், உயிர், மெய், வினை என்னும் மெய்ந்நூற் கருத்துக்களை மக்கள் உணர்ந்திருந்தனர். மக்கள் நகர்களில் வதிந்தனர். தொழிற் பாகுபாடுகள் இருந்தன. உழவு, சிற்பம், ஓவியம், வணிகம், மருத்துவம், இசை, கடற் செலவு என்பன பண்டைத்தமிழர் நன்கறிந்தனவே. அரசர் இருந்தனர். போர் வாழ்க்கையும், இன்ப வாழ்க்கையும், சமய வாழ்க்கையும் நிகழ்ந்தன. இல்லறமுந் துறவறமும் கல்வியும் சிறந்திலங்கின. நூற் பொருள்களை அகம், புறம் எனப் பகுத்தாய்ந்தமையால், பண்டைத்தமிழர் மன அறிவு சான்றவரென்பது தெளிவு. இன்ப வாழ்க்கையாய அக வொழுக்கத்தைச் சிறப்பாகப்போற்றினமையால், அவர்கள் உணர்ச்சி (Emotion) யென்னும் உள்ளப் பான்மையைக் கூரியதாகப் பெற்றவர்கள் என்பது புலனும். இக்காரணம் பற்றியே, தத்துவ நூலினும், பாவகை யிலக்கியங்களே தமிழர்க்குட் சிறந்திலங்குகின்றன வென்ப.

பண்டைத்தமிழறிஞர், வாழ்க்கைக்கு நன்மை பயப்பனவற்றையும், உயிர்க்குறுதி பயப்பனவற்றையுமே இலக்கியங்களிலே நவிலப்பெறுதற்குரிய பொருளாகக்கொண்டனர். 'பொருள்' என்ற சொல், பல

கருத்துக்களைக் குறிக்கும். ஐம்பொறிகட்குப் புலனு வன யாவும் பொருளே. மனத்தால் உணரப்படுவன வும் பொருளே. சொற்களின் பயனும் பொருளே. ‘முப்பொருள்’ என்ற விடத்து இறை, உயிர், தளை என்னு மூன்றாகிய பதி, பசு, பாசம் என்பன பொரு ளெனப்பட்டன. ‘உறுதிப்பொருள் நான்கு’ என்ற விடத்து, அறம், பொருள், இன்பம், வீடு என்பன குறித்தவாறாயிற்று. ‘நாடிய பொருள் கைகூடும்’ என்ற கம்பராமாயண நாந்திச்செய்யுட் பகுதியிலே, ‘பொருள்’ என்பது கல்வியுஞ் செல்வமுமாமென, ஆசிரியர் சிவஞான முனிவர் செப்பினர். உலகமே, சொல்லுலகம், பொருளுலகமென் றிருதிறப்படுமெ னின், சொல்லிற்கு வேறாயுள்ள எதுவும் பொருள் எனப்படுமென்னலாம். அகப்பொருளிலக்கணத்துள், நிலமும் பொழுதும், முதற் பொருளெனப்பட்டன. புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்பன உரிப்பொருளா மாதலின், செயல்களும், பொருளென்ற சொல்லாற் குறிக்கப்படுதல் காண்க. பொருளியலுள், பண்பு முதலியனவும் பொருளாகக் கூறப்பட்டன. சிறப்பாகக் கருதுமிடத்து, மண், பொன், நெல் முதலிய செல்வமே பொருள் எனப் படும்.

ஆசிரியர் தொல்காப்பியனார், பொருளதிகாரத் தொடக்கத்தே, பொருள் என்பது யாதென்று வரை

யறுத்தோதிற்றிலர். அகம், புறம் என்றுமிருவகைப் படும் உறுதிப்பொருளினையும், அவை கைவருதற் குரிய வாழ்க்கை வகையினையும், அவற்றைச் செய்யு ளுளமைத்துணர்த்து முறையினையும், செய்யுட்பய னுய மெய்ப்பாட்டினையும், கருத்தினை விளக்குதற் கருவியாய உவமையின் இலக்கணத்தையும், சொன் மாபினையும் ஆசிரியர் பொருளதிகாரத்துட் கூறிப் போந்துனர்.

உயிர்களெல்லாம் இன்பத்தை நாடுகின்றன. இன்பம், உலக இன்பமெனவும், கடவுளின்பமெனவும் இருவகைத்து. உலகவின்பம் நிலையில்லாததேயாயி னும், அதனை நுகர்ந்து கழித்தபின்பே, உயிர்கள் வீட்டின்பத்தை யவாவும். உள்ளத்தின் கண்ணே தோன்றுவதாய்ப் புறக்கண்ணிற்குப் புலனுகாத உணர்ச்சிகள் யாவும் 'அகம்' என்ற சொல்லாற் சுட்டப்படுதற்குரியனவே. அவ்வுணர்ச்சிகளுட் சிறந் தது இன்பவுணர்ச்சி. தம்முட் பொருத்தமிக்க காதலன், காதலி யென்பார் உடனுறைவாலுளதாம் இன்பமே, உலக இன்பங்களுட் தலைசிறந்ததாகலின், அதனையே அவ்வின்பங்காரணமாய் நிகழும் ஒழுக்க முறை கூறுவான் போந்த இலக்கண நூலுட் சிறப் பாக 'அகப்பொருள்' என்முர்.

அகவொழுக்க மியம்புவார் அதற்குச் சார்பாய பிற ஒழுக்கத்தையும் புகழுதலியல்பே. ஆதலின்

தலைவன் தலைவியர்க்குள் ஒத்த அன்பின் வாழ்க்கையை ஐந்திணையினுள்ளும், ஒவ்வா அன்பினைக் கைக்கிளை பெருந்திணையுள்ளும் அமைத்து, ஆசிரியர் திணை எழென்றனர். அவற்றின் இயல்பினை, அகத்திணையியல் இயம்பும். அகப்பொருள் என்பது ஒற்றுமையை யுணர்த்துவது போலப் புறப்பொருள் என்பது, வேற்றுமை குறிக்கும் போர், துறவு முதலியன வாமாதலின், அவற்றினியல்பினைப் புறத்திணையியல் கூறுவதாயிற்று. அகத்திணையியல், அகவொழுக்கத்திற்குரிய உறுப்பிலக்கணங்களையும், நாற்றிணைக்கும் பொதுவாய பாலைத்திணைத் துறைகளையுங் கூறுகின்றது. அக வொழுக்கத்துறைகளைக் கூறுமியல்கள், களவியல், கற்பியல் என்பன. அவ் வொழுக்கம், களவு, கற்பென இரு பகுதிப்படுதலின், ஆசிரியர் இருவேறியல் அமைத்தார். இரண்டிற்குஞ் சார்பாயுள்ளவற்றைப் பொருளியலுட் பெய்துரைத்தார். அக வாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் உணர்த்துஞ்செய்யுட்கு உயிராயுள்ளது மெய்ப்பாடு; பொருளுணர்த்தற்கருவி உவமை;செய்யுட்பகுதிகள் உறுப்பு. அப்பகுதிகளின் பகுதி மரபு வழாத சொற்கள். ஆதலின், மெய்ப்பாடு, உவமை, செய்யுளுறுப்பு, மரபுச்சொல் என்ற நான்கினையும், ஆசிரியர் வெவ்வேறியலுள் விதந்தோதினர். ஆகவே, தொல்காப்பியப் பொருளதிகாரம், அகத்திணையியல், புறத்திணையியல்,

களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது பகுதிகளை உடைத்தாயிற்றென்றறிக.

அகத்திணையியல்.

அகம் என்பது புறத்தார்க்கு உரைக்கப்படாத காதல். திணை யென்பது ஒழுக்கம். ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உளதாய காதலொழுக்கமே அகத்திணை யெனப்படும். அது பண்டைத் தமிழ் மக்களால் மூவகையாகப் பகுக்கப்பட்டது. அவை, ஒருபாற் காதல், ஒத்த காதல், ஒவ்வாக்காதல் என்ற முத்திறச் சார்பாய ஒழுக்கங்களாம். ஒத்த காதல், ஐந்து பகுதியாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும், திணையென்ற பெயர் பெறுதலின், ஒத்த காதலொழுக்கம் ஐந்திணையெனப்படும். ஏனைய இரண்டு வகையும் இரு திணைகளாகவே, அக வொழுக்கம் எழுதிணையாதல் காண்க.

கைக்கிளை யென்பது ஒரு பக்கத்திற் கிளைப்பதாய அன்பு. (கை-பக்கம், கிளை-கிளைத்தல், தோன்றுதல்,) காதலிக்கப்பட்டவளுக்குக் காதலன்பால் ஒத்த அன்பில்லாமையும், முற்றிலுமன்பில்லாமையும், அவ்வாறே காதலிக்கப்பட்டவனுக்குக் காதலி பால் உள்ள நிலையும் கைக்கிளைப்பாற்படும். காதலிக்கப்

பட்டவள், காமவுணர்ச்சி தோன்றாத பருவத்தவளாக இருத்தல் கூடும். ஒருவன் காமஞ்சாலாத இளநங்கை யொருத்திபாற் காதலுணர்தல், நகைப்புக்கிடமாயிருத்தலின், அதனைச் சிறந்த கைக்கிளை வகைகளுள் ஒன்றாகப்பேசினர். ஆசிரியர் தொல்காப்பியனார் (தொல் அகத்திணையியற்சூத்திரம் 50) காமஞ்சாலாதாள்பாற்றோன்றிய காதலுக்கு மருந்தின்மையில் அக்காதல் கூர்வான், "ஏமஞ்சாலாவிடும்பை" எய்துவன் என்றார். அவ்விடும்பை காரணமாக அவன் அவளைக் குறை கூறுதலும், நகை விளைப்பதே. தன் குறையை உணராதவன், பிறரால் துன்பமெய்தியகாலைத் தன்னைத் தவறிலனாக மதிப்பதியற்கை. காதலன் ஒருவன், காதலியல்பறியாத கன்னியிடைத் தன் துன்பமுரைப்பில், அவள் அத்துன்ப இயல்பையே யுணராமையின், அவனுக்கு அவள் யாது கூறுதல் ஒன்றும்? தன் னெஞ்சு மாத்திரம் அறியும் வகையாக அவள் ஏதாவது 'கூறிக்கொண்டால், அப்போதும் அவன் பதில் யாதையும் எதிர்பார்க்க முடியாது. பதில் யாதும் பெறாவிடினும், தன்னெஞ்சின் துயரத்தைச்சொல்லால் வெளியிடுதல் ஆறுதலளிக்குமாகலானும், தன் உணர்ச்சி தனக்கே நகை விளைத்தலானும், "சொல்லியின்புறுதல்" கைக்கிளைக்குறிப்பு என்றார்.

இந்திய சட்டக்கோவை.

(தொடர்ச்சி)

(முன் பகுதியை, மணிமாலை முன் தொகுதியுட் பார்க்க.)

சென்னை மாகாண ஊர் மன்றச் சட்டம்.

1889-ம் வருஷத்து 1-வது சென்னைச் சட்டம்.

[1920-ம் வருஷத்து 2-வது சென்னைச்சட்டத்தினால் ஏற்பட்ட சீர்திருத்தங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன.]

1-வது அதிகாரம்.

தோற்றுவாய்.

சென்னை மாகாண ஊர்மன்றச் சட்டம் முதன் முதல் 1888-ம் வருஷ விதிக்கப்பட்டது. அது 1889ம் வருடத்து முதற் சட்டமாகக்கருதப்பட்டது. அது சென்ன பட்டணத்திலும் சட்ட அட்டவணையிற் குறித்த சிலஜில்லாக்களையுந்தவிர, சென்னைக் கவர்னர் ஆளுகைக்குட்பட்ட எல்லா இடங்களிலும் அமுலி லிருந்து வருதற்குரியது. கவர்னர் என்பது அவரது ஆலோசனைக்குழுவையும் அடக்கிநிற்கும். கவர்னருக்கு எக்கிராமத்தையும் கெசட்டில் விளம்பரம் செய்து இந்தச்சட்டத்தில் நின்று விலக்கிவிட அதிகாரமுண்டு.

இச்சட்டம் அமுலுக்கு வரும்போது கிராம முனிசிபின் நியாய ஸ்தலங்களில் நடந்துகொண்டிருக்கும் பொருள் வழக்குகள் (civil suits) பலவும் இச்

சட்டத்தின் பிரகாரம் தொடரப்பட்டதாகக்கருதப் படும். கிராமமுனிசிபுகளால் இதற்குமுன் செய்யப் பட்ட தீர்ப்புகள் இச்சட்டத்தின்படி தொடரப் பட்ட வழக்குகளில் செய்யப்பட்ட தீர்ப்புகள் நிறை வேற்றப்படும்.

ஒரு இடம் அல்லது கிராமம் இச்சட்டத்தின் அமுலிலிருந்து நீக்கப்பட்டால் அக்காலத்தில் கிராம நியாயஸ்தலங்களில் நடந்துகொண்டிருக்கும் வழக்கு களும், அவைகளால் செய்யப்பட்ட தீர்ப்புகளும், அச்சமயம் அவ்வழக்குகளைத்தீர்க்கவோ, அத் தீர்ப்பு களை நிறைவேற்றவோ, அதிகாரமுடைய பொருள் வழக்கு நீதிஸ்தலங்களால் (civil courts) நடத்தவும், தீர்ப்புச்செய்யவும், நிறைவேற்றவும் படும். இச்சட் டத்திற் பொதுவாக, 'கிராமம்' என்ற சொல், கவர்ன் மென்டாரால் நிலத்தீர்வை 'வசூலிப்பதற்காகக்குறிக் கப்பட்ட ஊரினைக்குறிக்கும். காயமான நிலவரி மொத்தமாகச்செலுத்தற்குரிய (ஜமீன் முதலிய) பண் ணைகளில் கிராமமுனிசிபின் அமுலுக்குட்பட்ட இடத் தைக்குறிக்கும்.

1. 'கிராம நீதி ஸ்தலம்' என்பது 7-வது பிரிவின் படி ஏற்படுத்தப்பட்ட கிராமமுனிசிபின் நியாய ஸ்தலத்தையும், 9-வது பிரிவுப்படி ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்து நீதி ஸ்தலங்களையும் குறிக்கும்.

2. 'கிராம முனிசிபு' என்பது இச்சட்டத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட கிராம நீதி ஸ்தலத்தின் நீதிபதியையும், 7-வது, 16-வது பிரிவுகளைத்தவிர்ந்த மற்றப் பிரிவுகளில் பஞ்சாயத்து நீதி ஸ்தலத்தின் தலைவரையுங் குறிக்கும்.

3. 'ஜில்லா முனிசிபு' என்பது எந்த ஜில்லா முனிசிபின் அதிகார வரம்பிற்குள் அந்தக் கிராமம் இருக்கிறதோ அந்த ஜில்லா முனிசிபைக்குறிக்கும்.

ஆனால் அச்சொல் ஜில்லா முனிசிபு இல்லாத இடங்களில் சப் கோர்ட்டு நீதிபதியையும், அவரும் இல்லாத இடங்களில் ஜில்லா நீதிபதியையும் குறிக்கும்.

அச்சொல் (Small cause court) சிறு வழக்கு நீதிமன்றங்களுள்ள இடங்களில் அம்மன்றங்களின் நீதிபதிகளைக்குறிக்கும்.

4. 'விதிக்கப்பட்டது' என்பது இச்சட்டத்தின்படி கவர்னரவர்களால் மந்திரக்குழுவில் வைத்து விதிக்கப்பட்டது என்று பொருள்படும்.

5. 'அடையாளம்' என்பது தம் பெயரை எழுதத் தெரியாதவர்கள் சம்பந்தப்பட்ட மட்டிலும் 'குறி' என்று பொருள்படும்.

2-வது அதிகாரம்.

கிராம நீதி மன்றங்களின் அமைப்பும், அவற்றை அமைக்கும் முறையும்.

(6) மந்திரக்குழுவுடன் கலந்து கவர்னர் ஜில்லா விளம்பரத் தாளில் (Gazette) வெளியிடும் உத்தரவினால் வெவ்வேறு காலங்களில் (a) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களைச் சேர்த்து அவற்றிற்குள்ள பல நீதிமன்றங்களுக்குப் பதில் ஒரே ஒரு நீதிமன்றம் அமைக்கலாம். (b) ஒரு கிராமத்தை அநேக பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு கிராம நீதிமன்றம் ஏற்படுத்தலாம். (c) ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் புதிய கிராமநீதிமன்றம் ஏற்படுத்தலாம்.

(7) பஞ்சாயத்து நீதிமன்றங்கள் இல்லாத கிராமங்களில் மேலே காட்டப்பட்டிருக்கும் முறைப்படி கலெக்டர் கிராம முனிசிபுகளை கிராம நீதிபதிகளாக ஏற்படுத்த வேண்டும். ஆனால், கிராமத்தில் குடியிராதவன் எவனும் அவ்வேலைக்கு அருகனல்லன்.

(8) திறமையின்மை அல்லது கடமை செய்யாமை, அல்லது தப்பு நடபடிக்கை அல்லது நியாயமான போதிய வேறு காரணத்திற்காக ஜில்லா கலெக்

டர் ஒரு கிராம முனிசீபையோ அல்லது பஞ்சாயத்தின் அங்கத்தினரையோ அப்பதவியிலிருந்து தற்காலத்திற்கோ அல்லது காயமாகவோ நீக்கலாம். அவ்விதமான காரணங்கள் ஒரு கிராம நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் தோன்றுவதால் ஜில்லா நீதிபதி ஒரு கிராம முனிசீபை அல்லது பஞ்சாயத்தின் அங்கத்தினரை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டால் கலெக்டர் கட்டாயம் நீக்கவேண்டும். கலெக்டர் தானாக அவ்விதம் நீக்க உத்தரவிட்டிருந்தால் வரித்தலைமைக்குழுவிற்கும் (ரெவினியூ போர்டாருக்கும்), ஜில்லா நீதிபதியின் வேண்டுகோளின் பேரில் நீக்கியிருந்தால் உயர்தர நீதி மன்றத்திற்கும் (High Court) மூன்று மாதங்களுக்குள் (அப்பீல்) முறையிடு செய்து கொள்ளலாம். அத்தகைய முறையீட்டை விசாரித்துச் செய்யும் முடிவுக்குமேல் அப்பீல் இல்லை.

(9) (a) பின்னால் காட்டியிருக்கிறபடி ஒரு கிராமத்திற்கோ அல்லது பல கிராமத்தொகுதிக்கோ அல்லது ஒரு கிராமத்தின் பகுதிக்கோ மந்திரக்குழுவுடன் கலந்து கவர்னரால் ஜில்லா விளம்பரத்தாளில் வெளியிடப்படும் உத்திரவினால் ஒரு பஞ்சாயத்து நீதிமன்றம் ஏற்படுத்தலாம். அதன் பேரில் 7-வது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட கிராம நீதி மன்ற

மானது அவ்விடங்களில் தனது அதிகாரத்தைச் செலுத்தலாகாது.

(b) அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்து நீதிமன்றத்தின் அங்கத்தின் எண்ணிக்கையைக் கலெக்டர் நிர்மானிக்க வேண்டும். அது 12-க்கு அதிகமில்லாமலும் 5-க்குக் குறையாமலுமிருக்கவேண்டும்.

(c) கவர்னர் தனது ஆலோசனைக்குழுவுடன் கலந்து ஏற்படுத்தும் விதிகளை யனுசரித்துப் பஞ்சாயத்து நீதிமன்றத்தின் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கும் (Election) முறைப்பிரகாரம் நியமிக்கப்படவேண்டும்.

(d) அவ்விதமான விதிகளை யனுசரித்துத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்து நீதி மன்றத்தின் அங்கத்தினர் 3 வருடத்திற்கு மேல் அவ் வேலையை வகிக்கலாகாது.

(e) ஒரு பஞ்சாயத்து நீதி மன்றமானது அதன் அங்கத்தினருள் ஒருவரை விதிப்படி பஞ்சாயத்துத்தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

தலைவர் இல்லாதபொழுது, அப்பொழுது வந்திருக்கும் அங்கத்தினர் தம்முள் ஒருவரை அந்தக் கூட்டத்துக்கு மட்டும் தேர்ந்தெடுக்கவேண்டும்.

(f) பஞ்சாயத்து நீதி மன்றத்தின் கூட்டத்திற்கு நிறைவெண் மூன்றுவந்திருப்பவருள் பெரும்பான்மையோருடைய தீர்ப்பே மன்றத்தின் தீர்ப்பாகும். ஆனால் அவர்கள் முடிவு சமமாகப் பிளவுபட்டிருந்தால் தலைவருக்குத் தீர்மான வாக்குரிமை (Casting vote) யொன்றுண்டு.

(g) ஜில்லா விளம்பரத்தாளில் வெளியிடப்படும் அறிக்கையின் மூலம் மந்திரிக்குழுவுடன் கலந்து கவர்னர் எந்தப் பஞ்சாயத்து நீதி மன்றத்தையும் எடுத்துவிடலாம்.

(10) கிராம முனிசிபு கிராம நீதி மன்றத்தில் தொடரப்படும் வழக்குகளுக்கு ஒரு பதிவுப் புத்தகம் வைத்துக்கொண்டு அதில் மன்றத்தின் நடபடிக்கைகளை எழுதுதல் வேண்டும். அவ்வாறு பதிவுப்புத்தகம் வைத்துக்கொள்ளுவதற்கும், அதில் மன்றத்தின் நடபடிக்கைகளை எழுதுவதற்கும், வேண்டியபோது கிராமக்கர்ணன் உதவி செய்தற்குரியர்.

(11) இச் சட்டத்தின் பிரகாரம் பிறக்கும் அழைப்புக்கட்டளை (Summonses), அறிக்கைகள் (Notices), உத்தரவுகள் (Orders) முதலியவற்றைச் செலுத்துவதும், பறிமுதல் (ஜப்தி) செய்யப்பட்ட பொருள்களைச் சுவாதீனப்படுத்துகிறது, (seizing)

விற்பது, ஒப்புவிப்பது முதலிய செயல்களுக்கு கிராம முனிசீபின் உத்திரவின் பிரகாரம் நடக்கவேண்டியது, எப்போதும் தபால் கொண்டுபோகும் கிராம வேலைக்காரனுடைய கடமையாகும்.

(12) கர்ணம், தலையாரி முதலியவர்களுடன் அல்லது அவர்களுக்குப்பதிலாக 10, 11 வது பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் கடமைகளைச் செய்வதற்கு ஒருவரை ஏற்படுத்துவதற்கு ஜில்லாக் கலெக்டருக்கு (மந்திரிகுழுவோடு கூடிய கவர்னர் ஆணைக்குட்பட்டு) அதிகாரமுண்டு.

3-வது அதிகாரம்,

அதிகார வரம்பும், முடிந்த முடிபும், காலாவதியும்.

(13) உடன்படிக்கைப்படி கொடுக்கவேண்டிய பணம் அல்லது சாமான்கள் அல்லது சாமான்களின் விலை என்பவற்றைப்பற்றிய வழக்குகள் கிராம நீதி மன்றங்களில் விசாரிக்கப்படத்தக்கன. ஆனால், அவற்றின் மதிப்பு ரூ. 50-க்கு மேற்படக்கூடாது.

(a) பாகப்பிரிவினை கணக்குப்பாக்கி வழக்குகள் பஞ்சாயத்துக்கோர்ட்டில் விசாரிக்கப்படத்தக்

களையல்ல. அப்பாக்கிகள் கட்சிக்காரர்களால் திட்டப்பட்டிருந்தாலொழிய விசாரிக்கக்கூடாது. ஆனால், பாக்கி இவ்வளவென்று தீர்மானித்திருந்தால் ரூ 50-க்கு மேற்படாத தொகைக்குப் பஞ்சாயத்துக் கோர்ட்டில் வழக்குத் தொடரலாம்.

(b) ஒரு உயில் அல்லது இஷ்டப்பத்திரத்தின் மூலமாக ஏற்படக்கூடிய பாத்தியதைக்கோ அல்லது பாத்தியதையின் பகுதிக்கோ தொடரப்படும் வழக்குகளை விசாரிக்கக்கூடாது.

(c) நிலத்தின் வாடகை பற்றி ஏற்படும் வழக்கை, அவ் வாடகை பிரதிவாதியால் கையெழுத்திடப்பட்ட எழுத்து ஒப்பந்தத்தின் பேரில் ஏற்பட்டிருந்தாலொழிய பஞ்சாயத்துக்கோர்ட்டில் வழக்குத் தொடரக்கூடாது.

(d) அரசியலார் சம்பந்தமாக அல்லது பொது ஜன உத்தியோகஸ்தரின் சம்பந்தமாக ஏற்படக்கூடிய வழக்குகளை விசாரிக்கலாகாது.

(e) மைனர்கள் அல்லது பித்தர்கள் சம்பந்தமாக ஏற்படக்கூடிய வழக்குகளையும் விசாரிக்கலாகாது.

(14) 13-வது பிரிவிற் சொல்லப்பட்டிருக்கும் வழக்குகள் ரூ 200-க்கு மேற்படாதவையாக இருந்தால் இரு கட்சிக்காரரும் சம்மதித்து சம்மதப்பத்தி

ரம் எழுதி மன்றத்தின் முன் வைத்துக்கையொப்ப மிட்டிருந்தால் அவற்றை விசாரிக்கலாம்.

(15) இச்சட்டத்தின்படி தொடரப்படும் வழக்குகள், அவ்வழக்கு ஆரம்பிக்கும்போது எல்லாப்பிரதிவாதிகளும் குடியிருக்கும் அல்லது தொழில் நடத்தும் அல்லது ஊதியத்திற்காகப்பாடுபடும் இடத்திலுள்ள கிராம நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

(16) (a) ஒரு கிராமமுனிசிபும் தன் சம்பந்தமான அல்லது தான் அக்கரைப்பட்ட வழக்கை விசாரிக்கவாவது முடிவு செய்யவாவது கூடாது. அவ்விதமான வழக்குகள் பக்கக்கிராம நீதி மன்றத்தில் விசாரிக்கப்படலாம்.

(b) ஒரு பஞ்சாயத்து நீதிமன்றத்தின் அங்கத்தினர் அக்கோர்ட்டில் விசாரிக்கப்படும் ஒரு வழக்கில் அக்கரைப்பட்டிருந்தாலும் அல்லது கட்சிக்காரனாயிருந்தாலும் அவ்வழக்கு விசாரிக்கப்படும்போது அம்மன்றத்தினின்றும் நீங்கவேண்டும். அதைத் தீர்ப்பதில் கலந்துகொள்ளவுங் கூடாது.

(17) ஒரே கட்சிக்காரருக்குள் அல்லது அவர்கள் மூலமாகப்பாத்தியதைநாடுபவர்க்குள் சட்டப்படி தகுதியுடைய நீதி மன்றத்தார் விசாரித்து முடிவு

செய்யப்பட்ட வழக்கை மீண்டும் எந்தக் கிராமமும் விசாரிக்கலாகாது.

(18) ஒரு கிராம நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடரப்படும்போது அதில், அவ் வாதி அவ்வியாச்சிய மூலத்தின்பேரில் கேட்கக்கூடிய பரிகாரங்கள் யாவற்றையுங் கேட்கவேண்டும். ஆனால், வழக்கை அம்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்படுத்துவதற்காகப் பரிகாரத்தின் ஒரு பகுதியைத் தேவையில்லையென்று விட்டு விடலாம்.

ஒரு வாதி பரிகாரத்தின் ஒரு பகுதியைத் தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்றோ கேட்கத் தவறிவிட்டால் அப்பரிகாரத்திற்கு வேறு வழக்குத்தொடரக்கூடாது.

(19) ஒரு வழக்கை ஒரு கிராம நீதி மன்றம் தீர்ப்பதற்கு அசையாப்பொருளின் (தாவர சொத்தின்) உரிமை, கட்சிக்காரரின் சட்ட நிலைமை அல்லது ஒப்பந்தம் என்பவற்றைப்பற்றி முடிவு கட்டவேண்டியிருந்தால் வேண்டியவரை முடிவு கட்டலாம். ஆனால், அம்முடிவு கட்சிக்காரர்களை மற்றொரு வழக்கிற் கட்டுப்படுத்தாது.

(20) 1877-வது வருஷத்து இந்திய காலாவதிச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்படி தொட

ரப்படும் வழக்குகளையும் மனுக்களையும் கட்டுப்படுத்தும்.

(20 a) (i) ஒரு கிராம நீதி மன்றத்தில் விசாரிக்கப்படவேண்டிய வழக்கு ஒரு ஜில்லா முனிசிபின் நீதிமன்றத்தில் போதிய காரணமில்லாமல் தொடரப்பட்டால் அவ் வழக்கை ஜில்லா முனிசிபு கிராம நீதி மன்றத்திற்கு அனுப்பிவிடலாம்.

(ii) கிராம நீதிமன்றத்தில் தொடரவேண்டிய வழக்கு ஜில்லா முனிசிபின் நீதி மன்றத்தில் தொடரப்பட்டுப் பிறகு கிராமநீதிமன்றத்தில் தொடரவேண்டியதென்று முனிசிபு எண்ணினால், வாதி வெற்றியடைந்தும் செலவு தொகை இல்லையென்று தீர்மானிக்க வேண்டும். பிரதிவாதி வெற்றியடைந்தால் அவனுடைய செலவு தொகையைக் கட்சிக்காரனுக்கும் வக்கீலுக்கும்போல் வாதி கொடுக்கும்படி தீர்ப்புச் செய்யவேண்டும்.

(21) (a) ஒரு கட்சிக்காரரின் மனுவின் பேரில் ஜில்லா முனிசிபு ஒரு வழக்கைக் கிராமநீதிமன்றத்திலிருந்து எடுத்துத் தானே தன்னுடைய மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கைப்போல் விசாரிக்கலாம். அல்லது தனது அதிகார வரம்பிற்குள் இருக்கும் வேறொரு கிராம நீதி மன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்பலாம். ஆனால், அவ்விதம் கிராமநீதிமன்றத்

திலிருந்து எடுத்து ஜில்லா முனிசிபால் விசாரிக்கப் படவேண்டுமென்று மனுச்செய்துகொள்ளுபவன் அவ் விதம் உத்திரவு பிறப்பதற்கு 'முன் 1870-ம்வருஷம் நீதிமன்ற வரிச்சட்டத்தின் பிரகாரம் கட்டணம் செலுத்தவேண்டும்.

(b) 1-வது உட்பிரிவின் பிரகாரம் தாக்கல் செய்யப்படும் மனுவின்பேரில் ஒரு முடிவு கட்டுவ தற்கு முன், கிராம நீதிமன்றத்தின் நடபடிக்கைகளை ஜில்லாமுனிசீபு நிறுத்திவைக்கலாம்.

4-வது அதிகாரம்.

வழக்குகள் தொடரும் முறையும், எழுதும் முறையும், ஒப்புக்கொள்ளப்பட்ட ஆட்பேர், கட்டளையனுப்பு முறையும், ஏற்பிக்கு முறையும், வாயிதாக் களில்வராததாலேற்படும் பலன்களும்.

(22) இச்சட்டத்தின்படி தொடரப்படும் ஒவ் வொரு வழக்கும் கிராம முனிசிபிடம் ஒரு பிராதும், அத்துடன் எத்தனை பிரதிவாதிகளிருக்கின்றார்களோ அத்தனை நகல்களும், கொடுப்பதினால் ஆரம்பிக்கும் ஒரு சமன் அல்லது கூப்பிடு பத்திரத்துடன் ஒவ் வொரு நகலும் ஏற்பிக்கப்படும்.

(23) பிராதானது அக்கிராமத்தின் பாஷையி லெழுதப்பட்டு வாதியால் கையெழுத்திடப்பட்டிருக்க வேண்டும். அவரில்லாவிட்டால் அவரால் உத்தரவு கொடுக்கப்பட்ட பிரதிநிதியால் கையெழுத்திடப்பட் டிருக்கவேண்டும். பிராதில்:—

(a) வாதி பிரதிவாதிகளின்பெயர், விலாசம், இருப்பிடம் முதலிய விபரங்களும்.

(b) வியாச்சிய மூலமும், அது உண்டாகிய காலத்தையும் பற்றிய சுருக்க விபரமும்.

(c) கேட்கும் பரிகாரமும், பரிகாரத்தின் தொகை அல்லது பெறுமதிப்பும் காணப்பட வேண் டும்.

(24) கிராம நீதி மன்றங்களில் ஒரு கட்சிக்கார ருக்காக வக்கில்கள் அல்லது வழக்கறிஞர்கள் தோன்ற லாகாது. ஆனால், ஒரு கட்சிக்காரர் தம்முடைய வேலைக்காரனையோ, எழுத்தாளரையோ, பங்காளியை யோ, பந்துவையோ, நண்பனையோ தமக்காகத் தோன்றி வழக்குரைக்க ஏற்பாடு செய்யலாம். ஆனால், கிராம முனிசிபு கட்சிக்காரரே நேராக வரவேண்டியது அவசியமென்று நினைத்தால் அவ்வாறு வரவேண்டு மென்று உத்திரவிடலாம். உத்திரவிட்டும் வராவிட் டால் பிரதிநிதிமூலம் தோன்றிவிட்டால் என்ன பலன்கள் ஏற்படுமோ அப்பலன்களே ஏற்படும்.

(25) முறைப்படி பிராது கொடுக்கப்பட்டவுடன் கிராமமுனிசிபு அதைப் பதிவுப்புத்தகத்தில் பதிவு செய்ய ஏற்பாடு செய்து ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்றையத்தினம் வந்து பதில் சொல்லும்படி பிரதிவாதிக்குக்கட்டளை அனுப்பவேண்டும். அவை பிரதிவாதியிடம் கிராம வேலைக்காரனாலோ, 12-வது பிரிவுப்படி கலெக்டரால் ஏற்படுத்தப்பட்ட நபராலோ ஏற்பிக்கப்பட்டு, அவர் கையெழுத்து வாங்கப்படுவதுடன் அதற்கு ஒரு நகலும் கொடுக்கப்படவேண்டும்.

(26) பிரதிவாதி தலைமறைவாக இருப்பதாகக் கிராமமுனிசிபிற்குத் திட்டமாய்த் தோன்றினாலும் அல்லது அழைப்புக் கட்டளையில் கையெழுத்திட மறுத்தாலும், கிராமமுனிசிபு அதை அவனது குடும்பத்தில் அவனோடு குடியிருக்கும் தகுந்த வயதுள்ள ஒரு ஆண் மகனிடம் நகலுடன் ஏற்பிக்கும்படி உத்தரவிடலாம். அல்லது அந்நகலை அவன் குடியிருக்கும் வீட்டில் வெளிப்படையான ஓரிடத்தில் ஒட்டும்படி செய்யலாம்.

(27) கிராமநீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு அப்பாலுள்ள ஒரு பிரதிவாதியின் பேரில் கூப்பிடு பத்திரத்தை ஏற்பிக்க வேண்டியதிருந்தால் அதை ஜில்லா முனிசிபிற்கு அனுப்ப வேண்டும். அவர் அதைத்தான் அனுப்பும் கூப்பிடு பத்திரங்களைப்

போல் எற்பிக்கும்படி செய்து எற்பித்த விபரங் கண்டு ஒரு அறிக்கையும் அனுப்பும்படி செய்யவேண்டும். அவ்வறிக்கை அதில் காணப்படும் விஷயங் களுக்கு முதலான ருசுவாகும்.

(28) ஒரு பிரதிவாதிக்குக் கூப்பிடு பத்திரம் முறைப்படி எற்பிக்கப்பட்டதாக ருசுவிருந்தும் அவன் நேரிலோ, வகை மனிதர் மூலமாகவோ விசாரணைக்குக் குறிப்பிட்ட தினத்தில் வராவிட்டால் கிராம நீதிமன்றமானது அவரன்னியில் விசாரணையை நடத்தலாம்.

முறைப்படி கூப்பிடு பத்திரம் செலுத்தப் பட்டதாக ருசு இல்லாவிட்டால் கிராமமுனிசிபு மறு பத்திரம் அனுப்பவேண்டும்.

ஒவ்வொரு பிரதிவாதியும் வாயிதாவிற்கு இரண்டு தினங்களுக்கு முன் வழக்கைப்பற்றிய அறிக்கை தனக்கு வரவேண்டுமென்று கேட்கலாம். கூப் பிடு பத்திரமானது போதிய காலத்திற்குமுன் எற் பிக்கப்படாவிட்டால் வாயிதா மாற்றப்படவேண்டும். அதற்கு எழுத்தின் மூலம் பிரதிவாதிக்கு அறிக்கை கொடுக்கவேண்டும்.

(தொடரும்)

இந்திய சட்டக்கோவை.

இந்திய தண்டனைத் தொகுதி. (தொடர்ச்சி)

அரசியலார்க்கு எதிரிடையான குற்றங்கள்.

6-வது அதிகாரம்.

அரசியலார்க்கு எதிரிடையான குற்றங்கள் ஐவகைப்படுவன. அவை (1) மன்னாதி மன்னர் (அல்லது இராஜ சக்கரவர்த்தி) க்கு எதிரிடையாகப் போர் தொடுத்தல், தொடுக்கயத்தனித்தல், தொடுக்க இணங்குதல், தொடுக்கவேண்டும் மக்களும், பொருளும் சேகரித்தல் முதலியன: (2) கவர்னர் ஜெனரல், கவர்னர், (லெப்டினன்ட்) துணைக்கவர்னர், கவர்னரது நிர்வாகசபை அங்கத்தினர் முதலியவர்களை அவ்வவர்களுடைய சட்டப்பொருத்தமான அதிகாரத்தைச் செலுத்தும்படி கட்டாயப்படுத்தவோ, அல்லது செலுத்தாமலிருக்கும்படி தடுக்கவோ நினைத்து அடித்தல் அல்லது அடிக்க யத்தனித்தல். (3) அரசவிரோதம் அல்லது இராஜத்துரோகத்தை உண்டாக்குதல் (4) இராஜ சக்கரவர்த்தியுடன் ஒற்றுமையுள்ள ஒரு வல்லரசுடன் போர் புரிதலும், அவ்வல்லரசின் நாட்டில் படை யெடுத்தலும், கொள்ளையிடுதலும், (5) அரசியல் கைதியைத் தப்புவிப்பதும், விடுவிப்

பதும், மறைத்து வைப்பதும், அல்லது அரசியல் கைதி தப்புவிப்பதற்கு இணங்குதலும், உதவி செய்தலும் எச்சரிக்கையில்லாமையால் விட்டு விடுதலும் என்பன.

(121) பிரிட்டிஷ் அரசர்க்கு விரோதமாகப் போர் தொடுப்பவரும், தொடுக்க யத்தனிப்பவரும் அதற்குத் துணை நிற்பவரும், மரணதண்டனையோ, தீவாந்திரமோ விதிக்கப்படுவர். அபராதத்தண்டமும் அவர்களுக்கு விதிக்கப்படும். உதாரணம்: வேலன் அரசுக்கு விரோதமான கலகத்தில் சேர்ந்தால் இப் பிரிவுப்படி குற்றவாளியாவான். அவன் இந்தியாவில் இருந்துகொண்டு இலங்கையில் ஆங்கில அரசுக்கு விரோதமாகக் கூட்டக்கலகம் செய்வோருக்கு ஆயுதங்கள் அனுப்பினாலும் இப்பிரிவின்படி குற்றவாளியாவான்.

குறிப்பு. I. இப்பிரிவின்படி குற்றவாளியாவதற்கு ஒரு கூட்டக்கலகம் இருக்கவேண்டும். அதில் பலவந்தம் ஏற்படவேண்டும். இராஜ விரோதமான ஒரு காரியத்திற்காக அது நடக்கவேண்டும்.

(2) இந்தியாவிலிருந்து கொண்டு இந்தியாவைப் படையெடுக்க முயலும் பகையரசுகளுக்கு உதவி செய்தலும் இப்பிரிவின்படி குற்றமாகும்.

(3) இப்பிரிவில், குற்றங்களைச் செய்வது மாத்திரமல்லாமல் யத்தனமும் முடிவான குற்றத்தைப்போல் தண்டிக்கப்படுகிறது.

ஏனென்றால், இப்பிரிவின் கீழ் குற்றம் செய்பவன் வெற்றியடைந்தால் அவனைத்தண்டிக்க முடியாது. ஆகையால் "ஊறும்போதே துடைக்கவேண்டும்" என்பதற்கொப்ப இக்குற்றத்தில் மட்டும் யத்தனமும் மிகவும் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறது.

(121 a) 121-வது பிரிவிலுள்ள குற்றங்களைச் செய்யவோ, இந்தியாவின் பேரிலாவது அல்லது அதன் எப்பாகத்திலாவது அரசு தன் அமுலை இழக்கும்படி செய்யவோ இணங்கினாலும், பலத்தைக் காட்டியோ, அல்லது உபயோகித்தோ, இந்திய அரசியலாரையோ, மாகாண அரசியலாரையோ, பீதியடையும்படி செய்வதற்கு இணங்கினாலும், ஆயுள்பரியந்தமோ அல்லது அதற்குக்குறைவாகவோ தீவாந்தரம் அல்லது 10 ஆண்டுகட்கு இருவகைக்காவலில் ஒன்று விதிக்கப்படும்.

குறிப்பு. இந்தப்பிரிவின்படி இணக்கத்தைக்குறிப்பதற்கு அதைப்பின் பற்றி ஒரு செய்கையோ அல்லது ஒரு கடமைத்தவறோ சம்பவிக்கவேண்டுமென்பது கட்டாயமல்ல.

(122) அரசியலாருடன் போர் தொடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடனாவது அல்லது போர் தொடுக்க ஆயத்தமாகஇருக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடனாவது மக்களும், ஆயுதங்களும், வெடிமருந்தும் சேகரித்தாலும் அல்லது போர் தொடுப்பதற்கு வேறு விதமாக ஆயத்தம் செய்தாலும், ஆயுள் பரியந்தம் நிவாந்திரம் அல்லது இருவகைக்காவலில் எதாவது ஒன்று பத்து ஆண்டுகட்கு மேற்படாமல் விதிக்கப்படுவதோடு அபராதமும் விதிக்கப்படும்.

குறிப்பு. இந்த ஒரு பிரிவில் மட்டும் தான் ஆயத்தம் செய்வதும் தண்டிக்கப்படுகிறது.

(123) செய்கையினாலோ, அல்லது செய்யாமையாலோ அரசுக்கு விரோதமாகப் போர் தொடுக்கும் ஒரு சூழ்ச்சியைப் போருக்கு உதவுங் கருத்துடன் அல்லது அறிவுடன் மறைத்தால் 10 ஆண்டுகளுக்கு மேற்படாத காலவளவிற்கு இருவகைக் காவலில் எதாவதொன்றும் அபராதமும் விதிக்கப்படும்.

(124) கவர்னர் ஜெனரலையோ அல்லது ஒரு மாகாணக்கவர்னரையோ அல்லது ஒரு (லெப்டினென்ட்) ஜில்லாக்கவர்னரையோ அல்லது கவர்னர் ஜெனரலின் நிர்வாகசபை அங்கத்தினருள் ஒருவரையோ அல்லது மாகாண கவர்னரின் நிர்வாக சபை அங்கத்தினருள் ஒருவரையோ அவர் சட்டப்படி செலுத்தக்கூடிய

அமுலைச்செய்யும்படியோ அல்லது செய்யாமலிருக்கும்படியோ தூண்டவேண்டும் அல்லது கட்டாயப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் அடித்தாலும் அல்லது அடிக்க யத்தனித்தாலும் அல்லது பலத்தை உபயோகித்தோ, காண்பித்தோ அவர்களைப் பீதி அடையும்படி செய்தாலும், தடங்கல் செய்தாலும் ஏழு ஆண்டுகட்கு மேற்படாமல் ஏதாவது ஒரு வித காவலும் அபராதமும் விதிக்கப்படும்.

(124 a.) எழுதப்பட்ட அல்லது பேசப்பட்ட வார்த்தைகளினாலாவது, குறிகளினாலாவது அடையாளங்களினாலாவது அல்லது காட்சிப் படங்களினாலாவது, வேறு விதத்தினாலாவது பிரிட்டிஷ் அரசுக்கு விரோதமாகவோ, ஆங்கில அரசால் சட்டப்படி இந்தியாவில் நிறுவப்பட்ட அரசியலுக்கு விரோதமாகவோ மாறுபாட்டைக் கிளப்பினாலும், கிளப்ப யத்தனித்தாலும் அல்லது வெறுப்பு அல்லது ஏளனம் இவற்றுள் ஒன்றை உண்டுபண்ணினாலும், உண்டுபண்ண யத்தனித்தாலும் ஆயுள் பரியந்தமோ, அல்லது அதற்குக்குறைவான காலவளவிற்கோ தீவாந்திரம் விதிப்பதோடு அபராதமும் விதிக்கலாம் அல்லது மூன்று ஆண்டுகட்கு மேற்படாமல் ஏதாவது ஒரு வகைக் காவலும், அபராதமும் விதிக்கலாம் அல்லது அபராதம் மட்டும் விதிக்கலாம்.

விளக்கம். (1) மாறுபாடு என்னும் சொல்லில் (இ) ராசத்துரோகமும் அரசுக்கு எதிரிடையான எல்லா உணர்ச்சிகளும் அடங்கும்.

(2) அரசியலார்க்கு விரோதமாக அவர்கள் பேரில் வெறுப்போ, ஏளனமோ, மனமாற்றமோ உண்டுபண்ணாமல் அல்லது உண்டுபண்ண யத்தனிக்காமல் அரசியலாரின் நடவடிக்கைகளைச் சட்டப் பொருத்தமான முறையில் திருத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் அவைகளைச் சரியல்லவென்று கூறுங் கண்டனங்கள் இப்பிரிவிற்குள்ளாகமாட்டா.

குறிப்பு (1) இப்பிரிவில் யத்தனமும், குற்றமும் ஒரே விதமாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

(2) ஒரு கட்சியினரைப்பற்றிக் கண்டனப் பத்திரம் எழுதுவதும், விரோதம் பண்ணுவதும் இப்பிரிவின்கீழ் வரமாட்டா.

(3) தற்போதிருக்கும் அரசியற்குட்பட்டுத் தன்னரசுரிமையை (Self Government) அடைய முயலும்படி ஒரு கூட்டத்திற்கு எடுத்துச்சொல்லுவது குற்றமாகாது.
(34 Cor. 991)

(4) இராஜத்துரோகமான கண்டனங்களை ஒருவன் தான் எழுதாவிட்டாலும், இன்னொருவர்

எழுதியதை உபயோகப்படுத்துவதும் இப்பிரிவின் படி குற்றமாகும்.

(5) ஒரு பத்திரிகையின் ஆசிரியரும், பதிப்பாளரும், வெளியிடுவோரும் அதிற்றோன்றும் உரைகளுக்குப்பொறுப்பாளராவர்.

(6) இன்னொருபத்திரிகையில் வெளியான இராஜத்துரோகமான கண்டனங்களின் நகலை வெளியிடுதலும் குற்றமே.

(125) பிரிட்டிஷ் அரசுடன் ஒற்றுமைப்பாடுடைய ஆசிய வல்லரசு ஒன்றுடன் போர் தொடுத்தாலும், தொடுக்க உதவி செய்தாலும், ஆயுள்பரியந்தம் தீவாந்தரம் விதிப்பதோடு, வேண்டுமானால் அதோடு அபராதமும் அல்லது ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத காலவளவிற்கு இருவகைக் காவலில் ஒன்றும், அதோடு அபராதமும் அல்லது அபராதம் மட்டும் விதிக்கப்படும்.

(126) பிரிட்டிஷ் அரசுடன் ஒற்றுமைப்பாடுடைய அல்லது சமாதானமுள்ள எந்த வல்லரசின் நாட்டின்பேரிற் படையெடுத்தாலும், படையெடுக்க ஆயத்தம் செய்தாலும் 7 ஆண்டுகட்கு மேற்படாமல் எதாவதொரு வகைக் காவலும், அபராதமும் விதிப்பதோடு அப் படையெழுச்சிக்குச் சேகரிக்கப்

பட்ட அல்லது அதில்கிடைத்தபொருளும் பறிமுதல் செய்யப்படும்.

(127) 125, 126வது பிரிவுகளிற் சொல்லியிருக்கும் குற்றங்களைச் செய்யும்போது எடுக்கப்பட்ட பொருள்களை அவைகள் அத் தன்மையானவென்றுதெரிந்து வாங்குபவர்கள் 7 ஆண்டுகட்கு மேற்படாத காலவளவிற்கு ஏதாவதொரு வகைக்காவலும், அபராதமும் விதிக்கப்படுவதற்குரியாராவதோடு அப்பொருள்களும் பறிமுதல் செய்யப்படும்.

(128) "அரசாங்கக்கைதி" அல்லது "போர்க்கைதி"யைத் தன் கைவசம் வைத்திருக்கும் அரசாங்க வேலையாள் ஒருவன் மனப்பூர்வமாக அக்கைதியை அவன் அடைக்கப்பட்டிருக்கும் இடத்தினின்றும் தப்பவிட்டு விட்டால் ஆயுள்பரியந்தம் தீவாந்திரம் அல்லது 10 ஆண்டுகளுக்கு மேல்படாத காலவளவிற்கு ஏதாவதொருவகைக் காவலும் விதிப்பதோடு அபராதமும் விதிக்கப்படும். சாதாரணக் கைதியை விட்டுவிடுதலைப் பற்றிப்பின் 225 உ பிரிவில் கூறப்படும்.

குறிப்பு. (1) போர்க்கைதி யென்பவன் போரிற்குரிய ஆயுதபாணியாய்ப்போரிற் பிடிபட்டவன்.

(129) 128-ம்பிரிவில் சொல்லியிருக்கும் குற்றத்தை மெத்தனத்தினால் செய்தால் 3 ஆண்டுகட்கு

மேற்படாமல் ஏதாவதொருவிதக் காவலும் அபராத மும் விதிக்கப்படும்.

(130) அரசாங்கக் கைதியையோ, அல்லது போர்க்கைதியையோ அவன் அத்தன்மையன் என்று அறிந்துகொண்டு சட்டபூர்வமான காவலினின்றும், அவன் தப்புவதற்கு உதவி செய்தாலும், துணை நின்றாலும், தப்புவித்தாலும், தப்புவிப்பதற்கு யத்தனித்தாலும், தப்பியவனை மறைத்து வைத்தாலும், அப்படிப்பட்டவனை மறுபடியும், பிடிப்பதற்குத் தடை செய்தாலும் எதிர்த்தாலும், அப்படிச் செய்ய யத்தனித்தாலும் ஆயுள்பரியந்தம் தீவாந்தரம் அல்லது 10 ஆண்டுகட்கு மேற்படாத காலவளவிற்கு இருவகைக் காவலில் ஒன்றும் விதிப்பதோடு அபராதமும் விதிக்கப்படும்.

குறிப்பு. ஒருவனது வாக்குறுதியின் பேரில் பிரிட்டிஷ் இந்தியாவின் சில எல்லைகளுக்கு வெளியே போகக்கூடாதென்று உத்தரவிடப்பட்டவன் அதற்கு வெளியே போதலும் தப்பிப்போதலாகும்.

7-வது அதிகாரம்.

படைகள் சம்பந்தமான குற்றங்கள்.

இவ்வதிகாரம் போர்விதிகளுக்குப்புறம்பேயுள்ளவர்களும் படைகளிற் சேராதவர்களுமான குடிகள்

படைகளிற் சேர்ந்த போர்வீரர் குற்றஞ்செய்தவர்க்கு உதவி புரிந்தாலும், துணை நின்றாலும் அவர்களைப் போர்ச்சட்டப்படி தண்டிக்காது சாதாரண இந்தியத் தண்டனைச்சட்டத்தின்படி தண்டிக்கவேண்டும் என்றும் நோக்கத்தையுடையது.

(131) அரசரின் நிலம் படைகள் அல்லது கடற்படைகளில் உள்ள ஒரு போர்வீரனோ, மாலுமியோ, உத்தியோகத்தனோ, அதிகாரியோ, கலகம் செய்யத்துணை நின்றாலும், அவன் அரசவிசுவாசத்தினின்று அல்லது கடமையினின்று நழுவும்படி செய்தாலும் ஆயுள் பரியந்தம் தீவாந்தரம் அல்லது 10 ஆண்டுகளுக்கு மேற்படாத காவலும் அபராதமும் விதிக்கப்படும்.

(132) மேலே கண்டவர்கள் கலகம் செய்வதற்குத் துணை நின்று, அதன் பலனாய்க் கலகம் நேர்ந்தால் மரண தண்டனை அல்லது ஆயுள் பரியந்தம் தீவாந்தரம் அல்லது பத்து ஆண்டுகட்கு மேற்படாமல் இருவகைக்காவலில் ஒன்று விதிக்கப்படுவதோடு அபராதமும் விதிக்கப்படும்.

(133) மேலதிகாரி தன் கடமையைச் செய்து கொண்டிருக்கும்போது அவனைக் கீழ்ப்பட்ட ஒரு அதிகாரியோ, போர் வீரனோ, மாலுமியோ அடிக்கத் துண்டினால் 3 ஆண்டுகட்கு மேற்படாமல் இருவகைக் காவலுள் ஒன்றும் அபராதமும் விதிக்கப்படும்.

(134) அங்ஙனம் தூண்டுவதால் அடி விழுந்தால் துணை நின்றவர்களுக்கு 7 ஆண்டுகட்கு மேற்படாமல் இருவகைக் காவலில் ஒன்றும் அபராதமும் விதிக்கப்படும்.

(135) மேலே கண்டவர்கள் படையினின்றும் நழுவிப்போய்விடுவதற்குத் துணை நின்றால் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் ஒருவிதக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

(136) அவ்வாறு நழுவினவர்களை அவர்கள் அத்தன்மையரென அறிந்துகொண்டு அல்லது அத்தன்மையரென நம்பக் காரணமிருக்கும்போது ஒளித்துவைத்தால் இரண்டு ஆண்டுகட்கு மேற்படாமல் ஒருவிதக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

விலக்கு: இவ்விதிக்கு அவ்வாறு நழுவினவர்களின் மனைவியர் விலக்காவர்.

(137) அவ்வாறு நழுவினவர்கள் வர்த்தகக்கப்பல் ஒன்றில் ஒளித்திருந்தால், அதன் முதலாளியோ அல்லது அதற்குப்பொறுப்பாளரானவரோ அவ்வாறு மறைந்திருப்பதை அறியாமலிருந்தாலும், தன் கடமையைச் செய்யாமல் மெத்தனமாயிருந்ததனாலோ அல்லது கண்டிப்பின்மையினாலோ அது நேரிட்டிருந்

தால் அவர்களுக்கு ரூ. 500-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படும்.

(138) அரசின் நிலப்படைகள் அல்லது நீர்ப்படைகளில் உள்ள ஒரு அதிகாரியோ, போர்வீரனோ மாலுமியோ புரியும் ஒடுக்கமற்ற செயலுக்கு அது அத்தன்மைத்தென அறிந்து கொண்டு அதற்குத் துணை நின்றால் 6 மாதத்துக்கு மேற்படாமல் ஒரு வகைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

(138 a) மேற்கண்ட பிரிவுகள் சம்பந்தப்பட்ட மட்டில் அரசின் கப்பற்படையாக அரசியின் இந்தியக் கப்பல்கள் கருதப்படும்.

(139) ஆங்கிலநாட்டரசின் படைகளின் போர் விதிகளுக்குள்ளாகும் எவனும் இந்திய சட்டத்தண்டனைக்குரியவனல்லன்.

(140) அரசின் படைகளில் வேலை பாராத ஒருவன் அவ்வேலை பார்க்கும் சேவகனெனத் தன்னை மற்றவர்கள் எண்ண வேண்டுமென்ற கருத்துடன், அவன் உபயோகிக்கும் அங்கியைப்போல அல்லது அடையாளத்தைப்போல ஒரு அங்கியையோ அடையாளத்தையோ தரித்தால் 3 மாதங்களுக்கு மேற்படாமல் ஒருவகைக்காவல் அல்லது ரூ. 500-க்கு மேற்படாத அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

(தொடரும்)

உலகியல் மாலை.

(தொடர்ச்சி)

(முன் பகுதியை, மணிமாலை முன் தொகுதியுட் பார்க்க.)

கல்லீரலும், மண்ணீரலும்.

கல்லீரல்:— இது சற்றேறக்குறைய இருபத்தைந்து பலங் கனமுள்ள பெரியதொரு கருவி. இது மார்பையும், வயிற்றையும் பிரிக்கும் நீண்ட தசைத்திரளின் வலப்பக்கத்தின் கீழுள்ள குழியை நிறைத்துக்கொண்டும், வயிற்றின் இடப்பகுதியில் சிறிது படிந்து கொண்டும் அடிவயிற்றினைக் குறுக்கிட்டுக் கிடப்பது. பிளவொன்றினால் அது வல இதழ், இட இதழ் என இரண்டாகப் பிரிபடுகின்றது. இட இதழினும் வட இதழே மிகவும் பெரிது. வல இதழின் அடிப்பரப்பானது மீண்டும் மூன்று சிறு இதழ்களாகப் பிரிகின்றது. இவைகளில் ஒன்றின் வழியாகக் குடலிலிருந்த இரத்தத்தை ஈரலுக்கு எடுத்துச் செல்லும் ஓடை யொன்றும், பித்த நீர்க்குழலும், பெருநாடியின் சிறு கிளையொன்றும் செல்கின்றன. இந்த மூன்று நரம்புகளின் கிளைகளே ஈரலின் எல்லாப்பகுதிகளுக்கும் செல்லுகின்றன. இதன் பின்புறத்தின் மேற்பக்கத்தில் ஒரு நரம்புண்டு. அதுவே ஈரலினுள்ள குருதியைக் கீழ் ஓடைக்குக்கொண்டு போகும். உடலிலுள்ள உதிரத்தில் நாலில் ஒரு பங்கு ஈரலில் இருக்கிறது. அதன் நிறம் கருப்புக் கலந்த சிவப்பு. மூச்சை உள்ளிழுக்குங்காலங்களிலெல்லாம் நெஞ்சிற்குக் குறுக்காகவுள்ள நீண்ட

தசைத்திரளானது ஈரலைச் சுருக்கும். சுருக்கவே, அதன்கண்ணுள்ள குருதியானது, மிழ் ஒடையினுட் பாயும். பாயவே, இரத்த வோட்டம் மிகுதிப்படும். ஈரலானது எண்ணிறந்த இதழ்கள் சேர்ந்த சிற்றறைக் கூடுகளாலாயது. இவைகளெல்லாம் சேர்ப்பிறைகளால் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வறைக்கூடுகளே பித்தநீரைச் சுரப்பன. மேற்கூறிய இதழ்கள் வாயிலாகப் பித்த நீர் துளி துளியாக வெளிப்போந்து பித்தநீர்க்குழாயுள் விழும். பின்னர், ஈரலோடு இணைக்கப்பட்டிருக்கும் பித்தப் பையில் வந்து தங்குகின்றது. சிறுகுடலுள் உணவு புகுந்த அளவானே பித்த நீரானது பித்தப்பையிலிருந்து ஒரு பெரிய குழலின் வழியாய்க் குடலுள் வந்து பாய்கின்றது.

இனி ஈரலியற்றும் செயல்களைச் சிறிது ஆராய்வாம். ஈரலானது, குடரிலிருந்து வரும் பொருள்களின் நச்சுப் பண்டங்களை நீக்கி அவைகளைத் தூய்மை செய்கின்றது. அது பித்தத்தைக் கழிக்கின்றது; ஊன் சத்தை ஈட்டுகின்றது; கொழுப்பையும், சிறுநீரின் புளினியையும் (urea) ஆக்குகின்றது. பித்தமானது மஞ்சள் அல்லது பசுமை கிரவிய மஞ்சள் நிறமுடையது. பித்தக்குழம்பானது கெட்டுப்போன செந்நிற அணுக்களினின்றும் கழிந்த சிவந்த பொருளாலாயது. பித்தத்தில் ஒருவித உப்பு உண்டு.

இந்தப் பித்த உப்பு கொழுப்புக்கலந்த புளினியைக் கரைக்கும் நீர்மையது. இது மிகுதியும் மலத்துடன் கழிவதில்லை. ஆனல் மிகுந்த பாகம் ஈரலுக்குள் மீண்டும் போய்ச்சேருகின்றது. பித்தத்தில் மற்றும் சில நிலக்கனி உப்புக்கள் உள. ஈரலினுட் செல்லும் சர்க்கரையானது அங்குள்ள அணுக்கூடுகளால் ஊன்தசையாகத்திரிகின்றது. இந்த ஊன் பசையினை, பசியினுல் வருந்தும்பொழுது ஈரலானது மீண்டும் சர்க்கரையாக்கிக் குருதிக்குக் கொடுத்து விடுகிறது. இவ்விதமாக ஈரலானது எப்பொழுதும் தசைத்திரள்கட்குச் சர்க்கரையைக்கொடுத்து உதவுகின்றது. பயனில்லாத ஊன்பசை கொழுப்பாக மாறுகிறது. ஈரலால் சர்க்கரையானது ஊன் பசையாக மாற்றி வைக்கப்படாது போனுல் அது சிறுநீர்க்காய்களின் வழியாய் வெளியாகின்றது. இதனையே நீரிழிவு நோயெனப் பகர்வர்.

மிகுதியான வெண் கருச்சத்தினை உட்கொண்டால் அவை கேடு விளைக்காவண்ணம், அவைகளை ஊன் பசையாகவாவது, சிறுநீர் புளிப்பாகவாவது மாற்றி ஈரல் வைத்துக்கொள்ளும். ஊனிழைகளினின்றுங் கழியும் நவச்சாரம் முதலிய வெடியுப்புக்கழிவுப் பொருள்களைச் சிறுநீர்ப் புளிப்பாகவும் மாற்றும். அச்சிறுநீர்ப்புளிப்பு சிறுநீர்க்காய்கள் வழியாய் வெளியாகும்.

மண்ணீரல்:— வயிற்றின் இடப்பாகத்திற் கிடப்பது. அது மெல்லியதாய்த் தட்டையாய் ஐந்தங்குல நீளமுள்ளது. சேர்ப்பிழைகளால் பிணைக்கப்பட்ட இருண்ட சிவந்த தசைக்கூறாலாயது. இந்தத் தசையானது குருதியும் நிண நீர்க்கலங்களுமுடையது. இதற்குப் பெருநாடியின் கிளையொன்று இரத்தம் கொடுக்கிறது. ஒரு ஓடை அந்தக்குருதியை வெளிக்கொண்டு செல்கிறது. நிணநீர்க் கோளங்கள் போலவே மண்ணீரலும் அணுக்கூடுகளை ஆக்கவும், அழிக்கவும் வல்லதொரு கருவி. ஆயினும் மக்கள் உயிர்வாழ்வதற்கு இது இன்றியமையாத கருவியல்ல. இல்லாமலே உயிர் வாழலாம். மண்ணீரலைச் சுற்றியுள்ள சேர்ப்பிழைகள் எல்லாம் ஊனிழைகளைக் கொண்டுள்ளன. இவைகளே மண்ணீரலைச் சுருக்கி விரிக்கின்றது. வேறு சில மிகவும் சிறந்த நீர்க் கோளங்கள் இருக்கின்றன. அவை கேடுறின், உடலும் உடன் கேடுறும். அவற்றில் ஒன்று கழுத்தில் காற்றுக்குழாய்க்கு முன்பக்கம் இருக்கின்றது. இந்த நீர் குறைவாயுடையார் எல்லாம் பந்த மதியினராவர். மற்றிரண்டும் இரு சிறுநீர்க்காய்களினுச்சியில் இருக்கின்றன. இவை சிறியனவாயினும் இவையழிந்தவிடத்து உயிரும் உடனழியும். இவையெல்லாம் குருதியைப் புனிதப்படுத்தும் தொழிலுடையன.

சிறு நீர்க்காய்களும் சிறுநீரும்.

சிறு நீர்க்காய்கள் இரண்டுண்டு. அவைகள் கருமை கலந்த செம்மை வண்ணமுடையனவாயும், நாலங்குல நீளமும், இரண்டங்குல அகலமுமுடையன வாயும் திகழ்கின்றன. அடிவயிற்றிற்கும் குடற்சுருளுக்கும் பின்புறம், முதுகின் தண்டின் இருபுறமும் அவைகள் பொருந்திக் கிடப்பன. ஒவ்வொரு காயும் பெருநாடியின் கிளையொன்றைப் பெற்றுப் பின் தன்பாலினின்றும் பெரியதொரு ஓடையை விடுக்கிறது. இந்த ஓடை கீழோடையிற் பொருந்துகின்றது. இவையேயல்லாமல் ஒவ்வொரு காயும் வெண்மை நிறம் வாய்ந்த சிறுநீர்க்குழாயொன்றைப் பெற்றிருக்கின்றது. இந்தச் சிறு நீர்க்குழாய்களும் அடிவயிற்றின் பின்புறமாகச் சென்று சிறுநீர்ப்பையினுட்போய்ப் பொருந்துகின்றன. இது கோழைத்தாள்களால் வரியப்பட்ட ஒருதசைப்பை.

மேற்பட்டையும் உட்சத்தும்:— சிறு நீர்க்காயினை வெட்டிப்பார்த்தால், அங்குள்ள சிறுநீர்க்குழாயானது ஒருபுறம் பெய்குழல் வாய்போன்று அகன்று விரிந்திருக்கும். இந்த விரிந்த பாகத்துள் பன்னிரண்டு பட்டகோணங்கள் காணப்படும். பட்டகோணங்களின் அகன்ற பாகம் நீர்க்காய்களுக்குட் பாதித்தூரம் சென்று அங்கு சத்துப்பொருளாகின்றது. அந்தச்

சத்துப் பொருளுக்கு வெளிப்புறமே நீர்க்காயின் புறணி யிருக்கின்றது. இது கருமைபொதிந்த மண் னிறத்ததாய் பயிர்க்கதிர்போன்ற மின்னலையுடையது. ஆனாற் சத்துப்பொருளானது வெளுமையுடையதாய் வரிகள் நிறைந்திருக்கும். மேற்கூறிய பட்டகோணங் களுக்கிடையில் உதிரக்கால்களும் பாயப்பெற்றிருக் கும்.

நீர்க்காய்க் குழல்கள்:— பெருக்கக்கண்ணாடி வழி யாய் நீர்க்காயினை நுணுகி நோக்கினால், அளவில்லா தனவும், நீட்சியுடையனவுமான குழாய்களால் அது ஆக்கப்பட்டிருத்தல் நன்கு புலனாகும். இந்த நீள மான குழல்களெல்லாம் சிறு சிறு சேர்ப்பிழைகளாற் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அல்லாமலும் வலை வடிவுபோன்ற மயிரிழைக்குழல்களாலும் எம்மருங்கும் முற்றும் சுற்றப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கொடி யும், புறணியின்கண்ணுள்ள கிண்ணவாய் வடிவினதாய் இடத்திலிருந்து தோன்றும் மயிரிழைக் குழலின் பெருங்குழுவொன்று அக்கிண்ண வாயினுட் புகும். புகவே அதனகத்துள்ள உதிரமானது மிகவும் மெல் லிய ஒரு மடிப்புள்ள அணுக்கூடுகளால் பிரிக்கப் படும். இறுதியாக இந்தக்கொடிகளெல்லாம் புறணி யைச் சுற்றிப் பின், பட்டகோணங்களின் வழியாய்க் கீழிறங்கி சிறு நீர்க்குழாயை வந்தடுக்கும்.

சிறுநீர்க்காயில் இரத்த ஓட்டம்:- சிறு நாடிகளின் மூலமாய் நீர்க்காயின்கண்ணுள்ள மயிரிழைக் குழல்களுக்குக் குருதி பாய்கின்றது. மயிரிழைக்குழலிலிருந்து உதிரத்தைச்சேர்க்கும் சிற்றோடைகள் அம்மட்டில் அமையாது, சிறுநீர்க்காய்க்குழற் சுருளைச் சுற்றிலும் பல்வேறு மயிரிழைக்குழல்களாய் வலைபோல் பின்னவும் பட்டிருக்கின்றன. இருந்தவாற்றால் இருவேறு மயிரிழைக் குழல்கள் நெறியாகக் குருதி பாய்கின்றது. (1) கிண்ணவாய் வடிவுடைக் கருவி. (2) குழல் சுருள். முதல் கருவியில் இரத்தம் மிகு விரைவாய்ப் பாய்கிறது. ஆனால், குழல் சுருளில் துளிதுளியாகச் சொட்டுகின்றது. இந்த ஒழுங்கினால் நீரும் நிலக்கனியுப்பும் முதற் கருவியால் வடிக்கட்டப்படுகின்றன. இரண்டாவதால் சிறுநீர் வெளியாகின்றது.

சிறுநீரளவு:- சிறுநீர்க்காய்களில் ஓடுங் குருதியினளவுக்கேற்பவும், அக்குருதியில் வெளித்தள்ளுதலைத் தூண்டும் தன்மை வாய்ந்த பொருட்களின் கலப்பிற் கேற்பவுஞ், சிறுநீர் வெளி நீங்கும். மழைக் காலங்களில் உடற்கருவிகள் எலலாம் மிகவும் சுருங்கும். சுருங்கவே, உதிரம் அகத்தே மிகுந்தும் விரைந்தும் ஓடும். இரத்த ஓட்டம் மிகுதிப்படவே நீரும் மிகுதியாய்க் கழியும். ஆனால் கோடையில் இவ்வாறல்ல. வியர்வை மிகுந்து போவதான் சிறுநீர்

குறைந்து கழியும். அளவுக்கு மிஞ்சிய நீர் பருகினால் இரத்தம் தன் நிலைமை மாறி நீராளமாய்விடும். மீட்டும் தன் நிலையில் நிறுத்தற்பொருட்டு நீர்க்காய் மிகுதியும் வெளித்தள்ளும். சில உப்புக்கட்கும் இக்குணமுண்டு.

சிறுநீரானது வைக்கோலின் நிறமுடையதாயும், தெளிவாயும், சிறிது புளி நீருடையதாயுமிருக்கும். ஒரு நாள் ஒரு மனிதன் வெளிவிடும் நீர் 36 அவுன்சு. அதில் நீர்ப்பகுதி, உட்கொள்ளும் நீர் உணவிற்குத்தக வேறுபடும். ஆனால் கட்டிப்பொருளின் அளவு வேறுபாடுறுவதில்லை. கட்டிப்பொருள்கள், சிறுபுளிநீர்களும், நிலக்கரி உப்புக்களுமாம். அவை கரியுப்பு, கந்தகம், மாவுப்பு அல்லது சாம்பருப்பு, சோடாவுப்பு, சுண்ணாம்பு, காந்தவுப்பு என்பனவாம். ஆனால் மிகுந்து வெளிப்போவது வெறும் உப்பு ஒன்றுமே. சிறுநீர்ப் புளிநீர் நாள் ஒன்றுக்குச் சிறிதே கழியும். இப்புளிநீர் பொருத்துக்களில் தங்குவதால் வாதம் ஏற்படும். அவர்கள் வெண்கருச்சத்து மிகுந்த பொருள்களை உண்ணல் கூடாது. நீரில் பரல் இருப்பதற்குக் காரணம் சிறுநீரில் அப்புளிநீரினின்றும் உண்டான ஒள்ளிய துகளே. இதற்குக் காய்கறிகள் அதிகமாய் அருந்தின் மிகவும் நன்று. இறைமிச்சமும் நல்லது. இந்தச் சிறுபுளிநீரானது ஊன் நீரினின்றும் வெளியாகும் வெண்கருச்சத்தாலும், வெடியுப்புக்கழிபொருள்

களாலும் ஈரலால் ஆக்கப்படுவது. வெங்கருச்சத்து எவ்வளவு அதிகமாகின்றதோ அவ்வளவு சிறுநீரும் மிகும்.

தோலின் அமைப்பு.

மேல் தோல், கீழ் தோல் என தோல்கள் இரண்டு உள. இவைகளில் மேல் தோலானது பல அணுக்கூடுகளின் அடுக்குகளால் ஆக்கப்பட்டிருக்கின்றது. மேல்தோலின் வெளிப்பாகம் சிலும்புத் தன்மையது. கீழ்த்தோலானது, திண்மையான இழைகளாலும், தொய்வுள்ள சேர்ப்பிழைகளாலும் செய்யப்பட்டது. இதற்குக் கீழே கொழுப்படுக்கு ஒன்றுளது. இதுவே உடற்கு வட்டவடிவையும், மென்மையையும், அழகையுந்தரும். கொழுப்படுக்கிற்குக் கீழ் தசைத் திரள்கள் அமைந்திருக்கின்றன. தோலானது மெல்லிய சேர்ப்பிழைகளைப் புரப்பதுமல்லாமல் அவைகளைத் தத்தம் நிலைகளில் நிறுவவுஞ் செய்கின்றது. தோற்குக்கீழ் கண் உள்ள கொழுப்பானது மெல்லியதொரு மெத்தைபோல் நின்று உடலின் சூட்டினை வெளிப்போக வொட்டாது காத்துக்கொள்கின்றது. மேல் தோலில் உள்ள சிலும்பணுக்கள் அடிக்கடி கேடுறும். அந்தக்கேடுபாட்டை கீழ்பால் உள்ள வளர் அணுக்கூடுகள் பழுதுதீக்கிப் புதுப்பிக்கும். தோலிநிரம்பவும் இறுக்கமாயிருக்கும். மேல் தோலில்

உதிரக்கலன்கள் கிடையா. ஆனால் கீழ்த்தோலில் அவைகள் உள. உடலின் நீப்பட்ட இடத்திற்குக் கீழ் உள்ள நிணநீரானது பழுதுள்ள மயிரிழைக் குழல்கள் வாயிலாக சிறும்பனு அடுக்குகளைத் திறந்துகொண்டு வாரி இறைக்கும். இறைக்கவே அந்த இடமானது புண்ணாகும். கீழ்த்தோலில் முட்டைவடிவினதாயுள்ள பல உணர்வனுக்கூடுகள் உண்டு. மேல்தோல் அனுக்கூடுகளில் வந்து பொருந்தும் நரம்பு இழைகளை இவைகளிலும் வந்து பொருந்துகின்றன. இவைகளின் வாயிலாகவே ஊறு உணர்ச்சியைப் பெறுகின்றோம். தோல் மேல், வரைகளும் திரைகளும் அங்குமிங்கும் பரந்து கிடக்கின்றன. விரல்களிலே ஓடும் வரிகள் தனித்தனி இயல்பு வாய்ந்தன. ஒருவர் விரல்வரிகள் மற்று ஒருவர் விரல் வரிகளோடு ஒவ்வாதாய், மாறுபட்டுக்கிடப்பனவாம். தோலானது மதுநீர்க்கோளங்கள், நிணநீர்க்கோளங்கள், மயிர்க்கால்கள், நகங்கள் ஆகியஇவைகளை உடைத்தாயிருக்கின்றது.

இவற்றில், மதுநீர்க்கோளங்கள் உள்தோலில் இருக்கின்றன. ஒவ்வொரு கோளமும் சிறு குழற்சுருள் பந்துகளாலானது. ஒவ்வொன்றிற்கும் மேல் தோலில் வந்து திறக்கும் வாயுமுண்டு. தோல் எல்லாம் காலங்குல நீளமுள்ள இரண்டு இலக்க வியர்நீர்க் கோளங்களையுடையது. கணக்கிட்டுப் பார்த்தால்

பத்துக்கல் நீளமுள்ள வியர்வைக்குழல்கள் ஒருவருக்கு உண்டு என்பதை அறியலாம்.

வியர்வை என்பது பலவித உப்புகள் கலந்த ஒரு கழிவுநீர். அது நிலக்கனி உப்புக்களும் (urea) வும் சேர்ந்தது. எப்பொழுதும் அது மெதுவாக உடலில் நின்றும் நீங்கி வெளியாகிக் கொண்டிருக்கும். இவ்வாறு வெளிப்போதலை நாம் அறிதல் இயலாது. ஆனால், பெரு முயற்சியுடன் வேலை செய்யுங்கால் பொடிக்கும் வியர்வை, விரைவில் உலர்ந்து போகாமையால் உடல் முழுவதும் வழிகின்றது. இதனை நாம் அறிதல் கூடும்.

வியர்நீரின்வேலை:— நமது உடலின் சூட்டை மட்டுப்படுத்துவதாகும். சூடான காலங்களிலும், வருந்தி உழைக்கும்போழ்தும் குருதி விரைந்து ஓடும். ஓடவே, வியர்வை மிகுதியுமரும்பும். அப்பொழுது குருதியிலுள்ள சூடானது காற்றால் தணிக்கப்படும். அந்தச்சூடானது வியர்நீர் ஆவியாகத்திரியுங்கால்குறைபடும். படவே உடற்சூடான்து தணியும். குளிர் காலங்களில் தோல் துளைகள் சுருங்குவதால் வியர்நீர் சிறுகவே கழியும். சிறுநீர் மிகுதியும் வெளியாகும். வியர்வையை வெளிப்படுத்துவதும், உள் இருத்துவதும் நரம்பின் வினையாம். இதற்கு ஒருவர் சினங்கொள்ளுங்கால் வியர்நீர் சொட்டுதலே உறுஞ்சான்றாம்.

தோலினைக் கழுவுவதால் அதன்கண் படிந்து கிடக்கும் புழுக்கம் அதன் நின்றும் நீங்கும். நச்சுப் பொருள்களில் வாணிபம் செய்வார், கைகழுவாது உணவெடுத்தால் நாளடைவில் அவர்கள் உடல் நஞ்சு கலந்து துன்புறும். நஞ்சுகள் புண்வாயிலாய் அல்லாமல் செவ்வையான தோல்வழியாய் உள் செல்லல் அரிது. தண்ணீரிலாதல் கடலிலாதல் நீராடுதல், அது நரம்புகட்கு மிகுந்த உற்சாகத்தையும் வலிமையையும் ஊட்டும். நீராடியதும் உடம்பெங்கும் எண்ணெய் தடவல் வேண்டும்.

மயிர்க்கால்கள் அமைப்பு:— மயிர்க்கால்கள் அளவில்லாத அணுக் கூடுகளாலாயது. அவைகளின் வெளிப்பக்கம் ஓட்டடுக்குப் போன்று, ஒன்றின்மேலொன்று ஏறிய, உணர்வில்லாத, திண்ணயான அணுக்களால் செறியப் பட்டிருக்கும். அணுக் கூடுகளில் எல்லாம் மிக நுண்ணிய அணுவாலாகிய கூட்டுமை ஒன்று உண்டு. நிணநீர்க்கோளங்களைச் சுரக்கும் குழிகளிலிருந்தே மயிர்க்கால்கள் தோன்றும். மயிர்க்கால்களெல்லாம் தசைச்சிலும்புகளுடன் சேர்க்கப் பட்டிருக்கின்றன. ஆகையினாலன்றோ மயிர்கள் எல்லாம் தம்பலத்தில் நிற்கின்றன. மயிரின் குழம்புகளை நிணநீர்க்கலங்கள் தம்பால் ஈர்த்துக்கொள்வதால் மயிர்கள் கருமை நிறம் நீங்கி வெளிறும். புழுக்

கடியால் மயிர்கள் உதிர்ந்து விடும். அழுந்தச் சிவிருல் இரத்த ஓட்டம் தலை ஓட்டில் மிகுதியாகும். ஆகவே, மயிர்கள் நன்கு முளைத்து வளரும்.

உடற்சூடு:— உடலின் உட்சூடானது எஞ்ஞான்றும் ஒரே நேர்மையது. பல் பறை கொட்டும் குளிர் காலத்தால் குறைபடுவதுமில்லை, வியர்நீர் ஓடும் கோடைகாலத்தால் மிகுவதுமில்லை. இருகாலங்களிலும் நற்சுகமுடையான் உடலின் அகச்சூடானது 98° அல்லது 99° இருக்கும். இவ்வனம் உடலகச்சூடு வேறுபாடுறாது ஒரே தன்மையதாயிருக்க, தோலின் சூடோ எக்காலத்தும் மாறுபடும். குருதி ஓட்ட ஏற்றத்தாழ்வுகட்கு ஏற்பச் சூடும் ஏறத்தாழும். உடலின்மேல் ஆடையணியாக் காலத்தும், குளிர்கோடை காலங்களுக்கேற்பக் குறைந்து மிகும். ஆகலான், தோற்சூடுகொண்டு உடற்சூடு இதுவெனத் துணிதல் ஏலாது. உடற்சூடானது, தன் இடத்துண்டாகுஞ் சூடு, கழியுஞ் சூடு என்னும் இரண்டினைப் பொறுத்தது.

தொழிலியற்றுகின்ற கருவிகளிலெல்லாம் அவற்றில் உயிர்க்காற்றின கலப்பினுல் சூடு உண்டாகிறது. தசைத்திரள்களிலே முக்கியமாகச் சூடு புலப்படுகின்றது. வெப்பமான நாளில் தசைத் திரள்களுக்குக் கடினமான வேலை கொடுத்தால், அவை உடற்சூட்

டினை நாறுவரை அல்லது நாற்றிஒன்று வரை உயர்த்திக்காட்டும். தசைத்திரளில் சூடு உண்டாகும் முறைக்கு உதாரணமாக தேன் கூட்டின் சூட்டினை வைத்துக்கொள்ளலாம். வெளிக்காற்றானது குளிர்ந்து போய் தேனீக்கள் குளிரினால் அசைய முடியாது சோம்பலாயிருக்கும் நேரத்தில், தேன் கூடானது குளிர்ந்து சூடு யாதுமில்லாததாகத்தோன்றும். தேன் எடுப்பதற்காக ஈக்களைக் கலைத்து அவைகளுக்குள் சுறுசுறுப்பு உண்டாக்கினால் தேன்கூட்டின் சூடானது சூடளக்குங்கருவியில் அறுபதுவரை அளவு உயர்ந்து காட்டும். உடம்பிலே தொழிற் படுகிற தாதுக்களில் உண்டாகிற சூடு, இரத்த ஓட்டத்தினால் உடம்பின் எல்லாப்பாகத்துக்கும் சமமாகப்பகுத்துக் கொடுக்கப்படுகிறது. குளிருள்ள காலத்தில் மனிதன் சூடுண்டாக்குவதற்காக உடம்பையசைப்பதும், கைகளைத்தட்டுவதும், காலினால் குதித்தோடுவதும் செய்கின்றான். கொழுப்புள்ளஉணவுகளைஉண்பதினாலேயும் அவை செரிக்கும் காலத்தில் உடம்பிற் சூடு அதிகமாகிறது. வெப்பமான காலத்தில், உணவினைக், குறைய உண்டு வேலை செய்வதுங் குறைவதினாலே உடம்பினுண்டாகக்கூடிய சூடும் குறையும். மலசலங் கழிப்பதினாலும், மூச்சுவிடுவதினாலும் உடம்பிலுள்ள சூடு குறைகின்றது. குளிர்காலங்களில் தோலிலுள்ள இரத்தக்குழல் சுருங்குவதனாலே வெளியே செல்லும்

வியர்வை நீர் குறைகின்றது. இருக்கின்ற அறையை வெப்பமாக்குவதாலும், உடம்பை நன்றாய் மூடிக் கொள்வதாலும், உடம்பிலுள்ள சூடு வெளியே அதிகமாகச் செல்வதற்கிடமில்லை. உடைகளுக்கிடையே காற்றுத்தங்குவதினால் வெப்பமுண்டாகும். ஏனெனில், காற்று சூட்டை அதிகமாக வெளிச்செல்லாமல் அடக்கிவைத்துக்கொள்ளும் இயல்புடையது. மயிர்க்கம்பளத்தாலாயஉடைகள் பருத்தியாடைகளைப் பார்க்கிலும் அதிகச் சூடாயிருப்பதற்குக் காரணம், அவைகள் கடற்பஞ்சுபோன்று காற்று தங்குதற்குரிய நுண்ணிய தொளைகள் மிகுதியாக உடைமையே. அவற்றில் தங்கும் காற்று உடம்பிலுள்ள சூட்டை ஏற்று அதனை வெளிவிடாமலிருப்பன என அறிக. உடைகள் இலேசாகவும், தசைகளின் இயக்கத்தைத் தடைப்படுத்தாமலுமிருக்க வேண்டும். தொடைகளை இறுக்கிக்கட்டுவதினாலும், நெறுக்கமான செருப்புக்களைக் காலில் தரிப்பதாலும், தசைகளின் இயக்கம் குறைவு படும். குழந்தைகளுக்கு உடை உடுத்துவதில் சூட்டினை அதிகப்படுத்தும்படி உடைகளால் அதிகமாக மூடக்கூடாது. அவைகள் இரத்த ஓட்டத்தைத் தடை செய்யும். சூட்டிற்கும் குளிருக்கும் உடம்பினைப்பழகும்படி செய்துகொள்ளுதலே எக்காலத்திலும் நல்லதெனவறிக.

நரம்பமைப்பு.

நமது உடம்பிலுள்ள நரம்பின் தொகுப்பானது, தலையோட்டினுட் பொதியப்பட்ட மூளையும், அதனோடு தொடர்புடையதாய் முதுகெலும்புக் கால்வாயுட் கிடக்கும் கொடிபோன்ற முதுகு நரம்பும், மூளையினின்றும் முதுகுக்கொடியினின்றும் உடம்பிலுள்ள கருவிகளுக்குச் செல்லும் நரம்புகளும் கூடியதாம்.

நரம்புகள் இருவகைப்படும். பொறிகளினின்று மூளைக்கும் முதுகுக்கொடிக்கும் செய்திகளைக்கொண்டுணர்த்தும் அறிவு நரம்புகள் ஒரு வகை. மூளையினின்றும் முதுகுக்கொடியினின்றும் செய்திகளைப் பலவகைக் கருவிகளுக்கும் எடுத்துச்செல்லும் செயல் நரம்புகள் ஒரு வகை. முதுகுக்கொடியில் இடையிடையே சமதூரத்தில் நின்று இருபக்கத்திலும் இரட்டை நரம்புகள் செல்கின்றன. அத்தகைய நரம்புகள் முப்பத்தொன்று. அவைகள் முதுகெலும்புத் துண்டுகளுக்கிடையேயுள்ள துளைகள்வழியாகச்சென்று தோலிலும் தசைத்திரளிலும் கருவிகளிலும் பலவாறாகப் பிரிந்து அவற்றை நிரப்புகின்றன. மார்பிலே நரம்பினமைப்பு ஒழுங்காய் இருக்கின்றது. முதுகில் நின்று பிரிகின்ற ஒவ்வொரு இணைநரம்பும், அதற்கு நேராகவுள்ள இணைவிலாவெலும்புகளினிடையேயுள்ள

தசைத்திரளிலும், தோலிலும் வேண்டிய நரம்புகளை நிறைத்துவைத்திருக்கின்றது. கழுத்திற்கும், இடுப்பிற்கு நேராகவுள்ள முதுகெலும்புத்துண்டுகளுக்கும் இடையே செல்கின்ற நரம்புகள், கழுத்தையும் வயிற்றையும் வயிற்றுச்சுற்றுப்புரத்தையுஞ்சுற்றிச்சென்று, அவற்றிற்கு நேராக இருக்கும் தசைத்திரளிலும் தோல்களிலும் நரம்புகளை நிரப்புகின்றன. முதுகெலும்புக்கொடியினின்று கழுத்தின் கீழ் செல்லும் நரம்புகள் மிகவும் கனமாய் உடம்பிற்குச் சுவர்போல அழுத்தமாக இருப்பதுடன் கைகளுக்குப் பெரிய கிளைகளையனுப்புகின்றன. அவ்வாறே முதுகின் கீழ்ப்புரம் இடுப்பிலும் முதுகெலும்பின் முனையிலும் உள்ள நரம்புகள் அழுத்தமானவைகளாய் இருப்பதுடன் கால்களுக்கும் பெரிய கிளை நரம்புகளையனுப்புகின்றன. முதுகுக்கொடியிலிருந்து செல்கின்ற ஒவ்வொரு இணை நரம்பும் அக்கொடியின்முன்புறமும் பின்புறமும்நின்று கிளைக்கின்ற இரண்டு அடிப்பகுதிகளை யுடையது. அவற்றின் முன்பகுதி செயல் வேரெனவும் பின்பகுதி உணர்ச்சி வேரெனவுங் கூறப்படும். இரண்டு பகுதியும் கூடுகின்ற இடத்தில் பின்பகுதியின்மீது ஒரு கணு உண்டு. வலது காலுக்குப்போகிற நரம்புகளின் உணர்ச்சிவேரை வெட்டிவிட்டால் காலில் ஊசியினாலே குத்தினாலும் உணர்ச்சிஇராது. செயல்வேரைத் தறித்துவிட்டால் கால் நொண்டியாகத் தொங்கித்

திமிர்வாதம் பிடித்துவிடும். ஆகையால் இரண்டு வேர் களும் நரம்புகளுக்கு முக்கியமானவையென்றறிக.

ஒரு பெரிய நரம்பானது மின்னுகிற ஒரு வெள் ளைக்கயிறுபோலத் தோன்றும். உ தா ர ண மா க த் தொடையின் பின்புறத்தில் தசைத்திரளுக்கு ஊடே செல்கின்ற இடுப்பு நரம்பைப் பார்க்கவும். அது காலி லுள்ள தசைத்திரள்களிலும் தோலிலும் நரம்புத் தொகுதிகளை நிரப்புதற்குச் செல்கின்றது. அதன் சிறு கிளைகள் வெள்ளை நூல்போலத் தோன்றும். மிக வும் நுண்ணிய கிளைகள் பூதக்கண்ணாடி மூலமாகத் தான் பார்க்கமுடியும். பஞ்சுநூலை இழைகளாகப் பிரிப் பதுபோல ஒரு நரம்பையும் ஊசியினாலே குத்திச் சிறுசிறு நூல்களாகப்பிரித்துவிடலாம். பூதக்கண்ணாடி வழியாகப்பார்த்தால் மிக நுண்ணிய நரம்பு நார்களின் தொகுதியாக ஒவ்வொரு நரம்பும் தோன்றும். அந் நரம்புநார்கள் கட்டுக்கட்டுகளாகச் சேர்ப்பிழையினாலே கட்டப்பட்டுள்ளன. நரம்புநார்கள் நாலாயிரத்தை ஒன் றின்பக்கம் ஒன்றாக வைத்தால் ஒரு அங்குலத்துள் அடங்கிவிடும். அவை அவ்வளவு நுண்ணியனவாய் இருக்கின்றன. ஒவ்வொரு நரம்புநாரும் ஒருவகை யான வெள்ளைக்கொழுப்புக் கூட்டத்திலடைத்த முதற் சத்தினாலாகிய ஒரு நாலென வறிக. அந்தக் கொழுப் புக்கூட்டைச் சுற்றிக் கண்ணாடிபோன்ற ஒரு மேல்

தான் முடிவிருக்கிறது. முதற்சத்தாலாகிய நூல் ஒரு நரம்பு அறுக்கூட்டின் மீட்சியாக இருக்கிறது. அது நரம்புத் தொகுதியின் மூலத்திலிருந்து தசைத்திர ளில் அல்லது அதிக நுனியில்போய் முடிகின்ற இடம் வரை முறிவுபடாத ஒரு சரடுபோலச் செல்கின்றது. அதுவே நரம்பின் முக்கிய பகுதியாய்ச் செய்திகள் கொண்டுபோகின்ற தந்திக் கம்பிகள்போலத் திகழ் கின்றது. அதைச்சுற்றியுள்ள கொழுப்புக்கூடு அதைப் பாதுகாத்து வளர்ப்பதுடன் மற்றை நரம்புநாரின் உட் பகுதியினின்று அதைப்பிரிக்கின்றது. மயக்கமருந்தி னுற் கொல்லப்பட்ட ஒரு தவளையின் காலில் இடுப்பி லிருந்து வரும் நரம்பைக் கிள்ளினுலும், வெகுகூடான கம்பியினுல் தொட்டாலும், அதில் ஒரு வகையான கிளர்ச்சியுண்டாகி. அக்கிளர்ச்சி தசைத் திரளுக்குச் சென்று அதனைச் சுருக்கும்படி செய்கின்றது. அந் நரம்புக் கிளர்ச்சியானது ஒரு கம்பி வழியாகச் செல் லும் மின்சக்தியானது ஒரு மணியை அடிப்பதுபோ லாகும். நரம்புக் கிளர்ச்சியின் தன்மையைப்பற்றி நாம் ஒன்றும் எளிதாக அறிய முடியாது.

முதுகிலுள்ள நரம்புக்கொடியானது முதுகெலும்புக் கால்வாய் கபாலத்தோடு சேர்கின்ற இடத்தில் மூளையோடு சேர்கின்றது. முதுகெலும்புக் கூட்டின் கீழ்ப்புறத்து முதுகு நரம்புக்கொடியானது, ஒரு நுனி

யாக ஒடுங்கி நரம்பு வேர்த்தொகுதியால் சூழப்பட்டிருக்கிறது. அத்தொகுதியைக் குதிரை வார் என்பார்கள். அந்நரம்பு வேர்கள் கீழ்ப்பகுதியிலுள்ள முதுகெலும்புத்துண்டு வழியாகப் பிறபகுதிகளுக்குச் செல்கின்றன. முதுகு நரம்புக்கொடியானது கால்களுக்கும் கைகளுக்கும் பெரிய வேர் நரம்புகள் பிரிகின்ற இடத்தில் தடித்திருக்கின்றது. முதுகு நரம்புக் கொடியானது மூன்று உறைகளால் மேலுறையானது சேர்ப்பிழையாலாகிய அழுத்தமான சட்டை. உள்ளுறையானது முதுகுக்கொடிக்கு வேண்டிய இரத்தக்குழாய் கொண்டுள்ளது. இவ்விரண்டிற்கும் நடுவே சிலந்திக் கூடு போன்ற மெல்லியபோர்வையானது கிடக்கிறது. அதற்கும் உள்ளுறைக்கும் நடுவேயுள்ள இடத்தில் ஒரு நீர்க்கசிவானது முதுகுக் கொடியின் எப்புறமும் சூழ்ந்துள்ளது. அந்நீர்க்கசிவாலும் அதற்கு வெளியேயுள்ள முதுகெலும்புக் கூட்டினாலும் முதுகுக்கொடியானது இடஞ்சல்களினின்றும் இடையூறுகளினின்றும் பாதுகாக்கப்படுகிறது. முதுகுக் கொடியைக் குறுக்காக வெட்டிப்பார்த்தால், நடுவிலே ரோஜாப்பூ நிறமும் சாம்பல் நிறமுங் கலந்த சத்துப்பகுதியும், அதைச்சுற்றி வெண்சத்துப்பகுதியுங் காணப்படும்.

(தொடரும்)

தொழில் மூலம்.

மக்களைக் கீழ்ப்பட்ட பிராணிகளினின்று பிரித்துக்காட்டுவது ஆயுதப் பயிற்சியாகும். தற்காப்பிற்காகக் கல் துண்டுகளையும், மரத்துண்டுகளையும் முதன்முதலில் மனிதர் பயன்படுத்தினர். ஆப்பிரிக்காவிலுள்ள பெரிய குரங்குகள் கொட்டைகளை யுடைப்பதற்குக் கற்றுண்டுகளை யுபயோகப்படுத்துவதாகவும், கழிகளையும் கற்களையுங்கொண்டு சண்டை புரிவதாகவும், உயிர்நூலாசிரியராகிய டார்வின் குறிப்பித்திருப்பதை நோக்குமிடத்து, மனிதனுக்கு முற்பட்ட பிராணிகளும் ஆயுதத்தைப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. மனிதன் முதலில் தனது கைவன்மையால் கோளாங்கற்களைச் செதுக்கிக் கைப்படையாக வழங்கினதாகத் தெரிகிறது. அத்தகைய கல்லாயுதங்கள் பல நாடுகளிலும் தோண்டி யெடுக்கப்பட்டிருக்கின்றன. கல்லினலே கோடாரிகள், அம்பு நுனிகள், ஈட்டிகள், மண்வெட்டிகள், வட்டமான எறிகற்கள், சம்மட்டிகள், அரிவாள்கள், கத்திகள், சிக்கிமுக்கிக் கற்கள், தண்டுகள், பாசுகள் என்னும் பத்து வகையான கல்லாயுதங்கள் இந்தியாவிலே கிடைக்கின்றனவென்று Bruce Foote என்பவர் ஆய்ந்து கூறினர். மரஞ்செடி கொடிகளுள்ள இடங்களில் மனிதன் மர

ஆயுதங்களையும் நெடுநாட்கு முன்னமே உபயோகப் படுத்தி வந்திருக்கிறான். பழங்கற்காலத்தில் மனிதன் வித்துக்களையும் பழங்களையும் பொறுக்கித் தின்றான். விலங்குகளின் தோலையும் மரவுரியையும் அணிந்தான். தீயுண்டாக்கத்தெரியாத காலத்தில் வெந்து பக்குவமாகாத உணவுகளை யுண்டுவந்தான். குகைகளிலும் பொந்துகளிலும் வசித்துவந்தான். சித்திரமெழுது மியல்பு மனிதனுக்கு நெடுநாட்கு முன்னே யேற்பட்டிருப்பது அவன் குகைகளில் எழுதியும் செதுக்கியுமிருக்கும் பிராணிகளின் படங்களால் தெரியவருகிறது. அறிவு முதிரமுதிர ஒவ்வொரு தொழிலிலும் மனிதன் விருத்தியடைந்திருக்கிறான். நெருப்பு மூட்டுவதற்குத் தெரிந்தபின் சமையல் தொழில் ஏற்பட்டு விருத்தியடைந்திருக்கிறது.

கொழுப்பினால் விளக்கேற்றத் தெரிந்துகொண்டான். குயவனது சக்கரமேற்பட்டபின் சட்டிபானை முதலிய பாத்திரங்கள் உண்டாயின. பருத்தி முதலியவற்றின் உழவு ஏற்பட்டபின் நெய்தற் றொழிலானது சிறப்புற்றது. குடியிருப்பதற்கு முதலில் மண் சுவரும் தழைக்கூரையுமுடைய பன்னசாலையமைக்கப்பட்டது. நெருப்பின் உபயோகமும் ஆயுதங்களின் வகைகளுந் தெரிந்தபின் செங்கல்லினாலும் கல்லினாலும் மனிதன் வீடுகட்டப் பழகிக்கொண்டான்.

சுருங்கக்கூறின் உண்டி, உடை, உறையுள், கலன்கள், ஒவியங்கள், மருந்து, காப்பு முதலிய எல்லா வகை நுகர்ச்சிப் பொருளையும் மனிதன் அறிவு வளர்ச்சிக்கேற்ற கைத்தொழில் முறைகளை விருத்தி செய்வதினாலேயே அமைத்துக்கொண்டான் என்பதை நோக்குமிடத்து முயற்சி திருவினையாக்கும் என்பது கண்கூடாமன்றோ!

இந்திய நாட்டில் உணவிற்குரிய விளைபொருள்களும் உடைக்குரிய பருத்தி, பட்டு முதலியனவும் நெடுநாளாக நன்கு பயிரிடப்பட்டு வந்தன. எகிப்தினுள்ள நீலநதிக் கரையினும் பருத்தி நன்றாக விளைந்தது. தற்காலத்தில் அமெரிக்காவில் பருத்தி அபரிமிதமாக விளைகின்றது. பருத்தியைச் சுத்தஞ்செய்து நூற்றுப் பலவகையான ஆடைகள் நெய்தற்குரிய இயந்திரங்கள் பலவற்றையும் ஆங்கிலநாட்டினர் கண்டு பிடித்தமையால் மிகுதியான துணிகள் இங்கிலாந்தில் நெய்யப்பட்டு அயல்நாட்டுக்குச் செல்கின்றன. இங்கிலாந்தின் செல்வத்திற்கு இது ஒரு சிறந்த காரணம். இந்தியாவினும் பருத்தி ஆலைகள் சில இடத்தில் ஏற்பட்டிருந்தாலும் இன்னும் அவைகள் இந்திய நாட்டிற்குரிய துணிகளனைத்தையும் உண்டாக்கும்படி பெருகவில்லை. இந்தியாவில் கையினால் மேன்மையான நூல்கள் ஆதியில் நூற்கப்பட்டன. அவை கொண்டே

மஸ்லின் துணி முதலியவைகள் செய்யப்பட்டன. இப்போது இயந்திரத்தின் உதவிகொண்டு ஒரு பவுண்டு பருத்தியிலிருந்து நூற்றுத்தொண்ணூறு மைல் நீளமுள்ள நூல் நூற்றல் கூடுமென்று தெரிகிறது. ஆயிரம் மைல் நீளமுள்ள நூல்கள்கூட நூற்றல் கூடுமென்ப. ஆனால் மிக மெல்லிய உடைகளுக்குப் பயன்படுகின்ற நூல்கள் பவுண்டுக்கு சுமார் தொண்ணூற்றைந்து மைல் நீளமுள்ள நூல்களேயாகும். இயந்திரமானது நூற்கும் நேரத்தைச்சுருக்குகின்றது. ஒரு இயந்திரத்திலுள்ள ஒவ்வொரு ஊசியிலும் கால் நிமிடத்தில் 64 அங்குலம் நூல் நூற்கப்படுகிறது. ஒவ்வொரு இயந்திரத்திலும் ஆயிரம் ஊசிகளுக்குமேல் அமைத்தல்கூடும். ஆதலால் கையினால் நூற்பதைப்பார்க்கிலும் இயந்திரமானது பல்லாயிரம் மடங்கு விரைவாக நூல்நூற்பதால் ஆலைகளின் அவசியம் இன்றியமையாததென்றறிக.

இயந்திரத்திற்கு முதற்காரணம் இரும்பும் நிலக்கரியுமாகும். இரும்பும் நிலக்கரியும் இங்கிலாந்தில் மிகுதியாயுள்ளனவெனினும் மண் கலந்த இரும்பிலிருந்து இரும்பைப் பிரித்தெடுப்பதற்கு இந்தியரிடத்திலிருந்தும், ரோமரிடத்திலிருந்தும் பிரிட்டன் தேசத்தார் ஆதியில் கற்றனர். இற்றைக்கு சுமார் மூந்நூறுண்டுகளுக்குள்தான் இயற்கைநூலாராய்ச்சி

யால் இரும்பை முற்றிலும் தூயதாக்கவும், இரும் பொடு நிலக்கரியைச் சேர்த்து உருக்கிப்பலவகையான இயந்திரங்கள் அமைத்துக்கொள்வதற்கும் ஆங்கில நாட்டினர் தெரிந்துகொண்டனர். சிறந்த ஆயுதங்கள், கப்பல்கள், புகைவண்டிப் பாதைகள், அச்சுச்சாலை பெரிய வீடுகள், சிறிய ஊசிகள் முதலிய எல்லாம் இரும்பில்லாமற்போனல் தற்கால வுலகத்திற்றேன்றி யிருக்கமாட்டா. கோடிக்கணக்கான இரும்புச்சாமான்கள் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுஞ் செய்யப்படுகின் றன. இந்தியாவில் "டாட்டா" ஏற்படுத்திய ஆலை யே இருப்பு வேலைகளுக்குச் சிறந்த இடமாகத் தெரி கின்றது. தற்கால முறையில் தொழில் வளர்ச்சி மிகு வதற்கு இயந்திர ஆலைகளும் இரும்புச் சுரங்கவேலை களுமவசியமானவை.

இந்தியா பிறநாடுகளோடு ஒத்த செல்வநிலையை எய்தவேண்டுமானல் நாட்டிலுள்ள பல்வகைக் கைத் தொழிலையும், பல்வகை இயந்திர ஆலைத்தொழில்களை யும் முன்னேற்றமடையச் செய்வதற்குரிய பெரிய இயக்கம் விரைவிலேற்பட்டு எல்லாராலும் ஆதரிக்கப் படவேண்டும். சிற்பம், ஓவியம், இசை முதலிய கவின் கலைகளும், சமயமெய்ந்நூற்கலைகளும் தழைத்தோங்கி யிருந்தாலும் அவற்றைத் தற்கால முறையில் வளம் படுத்தி விரிவுசெய்வதற்கு மேலைநாட்டுத் தொழில்

முறைகளையும் இயந்திர வேலையையும் நாம் கையாள வேண்டியது அவசியமாக இருக்கிறது. பல்லோருடைய முயற்சியும் இந்த வழியில் ஒற்றுமைப்பட்டு இடைவிடாமல் நடக்குமாயின் தொழிற்கலைகளிலும் இந்தியாவானது தலை நிற்கும்.

இற்றைக்காலத்தில் முயற்சியின் பயனாக வானிற் பறந்துசெல்லும் ஊர்தியை மேலை நாட்டினர் கண்டு பிடித்திருப்பது வியத்தகு செயலாகும். ஆதியில் தமிழ்நாட்டில் வான ஊர்திகள் இருந்தனவென்பது சிந்தாமணி முதலிய நூல்களால் தெரியவருகிறது. மயிற்பொறி என்னும் ஒரு வகையான விமானத்தில், சச்சந்தன் என்னும் அரசனது மனைவி ஏறிச்சென்ற காலத்தில், தன் கணவன் இறந்த செய்தி கேட்டு மயக்கமுற்று விமானத்தைச் செலுத்துஞ் செயலைத் தவிர்ந்தமையால், அவ்விமானமானது கீழே தாழ்ந்து ஒரு சுடுகாட்டில் தங்கியதென்று சிந்தாமணியிற் கூறப்பட்ட கதையைச் சிலர் நம்பாதிருக்கலாம். சித்தர் நூற்கருத்துப்படி ஒரு வகையான மருந்துக் குளிகையை வாயிலிட்டுக்கொள்வதால் உடம்பானது காற்றினும் மென்மையான நிலையையடைந்து மேலே கிளம்புதற்கு உரியதாகின்றது. காற்றிற் செல்லும் வாகனமானது காற்றைவிட மெல்லியதாக இருக்க இருக்கவேண்டுமென்ற கருத்து இந்நாட்டிலும் மேலை

நாட்டிலும் சில அறிஞர்களால் சில நூற்றாண்டுக்கு முன்னமேயே வெளியிடப்பட்டதே யெனினும் பதி னெட்டாவது நூற்றாண்டி னிறுதியிற்றான் அதற் குரிய பரிசோதனைகள் தொடங்கின. பிரான்சு தேசத் திலிரண்டு சகோதரர்கள் புகையானது மேலே செல் வதைப்பார்த்து, அதுகாற்றிலும்லேசானதால் அதை ஒரு காகிதப்பையில்நிறைத்து, அப்பையை ஒரு வீட் டின் முகட்டின்மேலிருந்துகாற்றில் மிதக்கவிட்டனர். அது மேலே சென்று சிறிது நேரம் காற்றில் தங்கி யது. புகைப் பைக்குள் புகை மிகுவதற்காக அனல் தட்டொன்று வைக்கப்பட்டது. பின்னர் சில காலங் கழித்து காகிதமுள் பொதிந்த துணிப்புகைக்கூடு செய்து அதனோடு மனிதன் இருப்பதற்குரிய கூட் டையுஞ் சேர்த்துக்காற்றில் செலுத்தப்பட்டது அது மேலுங்கீழும் போய் அசைந்துகொண்டிருந்தமையால் செவ்வையாக மேலே செல்லவில்லை. புகைக்குப்பதி லாகக் காற்றிலும் மிக மெல்லியதாகிய நீர்க்காலினை (Hydrogen) உபயோகப்படுத்தத் தொடங்கினர். நீர்வாயு நிறைத்த புகைக்கூண்டில் இரண்டு பிரஞ்சு வீரர்கள் பதினாலாயிரம் அடி உயரம் மேல் சென்ற னர். காற்றாடிபோலச் சில புகைக் கூண்டிற்கு நீளக் கயிறும் கட்டப்பட்டிருந்தது. ஒரு நூற்றாண்டு முழு வதும் புகைக்கூண்டுகளே வானில் உலாவின. அதனால் காற்றினடுக்குகளையும் அவற்றின் நிலைகளையும் புகைக்

கூண்டினர் நன்ருகத்தெரிந்து பலவுண்மைகளை உலகிற்கு இயம்பினர். அவ்வுண்மைகள் காற்றுக்கப்பல் செய்வார்க்குப் பயன்பட்டன. புகைக் கூண்டுகள் அதிற் செல்லுவார் விருப்பப்படி செலுத்தத் தகாதனவாயிருந்தன.

புகைக்கூண்டின ரொருபுறமிருப்ப, சிலர் இலேசான சமநிலையுள்ள தகட்டு இயந்திரமொன்று செய்து அதைச் சுவரிலிருந்தும், கட்டிடங்களின் உச்சியிலிருந்தும் வேகமாக மேலே எறியும்படிசெய்து அதை மெதுவாகக் கீழே வந்து இறங்கும்படி செய்துவந்தனர். ஆஸ்திரேலியர் உபயோகப்படுத்தும் ஒருவகை எறிதடியானது நுனியில் வளைந்த கொக்கியை உடைமையால் அதை விரைவாக எறிந்தபோது சிறிது தூரம் சென்று மீளவும் எறிந்தவன் பக்கமே அது வருவதாக இருந்தது. அதைப் பார்த்தும் காற்றுக்கப்பலைச்செலுத்தும் கருவியை ஒழுங்குபடுத்தினரென்று சிலர் கருதுகின்ருர்கள். விரைவாகச் செல்லும் இயந்திரம் மெதுவாகச்சென்ருல் தூக்கிச் செல்லக்கூடிய கனத்தைப் பார்க்கிலும் அதிக கனமுள்ள பொருளை இழுத்துச் செல்லக்கூடுமென்று கண்ட அமெரிக்க அறிஞராகிய லாங்லி (Longley) என்பவர் 1896-ம் வருஷத்தில் இயந்திரத்தால் ஓட்டப்படும் காற்றுக்கப்பலை முதன்முதலில் வானிற் செலுத்தினர். அது இருபத்தைந்து பவுண்டு நிறை

தான் உடையதாக இருந்தது. அது ஒரு நீராவி இயந்திரத்தால் ஓட்டப்பெற்றது. அது காற்றில் சிறிது தூரம் போய் நீராவி நின்றவுடன் செலுத்துங் கருவி வேலை செய்யாமையால் கீழே விரைவில் இறங்கி விட்டது. பின்னர் 1903-ல் 125 பவுண்டு நிறையுள்ள ஒரு விமானத்தையுண்டாக்கி அதைச்செலுத்த முயன்ற காலத்தில் செலுத்துங் கருவியில் ஏதோ தப்பு ஏற்பட்டு, அது அருகிலுள்ள நதியில் விழுந்து விட்டது. Longley அதற்குப் பின் வேறு முயற்சி செய்யவில்லை. ஆனால் அவருடைய மாணவர்கள் 1914-ல் அவருடைய காற்றுக்கப்பலைக்காற்றிற் செல்லும்படி செய்தனர். ஏனெனில், அதற்கு முன்பாகவே அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் Wilber Wright, Orville Wright என்னு மிரண்டு சகோதரர்கள் Bicycle கடை வைத்துக்கொண்டிருந்த காலத்தில் காற்றுக்கப்பலைப்பற்றிய எல்லா நூல்களையுங் கற்றுப் பரிசோதனைகள் பல செய்தனர். ஒரு காட்டிற்குள்போயிருந்து தங்கள் பணத்தையெல்லாம் செலவழித்துச் சரியான வான வூர்தியைச் சித்தஞ் செய்வதிற் கைதேர்ந்தனர். மோட்டார் வண்டிக்கு பெட்ரோலை உபயோகப்படுத்துவதுபோலக் காற்றுக் கப்பலுக்கும் பெட்ரோலை உபயோகப்படுத்த வேண்டுமென்று துணிந்தனர். 17-12-1903-ல் தாங்கள் செய்த வான வூர்தியைத் தங்களில் ஒருவரோ

செலுத்தி வெற்றி பெற்றனர். பின்னர் அவர்கள் ஐரோப்பாவிற்கு வந்து அதனை நன்றாகச் செலுத்திக் காட்டினர். அதற்குப்பின் மான்சல் (Manzelle) என்னும் நகரத்திற் பிறந்து Count Ferdinand Zeppalin என்பவர் பெரியகாற்றுக் கப்பல்கள் செய்யுமுறையைக் கண்டுபிடித்து அவற்றைப்பெருகச்செய்தனர். பின்னர் நாளடைவில் இத்தொழிலானது பலபட விரிந்து, இப்போது 42 பேர் தங்கும்படியான பெரிய காற்றுக் கப்பல்கள் செய்யப் படுகின்றனவென்று தெரிகிறது. இந்தியாவில் கராச்சியிலிருந்து சீமைக்குத் தபால்கள் காற்றுக்கப்பல்களில் போகின்றன. மனிதர்களும் உலகெங்கும் காற்றுக்கப்பல்களில் யாத்திரை செய்கின்றனர். வருங்காலத்தில் மற்றவூர்திகளைப்பார்க்கிலும் இதுவே பெரிதாப்பயன்படும்போலும்.

Tamil Blooms.

History of Tamil Culture.

Before proceeding to deal with the history of Tamil Culture, it appears necessary to sketch the course of western thought on culture in general, by way of a brief introduction to the subject in question. The term 'culture' literally means 'cultivation'. Just as the cultivation of land adapts it to the retention and growth of seeds and plants, the training of the human faculties is essential for the maintenance and progress of human life on earth. If cultivation turns the productive powers of the soil to the best account, the development of human thought and activity serves to bring out the best in man. Thus, culture implies purposive adaption and comprehensive Evolution.

A study of this with respect to any human society is connected with an investigation of its environment, and this ultimately leads to the question. When did man begin his life on earth? This planet is viewed as

a tiny particle detached from the Sun many millions of years ago, and its crust took an inconsiderable period of time to cool down and become habitable for any living being. It was only after the formation of seas that life began to dawn on earth, and there have since been mighty changes of land and water, which the geologists have grouped into three great schemes of oceans and continents succeeding one another at long intervals of geological history.

Their ideas bring to our mind a few lines in the ancient classic of பரிபாடல், which say that before becoming tenantable, the world had to pass through ages of ethereal, gaseous, fiery, liquid and solid evolution.

மதியொ......
......மாயிற்ருசப்
“பசும்பொன் னுலகமு மண்ணும் பாழ்பட
விசும்பி லூழி யூழூழ் செல்லக்
கருவளர் வானத் திசையிற் றோன்றி
உருவறி வாரா வொன்ற னூழியும்
முந்துவளி கிளர்ந்த உறையூ ழூழியும்

செந்தீச் சுடரிய ஊழியு மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கியார் தருபு
மீண்டும் பீடுயர் பீண்டியவற்றிற்கும்
உள்ளீ டாகிய இருநிலத் தூழியும் "

The study of fossils in stratified rocks has enabled geologists to distinguish five main epochs in the primasy 'phase' of the Earth's crust called cambrian, Siluvan, Deromian, Carboniferous and Permian, after the sites of rocks concerned. This order is according to the order of precedence in time of the layers of rock in the respective places. Similarly, the secondary 'phase' is divided into Triassic, Jurassic, and Cretaceious periods and the Tertiary age, into eocene, oligocene, miocene, Plicene and Pleistocene times. Although at the end of the last age, the Earth for the most part attained its present configuration, the variation of climatic conditions was a potent factor in the post-Pleistocene period. Owing to the prevalence of glacial epochs in the northern hemisphere, and of Pluvial ages in the

southern, with long intervals between every two of such periods. If man may have originated in pliocene or pleistocene times, human culture has without a break been developing since the close of the Ice age about 50,000 years ago.

Palaeontologists tell us that during the Palaeozoic age, life evolved itself in the shape of simple plants, skulless animals, shell-fish, sea scorpions and amphibia. The Mesozoic age which followed it was one of great reptiles, the largest among which were herbivorous. Mountains were bare and lifeless, and reptiles showed a tendency to develop into birds. In the Cainozoic period corresponding to the Eocene epoch of the Tertiary age, mammals raised their heads and the elephant began to appear as snouted creatures in North Africa.

(To be contd.)

Life of Saint Kumarakurupara.

In the history of the Tamil country whenever the light of the Saiva Siddhantha Religion faded and flickered in the gale of alien creeds, some great saint or sage appeared in the land trimmed it up and made it burn bright. After the days of saint Meikandar, the mightiest exponent of Saiva Siddhantha Philosophy, Saivism suffered a decline during the Muhammadan invasion and the rule of the Naiks of Madura, when the creeds of Islam, Vaishnavaism and Ekathmavadham received the patronage of princes, it was glowing only in the cloisters of Saiva monasteries without shedding its light among the Saivite Public of the land. Just then early in the seventeenth century appeared in the Pandian Kingdom the great spiritual luminary called Saint Kumarakurupara who propagated most effectively the tenets of the Saiva Siddhantha Religion from Cape Comorin to the foot of the Himalayas.

Saint Kumarakuruparar came of a very high Saiva Vellala family at Srivaikundam a town situated midway between Tinnevelly and Trichendur. His father was poet Shanmukasikamani and his mother Sivakami, both of them regarded their gifted son as a boon bestowed upon them by God Subrahmanya of Trichendur. As if it was not willing to open its mouth save before the deity, the early child seemed to be dumb till it attained its fifth year, and this aggreived its parents very deeply. They took it to the Divine presence at Trichendur and prayed to God for the cure of the defect. They persistently stayed in the portico of the temple for several days.

One night the beautiful vision of God Murugan was apparent to the eye of boy saint who opened his lips in praise of the Almighty and gave birth to the beautiful little philosophical poem named Kandarkalivenba (கந்தர் கலி வெண்பா). The child was addressed Kurupara by the divine voice. The parents of

the saint who witnessed the incident, were filled with untold joy and astonishment and from that day called the sage Kumarakuru-para as they esteemed him as a precious gift of God Kumara. From that moment the saint viewed himself as a son of God and began to devote his life to the cause of literary and spiritual advancement. He stayed for sometime in his native village and composed spiritual poems for God Siva, one of which is styled Kailaikalambakam only a fragment of which consisting of eight stanzas being available now. The name of his native village appears in the poem.

As days passed by, the boy saint under-took a pilgrimage to all the important Saivite shrines in the district and at the end of his travel arrived at Madura where the famous Thirumalai Naykar whose pala-tial mansion attests his glory even today, was then ruling.

The saint was accorded a hearty welcome by the devotees of the city and he put up

in a Saivite mutt. During his stay there, he dedicated a fine poem to the Divine mother Meenakshi called Meenakshi Amman Pillai Tamil wherein the Goddess was portrayed as if she were the divine daughter of the Pandian king passing through the various stages of her infancy. Thirumalai Nayakar apprised of the greatness of the saint and the excellence of the poem, wished to celebrate the reading of the poem in the front hall of Sri Meenakshi Temple. The poet agreed to it and he began the exposition of his inimitable work on a good day before a large audience in the temple.

In the course of his lecture it is related that one day Goddess Meenakshi took the guise of the Archaka's daughter, entered the assembly, seated herself on the lap of Thirumalai Naik, removed the pearl rosary from his neck and threw it on the shoulders of the poet and suddenly diappeared to the surprise and ecstasy of the ruler and the rest of all the audience.

To be contd.)

திருநெல்வேலி,

மணிவாசக மன்றத்திற் கிடைக்கும்

கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., M. L.,

எழுதிய

அரிய ஆராய்ச்சி நூல்கள்.

(1st 21 books Approved by the Text-Book Committee)

	WRAPPER.
திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரம்	1 4 0
கலிக்கோ 1 10 0	
திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரம்	0 14 0
கலிகோ 1 4 0	
சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்	1 2 0
கலிக்கோ 1 8 0	
மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்	0 14 0
கலிக்கோ 1 4 0	
சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம்	1 0 0
கலிக்கோ 1 6 0	
சந்தானச்சாரியார் சரித்திரம்	0 8 0
Revised Edition 1 8 0, கலிக்கோ 1 0 0	
அறிவு விளக்கவாசகம்	0 6 0

தாயுமானவர் வரலாறும், நூலாராய்ச்சியும்	1	0	0
பட்டினத்தடிகள் ,, ,,	1	0	0
குமரகுருபரர் ,, ,,	1	0	0
சிவஞான முனிவர் ,, ,,	1	0	0
மெய்கண்டாரும், சிவஞானபோதமும்	1	0	0
தமிழ் இலக்கிய வரலாறு	2	8	0
திருவாசகப் பொழிப்புரை	3	0	0
திருக்குறள் பொழிப்புரை	0	14	0
Revised Edition 1 8 0. கலிக்கோ	1	4	0
இந்து சமயங்களின் சுருக்க வரலாறு	0	3	0
சைவசித்தாந்த விளக்கச்சுருக்கம்	0	1	0
சைவ சித்தாந்த உண்மை வரலாறு	0	3	0
திருஞான சம்பந்தர் தேவார இயற்கைப் பொருளழகு	0	4	0
முருகன் பெருமை	0	3	0
செகப்பிரியர் (Shakespeare) வரலாறும் இரட்டைப் பிள்ளைகளின் திகைப்பு விநோதமும் (Comedy of Errors)	0	4	4

சைவச்சடங்கு விளக்கம்	0	4	0
Metaphysics of the Saiva Siddhanta System	0	8	0
A short sketch of the Hindu Religions	0	2	0
A note on the Hindu Religious Endowments Bill (Out of Print)	0	8	0

Principles of Criminology with special reference to their application in India.	12	0	0
Lectures on the Indian Penal Code	6	0	0

மணிமாலையின் முன் தொகுதி விலை ரூபா ஒன்று.

தனிப்பிரதிகளின் விலை பின் வருமாறு;—

சரித மாலை (*செகப்பிரியரின் வரலாறும், நாடகக்கதைகளும் அடங்கியது*)	0	4	0
இலக்கிய மாலை. *சைவச்சடங்கு விளக்கம்*	0	4	0
இந்தியச் சட்டக் கோவை. (*பதிவுகட்டம், இந்திய தண்டனைத்தொகுதி*)	0	4	0
உலகியல் மாலை. (*உடல் நூல், நோய் நீக்கம்*)	0	4	0
Tamil Blooms (*Nature in Thevaram and Ancient Tamil Scripture*)	0	4	0
ஆண்டாள் வரலாறு.	0	2	0
	1	6	0

தமிழிலக்கிய வரலாறு.

இந் நூலின் இரண்டாம் பதிப்பு தை மாதத்தில் வெளியிடப்பெறும்.

இதன் விலை ரூ. 2

முன்பணம் அனுப்புவோருக்கு பிரதி விலை 1—8—0

திருக்குறட் பொழிப்புரை.

இதன் இரண்டாம் பதிப்பு செவ்விய முறையில் விரைவில் அச்சிட்டு வெளியிடப்பெறும்.

அதன் விலை ரூ. 1—4—0

முன் பணமனுப்புவோருக்கு பிரதி விலை ரூ. 1.

பின் வரும் புத்தகங்கள் நேராகவோ, தபால் மூலமோ மூன்று பிரதிகளுக்குக்குறையாமல் 28-2-35-க்குள் வாங்குகிறவர்களுக்கு 25 %| கமிஷன் (கழிவு) கொடுக்கப்படும்.

---

(1) திருவாசகப் பொழிப்புரை.

இது திருவாசக முழுவதற்கும் இது வரையும் வெளிவராத தெளிவான பொழிப்புரை யாகும். 511 பக்கங்கொண்டுள்ளது. இதன் விலை ரூ. 3.

---

(2) மெய்கண்டாரும், சிவஞானபோதமும்.

இதன் கண் சைவ சித்தாந்த முதற் பேராசிரியராகிய மெய்கண்டாரையும், சைவ சித்தாந்த முதல் நூலாகிய சிவஞான போதத்தையும் பற்றி அறிந்து

கொள்ள வேண்டிய எல்லாம் உள்ளன. மெய்கண்டார் வரலாறு, வரலாற்றாராய்ச்சி, சிவஞானபோத முதநூலாதற்காரணம், சிவஞான பாடிய சாரம், சிவஞான போதத்திற்குத் தெளிவான பொழிப்புரை, குறிப்புரை என்னுமிவைகள் இந்நூலின் பகுதிகளாகும்.

விலை ரூபா 1.

சிவஞான முனிவர் வரலாறும், நூலாராய்ச்சியும்.

திராவிடமாபாடிய கர்த்தராகிய இவரது வரலாறும், இவர் செய்த அரிய நூல்களின் ஆராய்ச்சியும் இதன்கண் உள்ளன. இந்நூல் சிவஞான போதங் கற்கும் யாவர் கையிலும் இருத்தற்குரியது. ஸ்மார்த்த மதத்திற்குச் சங்கராச்சாரியரும், வைணவத்திற்கு இராமானுஜரும் பாடிய கர்த்தாக்கள் ஆதல் போல சைவ சித்தாந்த மத பாடிய கர்த்தா இவரேயாவர். இவர் சரித்திரத்தைத் தமிழிலும் சைவத்திலும் பற்றுடைய யாவரும் வாங்கி வாசித்தல் கடமையாகும்.

விலை ரூபா 1.

தாயுமானவர் வரலாறும், நூலாராய்ச்சியும்.

இதன்கண் தாயுமானப் பெருந்தகையாரின் கால

மும், வரலாற்றாராய்ச்சியும், நூலாராய்ச்சியும் அன்னூர் சமயங்களைப்பற்றியும், சரியை, கிரியை, யோகம், ஞானங்களைப்பற்றியும், அத்துவிதம், மனம், சித்தர், கணம் என்பவற்றைப்பற்றியும், அடியார் பெருமை, தமிழ்ச் சிறப்பு முதலியவற்றைப் பற்றியுமியம்பிய அரிய கருத்துக்களும் யாவர்க்கும் விளங்கும் எளிய நடையில் தெளிவாக வகுத்தோதப் பட்டுள்ளன. இது 227 பக்கங்கொண்டுள்ளது.

இதன் விலை ரூபா ஒன்று.

குமரகுருபரர் வரலாறும், நூலாராய்ச்சியும்.

சுமார் முந்நூறாண்டுகளுக்கு முன்னே குமரி முதல் இமயம் வரை சைவ சித்தாந்தத்தின் பெருமையைத் தமது அரிய அற்புதச் செயல்களால் நிலைகாட்டிய திருவருட்பெருந்தகையாராகிய குமரகுருபர அடிகளின் வரலாற்றையும், அதன் நுட்பங்களையும் அவர்களியற்றியருளிய செந்தமிழ்ப் பிரபந்தத்தின் சாரத்தையும், நயத்தையுந் தெளிவாக விளக்கும் இந்நூலானது தமிழ் மாணவரால் பெரிதும் போற்றற்பாலது. இதன் விலை ரூபா ஒன்று.

பட்டினத்தடிகள் வரலாறும், நூலாராய்ச்சியும்.

இதனைப் பற்றி 6—7—31ல் வெளி வந்த சிவநேசன் இதழில்கண்ட மதிப்புரையின் சில பகுதிகள் வருமாறு:—

இதில் காவிரிப்பூம்பட்டினச் சிறப்பு, அடிகள், பிறப்பு, வளர்ப்பு, வீடுபேறு, ஆதிய வரலாற்றுண்மை, ஆறொழுகுமாறு மொழுமொழுவெனச் செவ்விய வோசை கெழுமிய சொல்லணி பொருளணிதுறுமிய செஞ்சொற்றொடர்களால் வரையப்பட்டுள்ளது. அடிகள் நிலவுலகில் நிலவிய காலம் சிறந்த பல வேதுக்களால் வரையறுக்கப்பெற்றிருக்கிறது.

அடிகள் அருளிய கோயில் நான்மணி மாலை முதலிய ஐந்து அறிவு நூல்களிற் பொதுளிய நுண்பொருள்களனைத்தையும், ஒரு சேரத்திரட்டி, சைவ சித்தாந்த செந்நெறி பற்றி, உலகு உயிர் கட்டு என்னும் முத்திறத்துள் இயைத்துக்காட்டி யினிதுவிளக்குதல், பிள்ளையவர்கட்கே இயல்பாக அமைந்துள்ள பேரறிவாற்றலாகும்.

பன்முறை படிக்கினும் இந்நூலின் தனித்தமிழ் நடையழகு, தெவிட்டாத்தண்ணமிர்தசாரமாயுள்ளது. இந்நூலின் ஈற்றில் அடிகளது ஐந்து நூல்களின் மூல பாடங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா ஒன்று.
